இந்திய வாழ்க்கையும் மார்க்ஸியமும்

விவாதத்திற்கான சில முன்னுரைகள்

ஞானி



இந்திய வாழ்க்கையும் மார்க்ஸியமும்

ஒரு விவாதத்திற்கான முன்னுரை

ஞானி

முன்னுரை

காலந்தாழ்த்தியே
ஒரு முன்னுரைக்குள்
பிரவேசிக்கின்றோம்

அறிவன்

இந்தியாவில் மார்க்சியம் அறிமுகப் படுத்தப்பட்டு பல பத்தாண்டுகள் கடந்து சென்றுவிட்டன. ஆயினும் இந்திய சமுதாயத்தைத் தனது நோக்கில் மாற்றியமைப்பதில் மார்க்சியம் இதுவரை குறிப்பிடத்தக்க சாதனை எதையும் பெறவில்லை. ஒரு வளமான தத்துவமும் நடை முறையுமான மார்க்சியம் ஏன் இம்மண்ணில் வெற்றி காணவில்லை என்பது நமக்கு ஆத்மார்த்தமாக எழுகின்ற கேள்வியாகும்.

இக்கேள்விக்கு விடையாக நாம் ஒன்றை உறுதியாகக் கூறமுடியும். அதாவது, மார்க்சியம் இன்னும் இந்திய மய மாகவில்லை. இன்னும் ரஷ்யமய மார்க்சியம், சீனமயமார்க் சியம் ஆகியவையே இந்தியப் பொதுவுடமை இயக்கத்தில்,

ஆதிக்கம் செலுத்துகின்றன. உலகு தழுவிய உண்மையான மார்க்சீயத்தை இப்படி ரஷ்ய மயமான ஒன்று, சீனமயமான ஒன்று என்று வகைப்படுத்துவதை மரபு வழிப்பட்ட மார்க்சீய வாதிகள் ஆட்சேபிக்கக் கூடும். ஆயினும் பொதுவுடமைக் கான புரட்சிகள் நடத்தப்பெற்ற இந்நாடுகளின் வழியாக வந்த மார்க்சீய விளக்கங்களைத் தவிர, வேறு வகையில் தாமாகவே புரிந்து விளங்கிக் கொண்ட, அதன் காரணமாக இந்தியக் கலாச்சார, வரலாற்றுப் போக்குகளுக்கு உகந்த வகையில் மார்க்சீய மெய்ஞானத்தை வளர்த்துக் கொண்ட நிலைமை இங்கு இல்லை என்பதை அவர்கள் மறுக்க முடியாது. உலகு தழுவிய ஒன்று, குறிப்பிட்ட ஒன்றின் வாயிலாகவே இயங்க முடியும் என்பதை அவர்களால் மறக்க முடியாது. எனவே மூலாதாரமாக நம்மால் வளர்த்துக் கொள்ளமுடியாத ஒன்றைப் பற்றிய பிரச்சினையே இன்றும் நமக்கு அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது.

இந்திய சமுதாயத்தைத் திட்டவட்டமாகத் தீர்மானிக்கும் முறையில் அதன் நெடுங்கால வரலாறு பற்றிய சரியான மார்க்சியக் கணிப்புகளையும் நாம் உருவாக்கவில்லை. இந்தியாவிற்கே உரிய சமயங்கள், கலாச்சாரம், கலை, இலக்கியம், மக்களின் மனோபாவம் பற்றிய அக்கறையை நாம் இதுவரை காட்டவில்லை. பல சமயங்களில் இந்தியாவின் வரலாறு முதலியவைகளை நாம் தனித்தனியாக ஆராய்வதிலுள்ள சிரமங்களை ஏற்காமல், ஏற்கனவே ஐரோப்பிய சமுதாயங்களில் ஏற்பட்டு வந்த மாறுதல்களைப் பற்றிய மார்க்சிய ஆய்வை இங்கு நாம் வறட்டுச் சூத்திரமாகப் பிரயோகித்து வந்தோம். சரியான வர்க்க ஆய்வுகள் நடத்தப்படவில்லை என்பதோடு, சாதி அமைப்பு என்பது வர்க்கப் பிரிவுகளின் மீது எவ்வாறு அழுத்தமான முத்திரையாகப் பதிக்கப்பட்டுள்ளது என்பதையும் ஆராயத் தவறினோம். இத்துறையில் இந்தியாவில் நடத்தப்பட்ட ஆய்வுகள், இதுவரை பொதுவுடமை இயக்கத்துக்கு அப்பாற்பட்ட அறிஞர்களாலேயே நடத்தப்பட்டுள்ளன. அவற்றிலிருந்தும் கூட தேவையான அறிவைப் பெறுவதற்கும் நாம் முயலவில்லை.

இந்தியாவின் பழைய வரலாறுபற்றி நமக்கு கணிப்பு இல்லை என்பது ஒரு புறமிருக்க, இந்த இருபதாம் நூற்றுண்டுச் சூழலில் வெள்ளேயருக்கெதிராக இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்கள், அவற்றில் நமது பங்குபற்றிக் கூட நமக்குச் சரியான கணிப்பு இருந்ததில்லை. இந்திய சுதந்திரம், காந்தியடிகளின் பங்கு முதலிய பிரச்சனேகளில்கூட நம்மிடையே பல வகையான கருத்துக்கள் இருக்கின்றன. பல சமயங்களில் ரஷ்யாவிலோ, பிற நாடுகளிலோ சொல்லப்பட்ட கருத்துக்களே நாம் மகிழ்ச்சியோடு ஏற்று, இங்கு தேவவாக்குகளாக ஒலிபரப்பி இருக்கின்றோம். மார்க்சீயத்தை இந்தியமயப்படுத்துவது என்பது கூட, இந்தியாவில் நிலவிய நிலவுடைமைமுறைக்கு மார்க்சீயத்தைப் பலியாக்கி விடுவதாகும் என்று நாம் அஞ்சினேம். இந்தியாவின் முன்னேய வரலாற்றிலிருந்து அடியோடு நம்மைத் துண்டித்துக் கொண்டு, நேரடியாக ஒரு புதிய உலகினுள் பிரவேசித்து விடுவதைப்பற்றியே நாம் அதிகமாகக் கனவு கண்டு கொண்டிருந்தோம். இதனுல் பல சமயங்களில் இந்திய மக்கள் நம்மை ஏற்றுக் கொள்ளவில்லை.

மார்க்சீயத்தை நாம் தொழிலாளர்கள் மத்தியில் தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தினேம். ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் அவர்களேயாவது மார்க்சீயம் முற்றிலும் கவர்ந்ததா என்ற கேள்வி ஒரு புறமிருக்க, உழவர்கள் மத்தியிலும் படித்தவர்கள் மத்தியிலும் நாம் மார்க்சீயத்தைச் சரிவரக் கொண்டு செல்லவில்லை. தொழிலாளி வர்க்கம்தான் மார்க்சீயத்தைச் செயல் படுத்துவதற்கான முன்னணிப்படை என்ற சூத்திரத்தை மட்டுமே நாம் நம்பி இவ்வாறு செயல் பட்டோம். தொழிலாளர்கள் மத்தியிலும், மார்க்சீயத்தை ஒரு பொருளாதாரக் கோட்பாடாகவே நாம் விளக்கினேம். தொழிற்சங்கமே மார்க்சீய வாதிகளுக்குரிய முதன்மையான அரங்கு போலக் கருதினேம். கூலி உயர்வுக்கும், வேலே நிரந்தரத்திற்கும், போனஸ் பெறுவதற்குமான நடை முறைகளேயே, தொழிற்சங்க இயக்கமாக்கினேம். இவற்றுல்

மார்க்சீயம் பழுது பட்டுப் போவதை நாம் அடிக்கடி உணர்ந்தும், உணராதவர்களைப் போலவே நடந்து கொண்டோம். தொழிற்சங்க நடைமுறையை இவ்வாறு மட்டுமே நாம் நடத்தியதால், இந்த நடை முறைகளை இன்னும் பக்குவமாக ஆளும் வர்க்கத்துக்கு அனுசரணையாக நடத்துவதில் கைதேர்ந்தவர்கள் உள்ளும் வெளியிலும் தோன்றினர்கள். மாற்றுக் கட்சிகள் நடத்தும் தொழிற்சங்க இயக்கத்தைவிடப் பலமான இயக்கத்தை நம்மால் நடத்த முடியவில்லை.

ஒவ்வொருநாட்டின் குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தையும், அந்த வரலாற்றுக் கட்டத்திற்குரிய பொருளியல்நிலைமைகளையும், இவற்ருேடு, அந்த நாட்டிற்கேயுரிய, ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டததுக்கும்உரிய பிரச்சினைகளை, விஞ்ஞானக் கண்ணேட்டத்தில் ஆராய்வதிலும், பிரச்சினைகளின் தீர்வுக்கு உரியவர்களை இயக்குவதிலும், பிரச்சினைகளைச் சரியான நடைமுறைகளைக் கொண்டு தீர்ப்பதிலும் மார்க்சீயம், பிற தத்துவங்கள் நடைமுறைகளைவிட வளமாக முன் நிற்கிறது. இதை நாம் ஒப்புக் கொள்ளும்பொழுது, இந்தியாவிற்கேயுரிய, அத்துடன் தமிழ் நாட்டிற்கேயுரிய பிரச்சினைகளின் மீது நாம் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

இந்தியாவின் முதல் நாகரீகம் ஆரிய நாகரீகமா திராவிட நாகரீகமா அல்லது வேறு ஒன்ரு அல்லது இரண்டின் கலப்பா என்பதில் நமக்குத்திட்டமான கருத்து இருந்திருக்க வேண்டும். இந்தியாவின் மொழிப் பிரச்சினையில், நாம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப எடுத்த முடிவுகளைத் தவிர்த்திருக்க வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழர் நாகரீகத்திற்கென தனித் தன்மைகள் இருந்தனவா? இல்லையா? என்ற ஆய்வை நாம் புறக்கணித்திருக்கக் கூடாது. பொருளாதாரப் பிரச்சினைகளுக்கே முதன்மை தருவதாக நாம் கூறிக் கொண்டு இனம், தேசீயம், மொழி, கலாச்சாரம் ஆகிய பிரச்சினைகளை வெகுவாகப் புறக்கணித்தோம். திராவிட முன்னேற்றக்கழகம் நாம் புறக்கணித்த பிரச்சினைகளையே தனக்கு முழுமையான பிரச்சினைகளாகக் கொண்டு வளர்ந்ததை

நாம் மதிக்கத் தவறினோம். நாம் கொள்ளும் இந்தியப் பார்வைக்குத் தமிழகப் பார்வையை முற்றிலும் மாறானதாகவே கருதினோம். மனித இயல்பான இப்பண்புகளைக் கூட நாம் புறமொதுக்கி, வறட்டுத்தனமான முறையிலேயே மக்களைத் தொடர்ந்து அணுகினோம். சமயம் மரபுவழிப் பண்பாடு போன்றவற்றில் நமது நிலைபாடு பல சமயங்களில் திராவிடர் கழகத்தினரின் வறட்டு நாத்திக நிலைபாட்டுக்கு நெருங்கியதாகவே இருந்து வந்துள்ளது.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது, நாம் குறிப்பாக சில உண்மைகளை ஒப்புக் கொண்டு விட முடியும். நாம் சரியான மார்க்சீய வாதிகளாக இல்லை. மார்க்சீயத்தை நாம் சரிவரக் கற்றுக் கொள்ளவில்லை. மார்க்சீயத்தின் ஆதார நூல்களைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாது. பல்வேறு நாடுகளில் நடைபெற்ற புரட்சிகரப் போராட்டங்கள் நடைமுறைகள் பற்றி நாம் கற்றறிந்து கொள்ளவில்லை. நம்மைப் பற்றி நமக்கே ஒரு சுய விமர்சனப் பார்வையை நாம் பழகிக் கொள்ளவில்லை. மார்க்சீய வாதிகளை மற்றவர்கள் அவதூறுபடுத்தி அழித்துவிட முனைவதைப் போலவே, நாமும் அவதூறு படுத்துவதைச் செய்து வருகின்றோம். நமக்குள் மாறுபட்ட கருத்துடையவர்களோடு நாம் பொறுமையாக விவாதிக்கத் தயாராக இல்லை. அவ்வாறு விவாதிக்கும்போது நமக்குள் இருக்கும் வேறுபாடுகளை எதிரி வர்க்கத்தவர் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கூறியே நமக்குள் விவாதங்கள் நடைபெறுமல் அமுக்கிக் கொண்டிருக்கின்றோம். வர்க்கப் பார்வை என்பதை நமக்குள்ளே பழிதீர்த்துக் கொள்வதற்குக் கூட ஒரு கருவியாக்கியிருக்கிறோம். சீரழிந்திருக்கின்ற இந்தச் சமுதாயத்தின் கேவலமான குணங்களால் நாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். இவற்றை வெல்லவல்ல ஆன்மீக பலத்தை நாம் மார்க்சீயத்தின் பகுதியாக்கிக் கொள்ளவில்லை.

இவ்வாறு நாம் விமர்சனம் செய்யும்பொழுது ஒரு சில உண்மைகளை நாம் மறந்துவிடவேயில்லை. ஆளும் வர்க்கம் நம்மை அடக்குவதற்காகக் கடுமையான நடவடிக்கைகளைத்

தொடர்ந்து பல்லாண்டுகளாக மேற்கொண்டதை நாம் மறந்துவிட முடியாது. பல சமயங்களில் நமது கொள்கை களையும், நடைமுறைகளையும் திரித்தும், புரட்டியும்பிரச்சாரம் செய்து, மக்களின் முன் நம்மைக் கேவலப் படுத்தியதை நாம் மறந்து விட முடியாது. பல சமயங்களில் நமது மொழியி லேயே பேசி, மக்களை அவர்கள் தம்பால் கவர்ந்துமிருக் கிருர்கள். நமக்குள் பிரிவினைகளை ஏற்படுத்தி அவர்கள் வெற்றி பெறவும் முயன்றிருக்கிருர்கள். இவ்வாருன முறை களிலெல்லாம் நம்மை, நமது பலத்தை, அவர்கள் குறைத் திருப்பதும் உண்மைதான். இவை தவிர, மார்க்சீய முறை யில் இந்திய வரலாறு, பொருளாதாரம், கலாச்சாரம், கலை, இலக்கியங்கள் முதலியவற்றை ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்ந்து தெளிவதற்கான கல்வி மேம்பாட்டை நாம் பெருத தோடு, நாம் பெறுவதற்கும் ஆளும் வர்க்கத்தின் நடை முறைகள் தடையாக இருந்திருக்கின்றன.

இவ்வாறு ஆளும் வர்க்கம் நமக்குச் செய்த கேவலங்கள், அழிவுகள், தீமைகள் முதலியவை நமககு நேர்ந்த புற பாதிப்புகள் மட்டுமே. புறக்காரணிகளை நாம் எவ்வளவுதான் பட்டியல் போட்டுக் கொண்டாலும், அவை அகக் காரணி களுக்கு நிகராக முடியாது. அகக் காரணிகள் வழியே தான் புறக் காரணிகள் இயங்குகின்றன என்பது இயக்கவியல் விதி. இம் முறையில் நமது பலவீனத்திற்கான காரணத்தை நமக்குள்ளும், நமது நடைமுறையினுள்ளும், நமக்கும் மக்களுக்கும் உள்ள உறவினுள்ளும் தேடுவதே நேர்மை யான மார்க்சீய ஆய்வுமுறையாக இருக்க முடியும்.

இந்திய மார்க்சீயம் பற்றி நாம் பார்க்கும் பொழுது இவ் வாறு சில பிரச்சினைகள் எழவே செய்கின்றன. பிரச்சினை களின் ஆய்வில் நாம் ஒரு முன்னுரைப் பகுதியிலேயே நிற் கிறேம். இந்த முன்னுரை தொடர்வதிலேயே மார்க்சீயத்தின் வெற்றி இருக்க முடியும்.

நண்பர் ஞானி இந்த முன்னுரைக்குள்தான் அடக்க மாகப் பிரவேசிக்கிருர். இந்தியாவின் வர்க்க ஆய்வு, வர லாறு முதலிய பிரச்சினைகளை அவர் இந்த முன்னுரையில்

ஆய்வுக்கெடுத்துக் கொள்ளவில்லை. இந்தியாவின் கலாச் சாரம், குறிப்பாக மதம், கலை, இலக்கியம் ஆகிய துறைகளி லேயே தமது பார்வையைச் செலுத்துகிறுர். இது அவரே குறிப்பிடுவதுபோல, ஒரு விவாதத்திற்கான முன்னுரைதான். இப்பிரச்சினை எப்பொழுதுமே விவாதத்திலேயே இருக்க வேண்டும் என்று அவர் கருதுவதாக நாம் பொருள் படுத்திக் கொள்ள முடியாது. மார்க்சீயத்தை ஏற்பவர்களுக்கிடையில் ஒரு விரிவான விவாதம் நடைபெற வேண்டுமென்பதே அவர் நோக்கம்.

மார்க்சீயத்திற்கான வேர்களை அல்லது வித்துக்களை இந்தியாவிலேயே தேட வேண்டும் என்று ஞானி கருதுவதை நாம் ஏற்றுக் கொள்ளமுடியும். இந்தியாவில் நெடுங்காலமாக சமயத் துறையில்வழங்கிவரும் முக்தி, நிர்வாணம், இறைமை முதலிய கருத்துக்களுக்குச் சமயத்துறையைக் கடந்து சமு தாயவியலுக்குள் நுழைந்து புதியபொருள் காணுகிறுர். மேற்போக்காகப் பார்க்கும்பொழுது சமயக் கோட்பாட்டுக்கு ஞானி பலியாகிவிட்டார் என்று விவாதிப்பதைவிட, ஞானி யின் அணுகல் முறையிலுள்ள புதிய அம்சம் நம்மைக் கவர் கிறது. மார்க்சீயத்தை வெறும் மொழிபெயர்க்கப்பட்ட வாய்ப்பாடாகவே கேட்டுவரும் இந்தியனுக்கு ஞானியின் குரல் அவனுடைய இதயத்தைத் தொடும் போலத் தெரிகிறது. ஒரு வகையில் ஞானியின் கருத்துக்கள் அறவே மறுக்கப்பட்டு வளமான இன்னெரு கருத்து நமக்குள் தோன்றுமாளுல் அதை அவரும் இகழ்ந்துவிட முடியாது. மார்க்சீயத்தை இந்திய மயப்படுத்தும் முயற்சியில் நூற்றுக் கணக்கானவர் ஈடுபடவேண்டும். அதற்கான ஒரு தூண்டுதலை இந்த நூல் தருமானல் அதுவே இந்த நூலின் வெற்றியாகிவிட முடியும். கேவலமான முறையில் அவதூறுகளைக் கிளப்புவதனலோ, வாய் மூடி மௌனியாக இருந்து புறக்கணிப்பதனலோ நாம் மார்க்சீயத்தைப் பெருமைப் படுத்திவிடமுடியாது. ஆகவே மார்க்சியத்தில் அக்கறையுடைய ஒவ்வொருவரும் தொடர்ந்து இந்தப் பிரச்சினையைச் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

1

மார்க்ஸியத்தை இன்றியமையாத காரணங்களுக்காக அல்லாமல் ஏற்க வேண்டாம்

இந்திய மக்களுக்கு முன் நாம் மார்க்ஸியத் தத்துவத்தை முன் வைக்கிறோம். இந்தத் தத்துவமும் இதன் அடிப்படையில் அமைந்த செயல் முறையும் இவர்கள் வாழ்வுக்குத் தேவை என்று நாம் கூறுகிறோம். இதுவரை இவர்கள் நடத்திய வாழ்க்கையே தொடர்ந்து நடைபெறுவதற்காக அல்லாமல், இந்த வாழ்க்கை தனது குறைபாடுகள் நீங்கி, இன்னும் உன்னத நிலையில் நடைபெற வேண்டும் என்பதற்காகவும் மக்கள் முன் மார்க்ஸியத்தை முன்வைக்கிறோம்.

இவ்வாறு நாம் மார்க்ஸியத்தை மக்கள் முன் வைக்கும் போது சில கேள்விகள் எழுகின்றன. இந்தக் கேள்விகள், நாம் மக்களை அணுகும்போது அவர்கள் கேட்கக் கூடியதாக இருக்கலாம். ஒருவேளை அவர்கள் நம்மைப் பார்த்துக் கேட்காமல்கூட இருந்து விடலாம். ஆனால் மக்கள் முன் செல்லும்போது நமக்குள்ளிருந்தே இக் கேள்விகள் நம்மை எதிர் கொள்ளுகின்றன. இந்தக் கேள்விகளுக்குத் தான் பதிலை நாம் நம்மிடம் கொண்டிருக்க வேண்டும். மக்களைவிட நாம் ஏதாவது ஒரு வகையில் மேலானவர்கள், நாம் மக்களுக்கு எதையாவது வழங்கியாக வேண்டும் என்ற கருணை மட்டுமே நம் மனத்தில் இருக்குமானல் ஒருவேளை இக்கேள்விகள் நம் முன் எழாமல்கூட இருந்துவிடக் கூடும். மக்கள் வாழ்வுக்கு மார்க்ஸீயம் தேவை என்பதை எடுத்துச் சொல்ல விரும்பும் நமக்கே மார்க்ஸீயம் ஏன் தேவைப் படுகிறது என்பதற்கான நியாயத்தை நமக்குள்ளே தேடிக் கொள்ளாமல் மக்கள் முன் செல்வது ஒரு வகையில் போலித் தனம் என்பதுடன், மக்களை மடையர்களாக நாம் கருதும் போக்கும் ஆகிவிடும். நம்மிடம் அறிவு நிறைந்து நமது தேவைக்கு மேல் ததும்பு கிறது என்பதற்காக நாம் மக்கள்மீது நமது அறிவைக் கொட்டக் கிளம்புவதும் நியாயமாகாது. மக்கள் வாழ்க்கை, பாவம் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறதே; இவர்களைக் கரை யேற்ற வேண்டும் என்ற தியாக மனப்பான்மையோடு கிளம்பு வதும் நியாயமாகாது. தியாகிகளாக நாம் ஆக வேண்டும் என்பதற்காக, நாம் மக்களை ஆடுகளாக்கி விடக்கூடாது. மார்க்ஸியம் என்ற காரியம் ஒரு வகையில் தீயில் இறங்கி நடக்கக் கூடிய காரியம்; தீயை விழுங்கிச் சீரணிக்கும் காரியம் ; இந்தச் செயலைத் தியாகிகள் தொடர்ந்து உறுதி யாக இருந்து சாதிப்பது நடக்காத காரியம். அல்லது இது சாத்தியமே என்றாலும், நாளடைவில் நாமும் பழைய காலத்துத் தியாகிகள் போல, நமக்கு உருவச் சிலைகளையோ எஜமானத்தையோ எதிர் பார்க்க மாட்டோம் என்பதற்கு என்ன நிச்சயம் இருக்கிறது?

ஆகவே நம்முன் எழும் ஒரு கூர்மையான கேள்வி: நமக்கே மார்க்ஸியம் ஏன் தேவைப்படுகிறது? நமக்கு ஏன் தேவை என்பதற்கான சரியான விடை நமக்குத் தெரிந்தால் தான், அதைச் சரியாக உண்மையாக எடுத்துச் செல்ல முடியும். நமக்கு ஒரு வகையில் தேவைப்படும் தத்துவம், பிற வகைகளில் மக்களுக்குத் தேவைப்படாமல் போகலாம். இந்தத் தனிக் காரணத்தில் நியாயம் இருப்பதை நாம் ஏற்றுக் கொள்ளும் அதே சமயத்தில், இதற்காக மற்றவர்களுக்கு மார்க்ஸியம் தேவைப்படவில்லை என்பதை நமக்கு நாமே அங்கீகரித்துக் கொள்வதே நேர்மையாக இருக்க முடியும். பெரும்பாலான மக்களின் பொதுவான காரணங்களுக்காக மட்டுமல்லாமல், தனிப்பட்ட ஒருவனுடைய சிறப்புக் காரணங் களுக்காக மார்க்ஸியம் தேவை என்று கூறுவதைப் பிறர் அங்கீகரிக்கக்கூட மறுக்கலாம். ஆனால் ஒன்றை நாம் உறுதியாக மேற்கொள்வோம். நமது வாழ்வுக்கு—அந்த வாழ்வு சமுதாயத்திலே ஓரப் பகுதியிலே நடைபெறுவதாக மற்றவர் கருதிய போதிலும்—நமது வாழ்வுக்குத் தேவைப் படாத மார்க்ஸியத்தை நாம் பிறருக்கு அதே காரணத்திற் காக எடுத்துரைப்பது நேர்மையற்ற செயலாகி விடும். இவ் வாறு நேர்மையற்ற முறையில் நாம் மக்களை அணுகுவோ மானல் நம்மைச் சந்தேகிப்பதற்குக்கூட இடமேற்பட்டுவிடும். நம்மை இவர்கள் சந்தேகிப்பதனுல் அல்லது ஒதுக்கி விடுவத னுல் நமக்கு ஏற்படும் நன்மை அல்லது தீமை ஒருபுறம் இருக்க, நாம் கூறிய காரணங்களுக்காக மார்க்ஸியம் மக்க ளுக்குத் தேவையில்லை என்பது, ஒரு நிலையில் மார்க்ஸியமே தமக்குத் தேவையில்லை; காரணம் அது ஒரு நேர்மையற்ற கோட்பாடு என்றும் மக்கள் கருதிவிடுவதற்கு இடம் ஏற்பட்டு விடும். நேர்மையற்ற முறையில்கூட மார்க்ஸியத்தை எடுத்துக் கூறுவதற்கு மார்கஸியம் இடம் தருமானல் அது மார்க்ஸியமாக இருக்க முடியாது. அதாவது இந்தச் சமுதா யத்தில் நேர்மையில்லை; நேர்மையைக் கடைப்பிடிக்க முடிய வில்லை; நேர்மையானதைப் பேச முடியவில்லை என்ற நிலையை மாற்றுவதற்குத்தான் ஒரு கோட்பாடு—ஒரு தத்துவம்

தேவைப்படுமே ஒழிய நேர்மையின்மையை ஏற்றுக் கொள் வதற்குப் புதியதொரு கோட்பாடு நமக்கோ மக்களுக்கோ தேவையில்லை என்பதை உறுதியாகக் கூறிவிடலாம்.

நாம் இவ்வளவும் சிந்திப்பதற்குக் காரணம், மார்க்ஸி யத்தை நாமோ, மற்றவரோ இன்றியமையாத காரணங் களுக்காக அல்லாமல், யாரும் ஏற்க வேண்டாம் என்பதற் காகத்தான். நாம் இவ்வாறு கூறும்போதே, இந்தச் சமுதா யத்தில் நம்மைப் போன்றவர், நம்மைப் போலவே வாழ்நிலை உடையவராக நாம் கருதும் பலர், மார்க்ஸியத்தை ஏற்க மறுக்கிறார்களே, இவர்களிடம் இத்தகைய மறுப்புக்கு ஏதாவது நியாயமான காரணம் இருக்கக் கூடும் என்பதையும் நாமே சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றியமையாத காரணங்களுக்காக மட்டுமே நாம் மார்க்ஸியத்தை ஏற்றோ மானால் நிச்சயம் இந்தத் தத்துவம் வளமானதாக, பலமான தாக இருக்க முடியும்; இந்தத் தத்துவத்தை செயல்படுத்து வதிலும் நாம் உறுதியுடையவர்களாக இருக்க முடியும். நிச்சயம் இந்நிலையில் மார்க்ஸியம் இந்தியாவில் செயல்படத் தொடங்கும்.

2

மார்க்ஸியம் நமது வாழ்க்கை எல்லைக்குள் தட்டுப்பட்ட ஒரு கோட்பாடு

நம்மை நாமே இவ்வாறு தெளிவுபடுத்திக் கொண்ட நிலையில், மக்களை நாம் அணுகும் போது, அல்லது நம்மை நாமே எதிர்கொள்ளும்போது நமக்கு முன் சில கேள்விகள் எழுவதாகக் கூறினோமே, அக்கேள்விகள் யாவை?

மக்கள் முன் நமக்குமுன் நாம் ஒரு புதிய தத்துவத்தை முன் வைப்பதானால், முற்றிலும் புதிதான ஒரு தத்துவத்தை முன் வைக்க முடியுமா? அதாவது இது நாள் வரை நமது வாழ்க்கையின் நடப்பிலோ அல்லது கனவிலோ கூடக் கண்டறியாத—முற்றிலும் புதியதான—ஒரு தத்துவத்தை

நம்மால் காண முடியுமா? இதுவரை நமது புலன்களுக்கோ, அறிவுக்கோ எட்டாத, நமது புலன்களில், அறிவில் பழக்கப் படாத ஒரு பொருளை அல்லது கருத்தை, நமது புலன்கள் நுகர முடியுமா? அறிவில் புலப்பட முடியுமா? கண் பார்வை இல்லாதவன் சூரியனைக் காண முடியாது. ஐவகைப் புலன் களுக்கு அகப்படாத பொருளொன்றைப் புலன்களால் அறிய முடியாது. அதுபோல மார்க்ஸியமும், இதுவரை நமது வாழ்க்கை வரையறைக்குள் அறவே இல்லாத ஒரு கோட் பாடாக இருக்குமானல் அதை நாம் அறிந்து கொள்ளக் கூடுமா? அத்தகைய ஒரு கோட்பாட்டை, நமக்குத் தேவை என்று கருதுவதற்கு ஏதாவது நியாயம் இருக்க முடியுமா? எழுதத் தெரியாத ஒருவன் பேனவை—உயர்ரகப் பேனவை விரும்ப முடியாது; படிக்கத் தெரியாதவன் உயர்வகை நூலை விரும்ப முடியாது.

அப்படியானல் மார்க்ஸியம் நமது வாழ்க்கை எல்லைக்குள் தட்டுப்பட்ட ஒரு கோட்பாடாகவே இருக்கக் கூடும்.

நமது வாழ்க்கை எல்லைக்குள் தட்டுப்பட்ட ஒரு கோட் பாடாக இல்லாமல், வாழ்க்கை எல்லைக்குள் ஏற்கனவே நிறைந்திருக்கும் ஒரு கோட்பாடாக மார்க்ஸியம் இருக்கு மானல், அந்த மார்க்ஸியம் இனிப் புதிதாக நமக்குத் தேவை யில்லை. ஆகவே நமக்கு ஒருகால் தட்டுப்பட்டு, மேன்மையான தென நாமே ரசித்து, அதை மேலும் துய்க்க வேண்டும், பெற வேண்டும், நம்மிடம் தங்க வைத்துக் கொள்ள வேண்டும். என்று நாமே ஆசைப்பட்டு, கனவு கண்ட ஒரு கோட்பாடாக மார்க்ஸியம் இருந்தாலொழிய அதை நாம் இன்றியமையாத தாக, புதியதாக ஏற்க முடியாது.

அப்படியானல் மார்க்ஸியம் நமது வாழ்க்கையில் எவ்வாறு தட்டுப்பட்டது? அதை நாம் விரும்பினேம், ஆசைப் பட்டோம், கனவு கண்டோம் என்பது உண்மைதானு? என்ற கேள்விகள் எழுகின்றன.

நமது வாழ்க்கை, நாம் என்று நாம் பேசி வரும் போது, நாம், நமது என்ற சொற்கள் எவற்றின் பொதுத் தன்மையைக் குறிக்கின்றன என்ற கேள்விக்கும் இடையில் பதில் தேவைப்படுகிறது.

இருவகைக் கேள்விகளுக்குமே ஒரு சேர விடை காண முடியும் என்று நம்புகிறேன். காரணம், நாம் வாழ்கிறோம், நாமாகத்தான் இருந்து வாழ்கிறோம். வாழ்வதனால் தான் நாம், நாமாக உணர்கிறோம். இருக்கும் வாழ்க்கை போதாமையால் தான், நாம் ஆசைப்படுகிறோம் ; கொஞ்சமாக இருப்பதைத் தான் அதிகமாகப் பெற ஆசைப்படுகிறோம் ; கனவு காண்கிறோம். நாம் வாழ்ந்து கொண்டும் இருக்கிறோம். வாழ்வு நமக்கு நிறைவும் தரவில்லை; இங்கிலையில் நாம் வாழாமலும் இருக்கிறோம்; வாழ்ந்தும் வாழாமலும் இருப்பது தான் நமக்குச் சிக்கலாகி விட்டது. வாழ்க்கை தெரிந்தும் தெரியாமலும் இருப்பதில் தான் சிக்கல் தோன்றி விட்டது. நான் மட்டுமே இந்த உலகில் இருந்தால், இந்தச் சிக்கல் தோன்றிக் கூட இராது. நாமாகப் பலர் இருப்பதனால் தான், பேசுகிறோம்; உறவாடுகிறோம்; சிந்திக்கிறோம். இதில் இன்பமும் இருக்கிறது; துன்பமும் ஏற்படுகிறது; நிறைவும் வருகிறது; குறையும் வருகிறது. இங்கிலை நமக்குப் போதவில்லை. நாம் மேலும் வாழ விரும்புகிறோம்; நாமாக விரும்புகிறோம்.

இந்தப் பிரச்சினைக்குள்தான் இன்றியமையாது நாம் விடை கண்டாக வேண்டும். இதற்குத் தான் மார்க்ஸியம் வந்தாக வேண்டும். இதற்குள் வராத மார்க்ஸியத்திற்கும் நமக்கும் இன்றியமையாத உறவு ஏற்பட வேண்டியது இல்லை.

3

வாழ்க்கை பற்றிய மகாபாரதம்

நாம் உயிர் வாழ்வதற்கு ஒவ்வொரு நாளும் பல செயல்களைச் செய்கிறோம். உண்ணுகிறோம் ; உடுத்துகிறோம்; தொழில்செய்கிறோம்; பலரோடு பழகுகிறோம்; பல இடங்களைப் பார்க்கிறோம்; குழந்தைகளுடன் கொஞ்சுகிறோம் ; இன்னும் பலவற்றைச் செய்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு நாளும் செய்யும் செயல்கள் சில நாட்களைப் பொறுத்தவரை கூடலாம்; சில நாட்களில் குறையலாம்; சில நாட்களில் நமது வாழ்க்கை ஏதோ ஒரு நிறைவைத் தொடுகிறது; சில நிகழ்ச்சிகளில் இருக்கும்போது ஒரு நிறைவை நம் வாழ்க்கை

அடைவதை உணர்கிறோம்; இன்னும் சில நாட்களில் சில வகை நிகழ்ச்சிகளின்போது, நமது வாழ்க்கை குறைவுடையது போலவும், ஒன்றுமே இல்லாத சூனியத்தில் இருப்பது போலவும் நாம் உணர்கிறோம். இத்தகைய மன நிலைகள் நமக்கு மாறி மாறி வருகின்றன. இந்நிகழ்ச்சிகளின் மூலம் வாழ்க்கையைச் சேகரித்துக்கொண்டிருப்பதாகவோ, இழந்து கொண்டிருப்பதாகவோ உணர்கிறோம். நிகழ்ச்சிகளின் ஊடே இருக்கும் போது, நிகழ்ச்சிகள் நம்மைக் கடந்து சென்று விட்டபோது, நமது நினைவை நாம் புரட்டிப் பார்த்துக் கொள்கிறோம்; சில பல காட்சிகள், கருத்துகள் விரிகின்றன.

இந்த வாழ்க்கை இப்படியே போய் விடுவதில்லை. சில சமயங்களில் இந்த வாழ்க்கை நமக்கு எதிராக நின்று கேள்விக் குறியாகி விடுகிறது. நாம் திகைத்துத் திடுக்கிட்டு நிற்கிறோம்.

நமக்கு உணவில்லாத போது உணவைத் தேடுவதே வாழ்க்கையாக இருந்தது ; உடையில்லாத போது உடையைத் தேடுவதே வாழ்க்கையாக இருந்தது ; இருக்க இடம் இல்லாத போது இடம் தேடுவது வாழ்க்கையாகி விட்டது. இது போல் கல்வி இல்லாத போது கல்வியைத் தேடுவதும், வேலை இல்லாத போது வேலையைத் தேடுவதும் வாழ்க்கையாகி விட்டது. கலையை அனுபவிக்க அலைவதும், அனுபவிப்பதும் வாழ்க்கையாகி விட்டது. வாழ்க்கையின் எல்லை இத்துடன் நின்று விடவில்லை. அல்லது உணவு முதலியவற்றைத் தேடி அலையும்போது அவற்றை மட்டும் நேரிடையாகத் தேடவும் பெறவும் முடியவில்லை. இடையில் எத்தனையோ நிறுவனங்கள் ; உறவு முறைகள்; விதிகள் ; கட்டுப்பாடுகள் ; அனுபவங்கள். இவற்றின் வழியே தான் வாழ்க்கையைத் தேட முடிந்தது. நிறுவன முறைகளில், உறவு முறைகளில், அனுபவ வகைகளில் ஆயிரம் வண்ணங்கள் ; வகைகள் ; இவை ஒன்றினுள்ளே இருக்கும் போதே இன்னொன்றைப் பற்றிய விருப்பங்கள் ; ஒன்று முடிந்த பின் இன்னொன்றைப் பற்றிய விருப்பங்கள் ; சில சமயங்களில் விருப்

பங்களே வேண்டாம் என்பது போன்ற விருப்பங்கள்; நோய்கள் நொடிகள்; அழகுகள்; ஆடம்பரங்கள்; ஆபத்துக்கள்; அல்லல்கள்; இழப்புக்கள்; ஏக்கங்கள்; இவற்றினூடே வாழ்க்கை; இவற்றைக் கடந்தும் வாழ்க்கை!

இதுதான் வாழ்க்கை என்று வரையறை செய்யும்போது, அந்த வரையறையை முறித்துக் கொண்டு ஓடுகிறது வாழ்க்கை! சில சமயம் இதுதான் வாழ்க்கையா என்று மயங்கித் திகைத்து நிற்கும் நிலைகள்!

வாழ்க்கை எல்லா வகையிலும் இருக்கிறது; எல்லா வகையைக் கடந்தும் இருக்கிறது; வருமானத்திற்கேற்ப, அனுபவத்திற்கேற்ப, கல்வியறிவிற்கேற்ப, ஆராய்ச்சிக்கேற்ப, அழகைப் பயில்வதற்கேற்ப, காலத்திற்கேற்ப, வரலாற்றுக்கேற்ப வாழ்க்கை அமைகிறது.

நமது வாழ்க்கை சில சமயம் நம்மிடம் இருக்கிறது. பல சமயங்களில் மற்றவர்களிடம் இருக்கிறது. பல சமயங்களில் பொருள்களிடம் கூட நமது வாழ்க்கை இருக்கிறது. பிறர்க்கு நாம் வாழ்க்கையைத் தருகிறோம்; பிறரிடமிருந்து வாழ்க்கையைப் பெறுகிறோம்; பிறர் வாழ்க்கையை அழிக்கிறோம்; சில சமயங்களில் நமது வாழ்க்கையையே நாம் விரும்பி, விரும்பாமல் அழிக்கிறோம்.

எல்லாமே சேர்ந்து இறுதியில் ஒரு கேள்வி: இது வாழ்க்கையா? இதுதான் வாழ்க்கையா?

இந்தக் கேள்வி பழைய வாழ்க்கையைத் தகர்த்து விட்டு புதிய வாழ்க்கையை உருவாக்குகிறது.

இந்த வாழ்க்கையை விளங்கிக் கொள்ள, விளக்கப் பற்பல தத்துவங்கள். பழையவை தகர்ந்து புதியதத்துவங்கள்!

இந்த வாழ்க்கை தனக்குள்ளும் நடைபெறுகிறது. தன்னைக் கடந்து, தன் வழியாக உலகம் முழுவதும், அண்டம்

தழுவியும் நடைபெறுகிறது. உலகம் நமக்குள் வாழ்கிறது. நாம் உலகினுள்ளே வாழ்கிறோம்.

வாழ்க்கை எப்போதும் இயங்குகிறது. ஒரு நிலையில் தேங்கி விட்டால் அது வாழ்க்கையாவதில்லை. ஒரு கோட்டில் ஒரு சமயம் வாழ்க்கை இயங்கினால், இன்னொரு சமயம் அதன் மறுகோட்டிற்கு வாழ்க்கை பயணம் செய்கிறது. பாதுகாப்பில் தான் வாழ்க்கை நடைபெறுகிறது என்பதில்லை. பாதுகாப்பின்மையிலும், தன் அழிவிலும் கூட, வாழ்க்கை தன்னை நிறைவு படுத்திக் கொள்கிறது. அழகில் தான் வாழ்க்கை இயங்குகிறது என்பதில்லை. அவலத்திலும், அசுத்தத்திலும் வாழ்க்கை நடைபெறுகிறது.

எந்த இலக்கணம் கூறினாலும் அதை வாழ்க்கை உடைக்கிறது. இலக்கணம் கூறப்படாமலும் வாழ்க்கை நடைபெறுவதில்லை. இலக்கணம் கூறப்படுவதை வாழ்க்கை விரும்பி ஏற்று, அந்த இலக்கண எல்லைவரை வளர்ந்து நிறைந்து, இனிமேலும் வளர்வதற்காக அதை உடைத்துக் கொண்டு வாழ்க்கை விரிகிறது.

கேள்விகளுக்குள்ளே விடை தொடங்கி வருகிறது. விடைகளே கேள்விகளாகி விடுகின்றன.

சில சமயங்களில் இந்த வாழ்க்கை நெருப்பினுள் தீக்குளிக்கிறது. தீக்குளித்து வந்த பின்னர் உரமேறிய நிலையில், தீயையே தண்ணீராக்கிக் கொள்கிறது. உறவுகள் துறந்து இந்த வாழ்க்கை காட்டைத் தேடியும் ஓடுகிறது. காட்டுக்குள்ளேயே உறவை விரித்துக் கொள்ளவும் செய்கிறது. தனது தான்தோன்றித் தனத்தைக் கட்டுப்படுத்த இதுவே விலங்கிட்டுக் கொள்கிறது. தனது விலங்கே தன்னை அடிமையாக்கும் போது தானே அதனை உடைத்துக் கொள்ளவும் செய்கிறது. வாமனனாக வாழவும் இதற்குத் தெரியும். விசுவரூபம் எடுக்கவும் இதற்குத் தெரியும். சூதாட்டம் மேற்கொண்டு தன்னை இழக்கவும் செய்யும். தன்னைப் பெற்ற நிலையில் சூதாட்டம் கொண்டே பகையையும் இது வெற்றி கொள்ளும். அமுதத்தை உற்பத்தி செய்ய இது கிளம்பி நஞ்சை உற்பத்தி

செய்யும். உற்பத்தி செய்த கஞ்சை உண்டு இது அமுதத்தையும் படைக்கும். உலகத்தையே உருவாக்கி விட்டு இது சுடுகாட்டிற்குப் பயணம் செய்யும். சுடுகாட்டுச் சாம்பலிலிருந்தே இது உன்னத வாழ்க்கையையும் உருவாக்கும். தன்னை அழிப்பதற்கே இது வரங்கொடுக்கும். தன் வரத்தை அழித்தே இது தன்னை வாழ்வித்துக் கொள்ளும்.

வாழ்க்கை பற்றிய 'மகாபாரதம்' இத்தகையது.

வாழ்க்கை பல பட்டங்களில் நடைபெறுகிறது. பல அளவுகளில் நடைபெறுகிறது. பல எல்லைகளில் நடைபெறுகிறது. இவற்றினுள்ளே தேங்கி வரும்போதெல்லாம் இது வாழ்க்கையாக இருப்பதில்லை. இவற்றை உடைத்துக் கொள்ளும் போதே வாழ்க்கை, வாழ்க்கையாகிறது.

அதாவது உணவு கிடைக்காத வரை உணவுக்காகப் போராடுவதே வாழ்க்கை; உணவு கிடைத்தவுடன் உடைக்காக, வேறு தேவைகளுக்காக, போராடுவது வாழ்க்கை. உடல் திருப்திப் படும்போது அறிவுக்காக, ஆன்மாவுக்காகப் போராடுவது வாழ்க்கை.

அதுவும், உணவுக்காகப் போராடுவதில் கூட மிகப் பழங்கால நிலைகளில் திருடுவதன் மூலம் அதைச் செய்திருக்க முடியும். இன்றைய நிலையில் அதை அதே நோக்கில் செய்ய முடியாது. அதாவது இடையில் கிடைத்து விட்ட ஞானத்தின் செறிவோடு தான் அந்தச் செயலைச் செய்ய முடியும். திருடுவதைக்கூட நியாயமாக்கிக்கொண்டு, அதுவும் சமுதாய அளவில் நியாயமாக்கிக் கொண்டு தான் செய்ய முடியும்.

மனிதர்களாகிய நாம் வரலாற்றின் மூலம் வந்திருக்கிறோம். இடையில் எத்தனையோ நீதிகளை, பண்புகளை, அறங்களை, ஆற்றல்களைச் சேர்த்து வந்திருக்கிறோம். இவற்றின் தொடர்பிலிருந்து, பாதிப்பிலிருந்து நம்மைவிலக்கிக்கொண்டு நமக்கான செயல்களைச் செய்ய முடிவதில்லை.

வாழ்க்கை—இந்த அறிவு, ஆற்றல், அறம், விரிவு முதலியவற்றை இழந்து விடும்போதெல்லாம் கேவல

மாகி வருகிறது. அத்தகைய வாழ்க்கைக்கு வளர்ச்சி இருப்பதில்லை. அந்த வாழ்க்கை வாழத் தகாததாகிறது.

வரலாற்றின் போது பழைய வாழ்க்கை முறைகளை வரலாறு கடந்து வந்திருக்கிறது. புதிய வாழ்க்கை முறைகளை வரலாறு தோற்றுவித்துள்ளது. பழங்கால நிலையில் திருப்தியோடு வாழ்ந்திருக்கக் கூடிய ஒரு வாழ்க்கை வகையை—வரலாற்றின் வளர்ச்சி நிலையில், இன்று வாழ்ந்து விட முடியாது.

இன்று,வாழ்க்கை—நாடு தழுவியதாக,சமுதாயம் தழுவியதாக, உலகளாவியதாக விரிந்திருக்கிறது. ஒவ்வொரு வாழ்க்கை வகையும் இந்த விரிந்த எல்லைக்கு முன் நின்று தன்னை நியாயப் படுத்திக் கொள்ள விரும்புகிறது. விரிந்த எல்லையின் தொடர்ச்சியில்லாமல் தனக்குள் தானே முடங்கி விடக் கூடியது, அல்லது, அந்த விரிந்த எல்லையை முடக்கி விடக் கூடிய முறையில் உள்ளது, இன்று வாழ்க்கை ஆவதில்லை.

எவ்வளவு குறுகிய வாழ்க்கை என்பதும் கூட தன்னை விட விரிந்த வாழ்க்கையின் பாதிப்பை தன்னிடம் கொண்டிருப்பதாலேயே, அல்லது அந்த விரிந்த எல்லை நோக்கித் தான் இயங்க முயல்வதாலேயே இது வாழ்க்கையாகிறது.

வானமும் கடலும் தத்துவ வாதிகளுக்கும், விஞ்ஞானிகளுக்கும் தான் உரியவை என்பது உண்மையல்ல; நிலவும், மலரும் கவிஞர்க்கும், காதலர்க்கும் தான் உரியவை என்பது உண்மையன்று; நீதியும் நேர்மையும் நீதிபதிக்கே உரியவை என்பதல்ல; பாட்டும், கூத்தும் கலைஞர்க்கே உரியவையல்ல; வீரமும், வெற்றியும் மன்னர்க்கே உரிமையுடையன என்பதில்லை.

இவை இந்தச் சமுதாயத்தில் வாழும் அனைத்து மக்களின் வாழ்க்கைக்கும் வருகின்றன; வாழ்க்கைக்குள்ளும் இயங்குகின்றன. இதனாலேயே அவர்கள் வாழ்க்கை வாழ்க்கையாகவும் இருக்கிறது. எந்த ஒரு செயலில் அவர்கள் ஈடுபடும

போதும், இவை அனைத்தின் இணைவிலேயே அவைகள் செயல் பட வேண்டி இருக்கிறது. இந்த இணைவில் செயல்படுவதனு லேயே அவைகள் செயலும், வரலாற்றில் வளர்ந்த அவர்க ளுக்கு உரிய செயலாகிறது.

வரலாற்றிலிருந்து அறுபட்டவன், இன்று மனிதனல்ல; சமூகத்திலிருந்து விலகியவன் இன்று மனிதனல்ல; இணைவி லிருந்து பிரிந்தவன் இன்று மனிதனாக முடியாது.

ஒரு சிலருக்கு வாழ்க்கை உயர்மட்ட அளவில் நடைபெற வேண்டும் என்பதற்காகப் பலருக்கு வாழ்க்கை தாழ்ந்த மட் டத்தில் நடைபெறுகிறது. வரலாற்றுப் போக்கில் இது ஒரு விதியாக, தேவையாகக் கூட இருந்திருக்கலாம். ஒரு சமயம் இன்றைய நிலையிலும் கூட அவ்வாறு நடைபெற்றுத்தான் தீரவேண்டும் என்பது உண்மையானால், வரலாற்றின் முன் இவ்வாழ்க்கை அவ்வாறு தன்னை நியாயப் படுத்திக் கொள்ள வேண்டும். இப்படி நியாயப் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தேவையை வரலாறு நம்முன் வைத்துள்ளது. இத்த கைய ஒரு தேவைக்காகத்தான் வாழ்க்கை தாழ்ந்தமட்டத்தில் நடைபெறுக வேண்டும் என்ற ஒரு நியாயம் இருக்குமானால், அந்த நியாயமே இந்த தாழ்ந்த வாழ்க்கையை உயர்வகை வாழ்க்கையாக்குகிறது. ஆனால் இன்று வளர்ந்துள்ள நியா யம் அத்தகைய (அ)நியாயத்தை ஏற்றுக் கொள்ளாது.

இவ்வாறு பலர் வாழ்க்கையைத் தாழ்ந்த மட்டத்தில் வைத்திருப்பதனால்தான் நடைபெறுகிற உயர்மட்டவாழ்க்கை, இக்காரணத்தினாலேயே இது உயர்வாக வாழ்க்கையாகவும் இல்லை; இக்காரணத்தினாலேயே அது கேவலமான வாழ்க் கையாகிறது. இந்த வாழ்க்கை, அறிவுக்கான வாழ்க்கை; இந்த வாழ்க்கை, தானே அறிவதும், தன்னை அறிந்துக் கொள்வதும், தன்னை அறிந்துக் கொள்ளாத போது பிறரை இது அறிவதனால் இதைப் பிறர் அறிவதும் கூட நியாயமாகி றது. இந்த வாழ்க்கை தன்னை அறிந்துக் கொள்வது நியாயம் என்பது போலவே, இந்த வாழ்க்கைக்கு இடம் கொடுத்ததுவ-

லேயே தன்னைக் கேவலமாக்கிக்கொண்டே இந்த தாழ்ந்த மட்டத்தில் நடைபெறும் வாழ்க்கையும், தன்னைத்தானே அழித்துக் கொள்வதும் நியாயமாகிறது. இவ்வாறு தன்னை அழிக்கும் செயலே கூட இதை உயர்வகை வாழ்க்கையாக்கும். எந்த ஒரு மட்டத்தில் நடைபெறும் வாழ்க்கையும் தன்னை விட உயர்ந்தோர் மட்டத்தை அடைய தன்னைத் தானே அழித்துக் கொள்வது வரலாற்றின் தேவை; நியதி.

இவ்வாறு ஒரு மட்டத்தில் நடைபெறும் வாழ்க்கை அதற்கு மேலான இன்னொரு மட்டத்தில் நடைபெறும் இன்னொரு வாழ்க்கையைக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. இன்னொரு மட்டம் என்பது முன்னையதற்கு அடுத்த மட்டமாகவே இருக்க வேண்டும் என்பதும் இல்லை. அடுத்ததற்கும் அடுத்த மிக உயரிய மட்டத்தாலும் மதிப்பிடப்படலாம். அடுத்த மட்டத்தைக் கொண்டு மதிப்பிடப்படும்போது மதிக்கத் தக்கதாகத் தோன்றும் வாழ்க்கை, மிக உயரிய மட்டத்தைக் கொண்டு மதிப்பிடப்படும் போது, மிகத் தாழ்ந்ததாக, வாழக் கூடத் தகுதியற்றதாகக் கூடத் தோன்றலாம். இவை தவிர, வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் ஒவ்வொரு கட்டத்திலும் வாழ்க்கை விரிவதைப் போலவே, வாழ்க்கை விரிந்து தன் உயரிய எல்லையைத் தொடவும் செய்கிறது. எல்லைகள் விரிய விரிய; வாழ்க்கைக்கான புதிய வரையறைகள்—இலக்குகள்—அழகுகள்—ஆற்றல்கள் முதலியன அதிகரிக்க அதிகரிக்க, முன்னைய வாழ்க்கை மட்டம் தாழவே செய்கிறது.

வாழ்க்கை இப்படி இருந்துதான் தீர வேண்டுமா என்பது நியாயமான கேள்வி. ஒரு மட்டம் இன்னொரு மட்டத்தைத் தாங்கக் கூடியதாக, ஒரு சில மட்டங்கள் அவற்றுக்கு மேலேயுள்ள பல மட்டங்களைத் தாங்கக் கூடியதாக, தாங்க வேண்டியதாக இருக்கத்தான் வேண்டுமா? இவ்வாறு வாழ்க்கை இருக்கும் வரை, அந்த வாழ்க்கை வாழத் தக்க பெருமையுடையதாக இருக்க முடியாது. வாழ்க்கை வகைகள் வேறுபடலாம், ஆனால் வாழ்க்கையில் ஏற்ற இறக்கங்கள்

ஏற்பட்டு விடக்கூடாது. இத்தகைய ஏற்ற இறககங்கள் ஏற்பட்ட போது தான் வாழ்க்கை பலர்க்கு கனக்கத் தொடங்குகிறது. நமது வாழ்க்கையை—வாழ்க்கைச் சுகத்தை—சிறப்பை—அழகை—மற்றவரிடம் இழந்து விட்டு நாம் அவலத்தை, அசிங்கத்தை, கனத்தை ஏற்க வேண்டியிருக்கிறது. இந்நிலையில், நம்மீது அமர்ந்துள்ள வாழ்க்கைப் பாரத்தைத் தூக்கி எறிவதும், தேவையில்லை என்று உதறி எறிவதும் நியாயமான செயல்களாகின்றன. இவ்வாறு தூக்கி எறியும் அல்லது உதறி எறியும் செயலின் போது, அதுவரை வாழத் தகுதியில்லாத வாழ்க்கை பெருமைக்குரியதாகி விடுகிறது. வாழ்க்கை தன்னை இழந்து விடும் போதே தன்னைப் பெறுவதுமாகிறது.

'நீங்கள் எழுப்பிய கேள்விக்கும் உங்களது வாழ்க்கை பற்றிய விளக்கங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?'—

அதாவது,

'வாழ்க்கை பற்றி நீங்கள் தரும் வருணனை, மார்க்ஸியத்திற்கு எவ்வகையில் இயைபு உடையது?'

இக்கேள்விக்கான விடையை நோக்கி நம் கவனத்தைச் செலுததுவோம்.

4

வரலாற்றில் வைத்துப் பார்க்கும் போது தான் உண்மைகள் நமக்குக் கிடைக்கின்றன

மனித வாழ்க்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளை, வரலாற்று வகையில் அது உருவான முறையை, கலாச்சாரம், கலை, இலக்கியம் முதலியவை மனித வாழ்க்கையில் பெறும் பங்குகளை ஆராய்வது தான் சாதாரணமாக மார்க்ஸியவாதியின் நடைமுறையாக இருக்கிறது. என்னைப் பொறுத்த வரை வரலாறு, பொருளாதாரம், கலாசாரம், கலை, இலக்கியம், அறிவியல், போராட்டம் முதலிய அனைத்தும் இணைந்த முறையில் மனித வாழ்க்கையைப் பார்ப்பதைத்தான் விரும்புகிறேன். அதாவது மனித வாழ்க்கையை மார்க்ஸியம்

எவ்வாறு பார்க்கிறது, மதிப்பிடுகிறது ; எவ்வாறு போற்று கிறது, வளர்க்கிறது என்று பார்க்க விரும்புகிறேன். வாழ்க் கையைத் துண்டு துண்டாகப் பிளவு படுத்திப் பார்க்காமல், முழுமையாகப் பார்க்க விரும்புகிறேன். மனிதவாழ்க்கைக்குள் பொருளாதாரம் முதலிய அனைத்துப் பகுதிகளும் இணைந்து, கலந்து இயங்குவதைப் பார்க்க விரும்புகிறேன்.

மார்க்ஸியவாதிகளிடையில் இத்தகைய பார்வை அறவே கிடையாது என்று நான் கருதவில்லை. மார்க்ஸிய வாதிகளாக இருக்கும் பலரது வாழ்க்கை, எவ்வாறு தன்ன ளவில் நிறைவுடையதாக, திருப்தி தரக் கூடியதாக, அழகு டையதாக இருக்கிறது என்பதைப் பலரிடத்தில் நாம் பார்த் திருக்கவே செய்கிறோம். இப்படிக் கூறுவதனால் மார்க்ஸிய வாதிகள் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் எல்லோருடைய வாழ்க்கையிலும் இந்த நிறைவு—முழுமை—இருப்பதாக நான் கருதுகிறேன் என்பதில்லை. மார்க்ஸியத்தைத் துண்டு போட்டுப் பார்க்கும் பலருடைய வாழ்க்கை, நிச்சயம் முழுமை யுடையதாக இருக்க முடியாது. அதுபோலவே மார்கஸிய வாதிகளாகத் தங்களைக் கருதாத கோடிக் கணக்கான மக்க ளுடைய வாழ்க்கை, ஒரு சில சமயங்களிலாவது, ஒரு சில நிகழ்ச்சிகளின் போதாவது ஏதாவது ஒரு நிறைவைப் பெறு விட்டால் அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்றும் எனக்குப் புரியவில்லை. அவர்கள் தம் வாழ்க்கையில் எப்போதும் நிறை வடைகிறார்கள் என்று நான் கருதவில்லை. மார்க்ஸியவாதிகள் மட்டும் இந்நிலை அடைந்து விட்டதாகக் கருதுவதற்கும் இடம் இல்லை. அப்படியானால் சாதாரண மட்டத்தில் நடைபெறும் வாழ்க்கையை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள், மகிழ்ச்சி யடைகிறார்கள் என்றால், அதற்கு நியாயமான காரணத்தைத் தேடுவது தேவை என்று கருதுகிறேன்.

சாதாரண மனிதர்கள் என்று கருதப்படுபவர்கள் கூட சோற்றிலேயேசொர்க்கம்அடங்கியிருப்பதாகக் கருதுவதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட சில வேளைகளில் பசித்துன்

பத்தைத் தீர்க்கும் முறையில் சோறு அமிர்தமாக இருக்கிறது என்பது உண்மை. இந்தக் களிபேருவகை, சாதாரண மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் உயர்பெரும் தத்துவ வாதிகளுக்கும, தலைசிறந்த மார்க்ஸிய வாதிகளுக்கும் பொருந்தக் கூடிய உண்மையாகத்தான் இருக்கிறது. இந்த உணவு, விருந்துணவாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. பசித் துன்பம் மிக்க நிலையில் கிடைக்கும் கூழாகக் கூட இது இருக்கலாம். இந்த உணவு வயிற்றைத் தான் நிரப்புகிறது என்பதில்லை. இது எப்படியோ நமது ஆன்மாவையும் நிறைக்கிறது.

தனது வயிற்றை நிரப்புவதனுல் மனத்திற்கும் சேர்ந்து மகிழ்வைத் தரக்கூடிய இந்த உணவை, அதன் அளவு குறைந்து கிடைக்கும் நிலையில், சாதாரண மனிதர் எனப்படுபவர் கூடத்தாம் உண்ணுமல், தம் குழந்தைக்குக் கொடுத்து விட்டு மகிழ்வதைப் பார்க்கிறேம். சோறு மனிதனைத் தீர்மானிக்கிறது என்பது இந்த இடத்தில் பொய்த்துப் போகிறது. மனித வாழ்க்கையில் நிச்சயம் ஆன்மீக ரீதியாக நிர்ணயிக்கக் கூடியதொரு இலக்கணம் இருக்கவே செய்கிறது. இத்தகைய ஆன்மீக இன்பத்திற்காகத்தான் வாழ்வதாக அந்தச் சாதாரண மனிதர்கள் கருதாமற் கூட இருக்கலாம். உணவுப் பிரச்சினையில் மட்டுமல்லாமல் பலவகைப் பிரச்சினைகளில் நிச்சயம் அவர்கள் தமது வாழ்க்கை எல்லைக்குள் சாத்தியமான உயர்நிலை ஆன்மீக அளவைத் தொட்டுக் கொண்டு தான் இருக்கிறுர்கள்.

தாய்மாராக இருந்து தம்மை இயன்றவரை இழந்து விட்டுத் தம்மிடத்தில் தம் குழந்தைகளை — அவர்களது வாழ்க்கையை—ஏற்றுக்கொள்கிறுர்கள்; தமதுவாழ்க்கையை அவர்களுக்கும் கொடுத்து விட்டு, அவர்களின் வாழ்க்கையைத் தாம் வாழ்ந்து விடுகிறுர்கள். தனி மனிதர் என்ற எல்லையைச் சாதாரணமாகத் தகர்த்துவிட்டு பலரைத் தனக்குள் தாங்கிக்கொண்டு அவர்கள் வாழ்ந்துவிடுகிறுர்கள். ஒரு தாயாக, தந்தையாக, ஒரு அண்ணனுக, தம்பியாக,

தங்கையாக, மனைவியாக—இப்படிப் பல வடிவில் இவர்கள் இருந்தே, சாரத்தில் பலருடைய வாழ்க்கையை வாழ்கிறார்கள். இவர்கள் தங்கள் வாழ்வில் சந்திக்கும் பலவகைத் துன்பங்கள், தொல்லைகள், கேவலங்கள், வேதனைகள் முதலியன வெல்லாம், இந்தப் பொதுமைக்காக வாழ்வதன் மூலமே தாங்கிக் கொள்கிறார்கள்; மறந்து விடுகிறார்கள்; அல்லது அந்த வேதனையின் பின்னணியில் தாங்கள் அடைந்து விட்ட பொதுமைப் பூரிப்பில் திளைக்கிறார்கள். வேதனைகளெல்லாம், சாதனைகளாக, இன்பங்களாக, இவர்கள் இவ்வாறு மாற்றிக் கொள்கிறார்கள்.

இவர்கள் வாழ்வில் காதலின்பம் இல்லையா? கலையின்பம் இல்லையா? ஒவ்வொரு வகை இன்பத்தை அடையும் போதும் இவர்கள், தம்மை விட்டு வெளியில் வந்து, தம்மை விடப் பெரியதான, விரிவான, உன்னதமான ஒன்றினுள் மூழ்கி விட்டுச் செல்கிறார்கள். இந்தக் குளியல் தான் அவர்கள் வாழ்வில் எதிர் கொள்ளும் வெப்பத்திலிருந்து இவர்களை ஆற்றுகிறது. தொடர்ந்து உழைப்பதற்கும், வாழ்வதற்கும் தேவையான உற்சாகத்தை, தேவையைத் தருகிறது.

குடும்பத்திற்குள் தான் இங்கில்லையா? உறவினர்கள் வட்டத்தில், நண்பர்கள் கூட்டத்தில், உறவினர் கூட்டத்தில், இவர்கள் விரிவாகக்கொள்ளும் உறவுகளும் துய்க்கும் உணர்வுகளும் விரியவில்லையா? இவற்றையும் கடந்து உழைப்பின் போது, ஓய்வின் போது இயற்கையுடன் இவர்கள் உடலும், மனமும் ஒத்தியங்குவதில்லையா? இவற்றுக்கும் மேற்பட்டு, தன் குடும்பத்தில், தன் ஊரில் நடைபெறும் அச் சிரமங்களைப் பார்த்து, அனுபவித்துக் கொதித்து, குமுறி வெடித்து அக்கிரமத்தை எதிர்த்து நின்று போராடி வெற்றி அல்லது வீரமரணத்தை இவர்கள் தழுவுவது இல்லையா? வேதனைகளை வேதனைகளாகப் பார்க்காமல் வெற்றியாகவும், மரணத்தை வாழ்வின் முடிவாகப் பார்க்காமல் உயர் நோக்கத்திற்கான

சாதனையாகவும் பார்க்கும் ஓர் ஆன்மீகம் இவர்களிடம் இருப்பதால் அல்லவா இவர்கள் வாழ்க்கை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடை பெறுகிறது! நாம் பல சமயங்களில் பெரிதாகப் பேசக்கூடிய அறநெறிகள், கலை அழகுகள் இவர்கள் வாழ்க்கையிலும் வந்து படியாமல், பதியாமல் இருப்பதில்லை.

சாதாரண மனிதர்கள் என்று நாம் பல சமயங்களில் கருதி விடக்கூடிய இவர்களிடம் தான் அசாதாரணமான— வியக்கத்தக்க—வரலாற்றின் சாரமாக விவரிக்கத் தக்க பல பண்புகள், நடைமுறைகள் உறைந்து கிடக்கின்றன. இவர்களுக்குள், இவர்களுக்குத் தெரியாமல் வரலாறு இயங்குகிறது. வரலாற்றின் சாரமாக, உன்னத நிலைகளாக, உயர் வகை வெளிப்பாடுகளாகத் தத்துவ வாதிகள் வகுத்தெடுக்கும் பல உண்மைகள், பல முனைப்புக்கள் இவர்களிடம் தான் இயங்குகின்றன. வளர்ந்து வரும் வரலாறு தன் தடங்களை, பதிவுகளை இவர்களிடம் தான் விட்டு வைத்திருக்கிறது.

இவர்கள் சம்பந்தப்பட்ட வரலாற்றைக் கொஞ்சம் உடைத்துப் பேசுவோம். சாதாரண மனிதர்களைப் பற்றி நான் மேலே தந்த வருணனை, மனிதர்களுள் நல்லவர்களைப் பற்றியதாக மட்டுமே இருக்கிறதே! மனிதர்களுக்குள் தீயவர்கள் இல்லையா? இவர்களைப் பற்றி குறிப்பிடாமல் நல்லவர்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடுவது, எப்படி? எதற்கு? என்ற கேள்விகள் எழுவது நியாயமே!

வரலாற்றின் பார்வையில் நல்லவர்கள் என்றோ, தீயவர்கள் என்றோ பகுத்துச் சொல்வது சரிதானா என்று தெரியவில்லை. ஒரு வகையில் சொல்வதானால் நாம் மேலே பார்த்த நல்ல தாய்மார்கள் முதலிய நல்ல மனிதர்களின் தோற்றத்திற்கே, இவர்களைச் சுற்றியுள்ள 'தீய' மனிதர்கள் தான் காரணம் ஆகிறார்கள். அந்த தீய மனிதர்கள் என்று கூறப்படுபவர்களும், தம்பார்வையில், தீயவர்களாக இருக்க முடியாது.

அவர்களும் தம பார்வையில் நல்லவர்களே! வரலாற்று இயக்கத்தின் போக்கில், இவர்கள் இரு வகையினரும், எதிர் இனங்களாகவும் அதே சமயத்தில் தமக்குள் இணைவு உடையவர்களாகவுமே இருக்கிறார்கள். எதிர்நிலைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்தும், வேறுபட்டும், எதிர்த்தும் இயங்கும் முறையிலேயே இவர்களின் இயக்கமும் நடைபெறுகிறது.

இதை விளக்குவதற்கு வரலாற்றில் நடைபெற்றிருக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியை மேற்கோளாகப் பார்ப்போம்.

காட்டு மிராண்டிகளாக மனிதர்கள் வேட்டைவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும்போது, உழவுத் தொழில் சார்ந்த உடைமைக் கூட்டம் ஏற்படுகிறது. உழவுத்தொழில் அக்கால நிலையில் கடுமையான தொழில். ஆனால் வேட்டை வாழ்க்கையிலிருக்கும் பசி பட்டினிகளைத் தீர்க்க வல்ல முறையில் உணவை உற்பத்தி செய்யும் தொழில். இந்த வேளாண்மைத் தொழிலில பலரை ஈடுபடுத்தியாக வேண்டும். வேட்டை வாழ்வில் அரை வயிற்றுக்கும், கால் வயிற்றுக்குமே உணவுண்டு வாழும் மனிதர்கள், வேட்டை வாழ்வில் இருக்கும் தன்னிச்சையான சுதந்திரத்தை இழந்து விட்டு, கடுமையான உழவுத் தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளமாட்டார்கள். அந்நிலையில் உழவுத் தொழிலைக் கொண்டு வர விரும்பும் உடைமையாளர், வேட்டையாளர்கள் எதிர்பாராத முறையில் அவர்களைச் சுற்றிவளைத்து, அவர்களைத் தாம்பால் பிணித்து, இழுத்து வந்து, அடித்து உதைத்து, அவர்களிடம் வேலை வாங்கியாக வேண்டும். இந்தக் கொடுமைகள் நெடுங்காலம் நடைபெற்றிருக்க முடியும்.

இங்குக் குறிப்பிட்ட வருணனை, அதே முறையில் தான் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதில்லை. இந்த வருணனையில் சிறு மாறுதல்களுக்கு இடம்இருக்கலாம். இந்த வருணனையின் சாரமான பகுதி வரலாற்றில் நடைபெற்ற நிகழ்ச்சி தான். மிகப் பழங்காலத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி

போலவே வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு சூழலில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்க முடியும்.

மேற்போக்காகப் பார்த்தால் சுதந்திரமான வேட்டைக் காரர்களைத் தம் சுயநல நோக்கில் உடமையாளர்கள் கொடுமைப் படுத்தியதாகவே தோன்றலாம். இது உண்மையில்லை. வேட்டைக்காரர்கள் தான்தோன்றியாகச் சுற்றித் திரிந்தார்களே ஒழிய அவர்கள் பசி—பட்டினிச் சூழலிலேயே வாழ்ந்தமையால் அவர்கள் சுதந்திரமானவர்களும் அல்லர். இயற்கையில் கிடைக்கும் கனி, கிழங்கு வகைகள், விலங்குகளை இருக்கும் வகையிலேயே தின்று தீர்க்கும் வாழ்க்கை முறையை விட, தானியங்களை முறையாக உற்பத்தி செய்து உண்ணும் வாழ்க்கை மேலானதாகிறது. இச்செயல் முறையினூடே, மனித வாழ்க்கை உயர்கிறது. ஆற்றல் பெறுகிறது. உழவுத் தொழிலின் பல்வேறு வகை இயக்கங்களுக்கும் தம் உடலையும், மனத்தையும் இணையவைத்துச் செயல்படுத்தும் முறையில் மனிதன் மேலும் சிறந்த மனிதனுகிறுன். தன்னிச்சையான விலங்கு நிலையிலிருந்து, சுதந்திர உணர்வுடைய மனிதனுக வளர்கிறுன். இவனை இந்நிலைக்கு உட்படுத்தியவர்களும் குறுகிய கால நோக்கில் தன்னலமுடையவர்கள் போல, தீயவர்கள் போலத் தோன்றிஞலும் நெடுங்கால நோக்கில் தன்னலமுடையவர்களும் அல்லர்.

இந்நிகழ்ச்சியின் உட்பொருள் சார்ந்த பார்வையிலிருந்து பார்க்கும்போது, நாம் முன்னர் மேற்போக்காகப் பார்த்த பார்வையிலிருந்து நிறைய வேறுபட நேர்கிறது. நாம் முன்பு கருதிய நல்லவர், நல்லவர்களாக இல்லை. தீயவர்கள், தீயவர்களும் அல்லர்; இவர்களுக்குள் வரலாறு இயங்கியிருக்கிறது. அதேசமயம், வேட்டைக்காரர் தமக்கு இழப்பு நேர்ந்து விட்டதாகக் குறுகிய கால நோக்கில் கருதியதிலும் உண்மை இருக்கவே செய்கிறது. தனது பழைமையை அவர் இழந்து விட்டது உண்மைதான். வரலாறு இப்படித்தான் இயங்குகிறது. இப்படிச் சொல்வதனுல் வரலாறு தனியே இருந்து

மனிதர்களைத் தனக்குக் கருவியாக்கித்தான் இயங்குவதாகப் பொருள் இல்லை. மனிதர்களின் தேவைகள், செயல்முறைகள், முதலியவையே வரலாருகிறது; வரலாற்றியக்க மாகிறது.

இதிலிருந்து நாம் வகுத்துக் கொள்ளக் கூடிய இன்னொரு உண்மை: வாழ்க்கையைப் பற்றிய உண்மையை முழுப் பார்வைதான் வழங்குகிறது. அந்த முழுப் பார்வை என்பது நீண்டகால நோக்கிலானது; வரலாற்றுச் சார்புடையது. அதாவது வரலாற்றில் வைத்துப் பார்க்கும்போது தான் உண்மைகள் நமக்குக் கிடைக்கின்றன.

இடையில் நமக்குக் கிடைத்த உண்மை நோக்கிலிருந்து, நாம் முன்பு குறிப்பிட்ட நல்ல தாய்மார்கள் முதலிய நல்ல மனிதர்களைப் பற்றி நாம் மீண்டும் பார்த்துக் கொள்வோம். இந்த நல்ல தாய்மார்கள் எனப்படுபவர்கள் இன்னொரு வகையில் பார்க்கும்போது தீய தாய்மார்களாகவும் இருக்கக் கூடும். அக்கிரமத்தை எதிர்க்கக் கிளம்பும் தன் மகனை, இந்த நல்ல தாய் தன் அன்பால் தடுத்து விடவும் கூடும். இவனையே அவனுடைய நல்ல மனைவி, குடும்ப உறவுகளில் இறுகப் பிணித்து அவன் நல்ல செயல் புரிவதைத் தடுத்து விடவும் கூடும்.

இப்படி இந்த 'நல்ல' தாய் செயல்படுவதனாலேயே இவள் தாயாகச் செயல்படவில்லை என்றாகி விடாது. குறிப்பிட்ட எல்லைக்குள் தாய்மை இறுகிவிடுவதனாலேயே இது நேர்கிறது.

ஒட்டு மொத்தமாக வைத்துப் பார்த்தால் வரலாறு வளர்ந்திருக்கிறது. அப்படியானால், இந்த நல்ல தாய்மார்கள் முதலிய நல்ல மனிதர்களின் பெரும்பான்மை காரணமாகவே வரலாற்றில் வளர்ச்சி நேர்ந்திருக்க முடியும். பெரும்பான்மை என்று நாம் கூறுவது நூற்றுக்கு ஐம்பத்தொன்று என்ற வீதமாகக் கூட இருக்க முடியும். அல்லது, ஆயிரத்துக்கு ஐந்நூற்று ஒன்று என்றும்கூட இருக்கமுடியும். வரலாற்றின்

கடுமை, கால அளவைப் பார்க்கும்போது இங்கிலேதான் சாத்தியமாக இருக்கக்கூடும். வரலாற்றை நகர்த்திய பெருமை என்னவோ இராமர்களைப் போலவே இராவணர்களுக்கும் இருக்கவே செய்கிறது.

குறுகிய குடும்ப நோக்கில் அந்தத் தாய் தன் மகனைத் தடுத்து விடுகிருள். குறுகிய அதே குடும்ப நோக்கிலே தன் மகன் கொலே செய்யக் கூடத் தாய் தூண்டலாம. அந்தத் தாயைப் பொறுத்தவரை தனது பார்வையின் எல்லே கட்டுப் பட்டிருக்கிறது. கட்டுப்பட்டுள்ள பார்வையின் எல்லேயின் மூலமாக வரலாறு தனக்குத் தேவையான செயலே நடத்தி யிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இங்கிலேயில் ஒன்று நமக்குத் திட்டவட்டமாகப் புரிகிறது. வரலாற்றில் தனிமனிதர்களும், கூட்டங்களும் நீண்டகாலம் கண்ணுக்குத் தெரியாமலே செயல்பட்டார்கள். வாழ்க்கை யின் விரிந்த எல்லேகள், உன்னதமான எல்லேகள் கண்ணுக் குத் தென்படாமலே செயல்பட்டார்கள். விரிந்த எல்லேகள் கண்ணுக்குத் தென்படாமலேகூட அவர்கள் பல சமயங்களில் சரியாகவும், சில சமயங்களில் தவருகவும் செயல்பட்டார்கள். விரிந்த எல்லேகள் கண்ணுக்குத் தெரியும் முறையில் அவர்கள் செயல்படுவார்களானுல், வரலாறு ஆற்றலுடன் விரைந்து செல்வது சாத்தியமாகும். வேறு வகையில் கூறினுல், வர லாறு இந்நாள்வரை தனது திசையைத் தானே சரிவரத் தெரிந்து கொள்ளாமல் பயணம் செய்து இருக்கிறது. தன்னே யறிந்து, தனது திசையை அறிந்து செய்யும் பயணம் அற்புத மாக இருக்கும்.

அதாவது அந்த நல்ல தாயின் செயலில் வரலாறு இருந்தது. அல்லது சாரம் வரலாற்றில் ஏறியது; வரலாற்றின் சாரம் அவளுக்குள் கூடியதனுலேயே அவள் தாய்மை நிறை வில் திளேத்திருந்தாள். தாய்மையின் நிறைவு நிலேயிலேயே அவளது வாழ்வும் சாவும் நடைபெற்றன. அவளது சாவு உண்மையில் சாவுஅல்ல; அவள் வரலாற்றில் வாழ்கின்ருள்.

அவள் அமரத்துவம் உடையவளாகிவிட்டாள். அவள் தன் செயலை, சிந்தனையை வாழ்க்கையாகத்தான் நடத்தினுள். அவளது வாழ்க்கை என்ற குறிப்பிட்ட வடிவிற்குள் வரலாற்றின் பொதுமை, வரலாற்றின் சாரம் இயங்கியது.

அந்தத் தாய், பொருளாதாரமாகப் பிரச்னை வந்து தன் வாழ்க்கையில் மோதியபோது, பொருளாதார ரீதியாகத் தோற்றபோதிலும் ஆன்மீக ரீதியில் வெற்றி பெற்றுள். மகனது அழகு, பண்பு, தன் கடமையுணர்வு முதலிய கலை கலாசாரப் பண்புகளால் தூண்டப்பட்ட அவளது ஆன்மீகத்தால் அவள் பொருளாதாரத்தை வென்றுள். வென்ற வகையிலேயே அவளது தாய்மை நிறைவு அடைந்தது. பொருளாதார வகையில் அவள் சில சமயங்களில் வெற்றி கண்டது கூட, அவளுக்கு அவளது ஆன்மீகம் தந்தஊக்கத்தால்தான்.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை முழுமையாகத் தான் எதிர்ப்படுகிறுர்கள்; வரலாற்றில் தாங்கள் இடம் பெறுவதற்காக இவர்கள் வாழ்வதில்லை. வாழும்போது இவர்களுக்குள் வரலாறு இயங்குகிறது. வரலாற்றின் சாரத்தைக்கூட இவர்கள் தமது சாரமாகக் கொண்டமையால் இவர்கள் வாழ்க்கை நிறைவுடையதாக இருக்கிறது. உண்மையில் வரலாற்றின் சாரம், வரலாறு என்ற தனித்த ஒன்றில் இல்லாமல் இத்தகைய மனிதர்களுக்குள் தான் இயங்குகிறது. இம்முறையில் இவர்கள் தமது வாழ்க்கையை யாரோ இட்ட பிச்சை, காணிக்கை என்று வாழாமல், தமது உடமையாக, உரிமையாகவே வாழ்கிறுர்கள்.

இத்தகைய மனிதர்கள் தமது குறிப்பிட்ட வாழ்க்கை உருவத்திற்குள் தம்மை மீறிய ஒரு பொதுமையை வாழ்ந்திருக்கிறுர்கள். தம்மைச் சூழ உள்ளவர்களின் நலன்களுக்காக, அவற்றைத் தம் சொந்த நலன்களாக ஏற்று வாழ்ந்திருக்கிறுர்கள். இவர்களிடம் நிலவும் அன்பு, இரக்கம், அருள், காதல், நட்பு, தோழமை முதலிய அனைத்துப் பண்புகளின் மலர்ச்சிக்கும் காப்புக்கும் இதுவேதான் காரணம்.

இவர்கள் தம்மை உடலளவில் வாழ்வித்துக்கொள்ளும் போதே உள்ளத்தில் வாழ்கிறார்கள். இவர்கள் அண்டம் தழுவிய, அதனையும் கடந்த ஒன்றிடம் கொள்ளும் உறவுகூட, மேற்கூறப்பட்ட பண்புகளின் தொடர்ச்சியாகவும், மேற் குறித்த பண்புகளின் போதாமையை நிறைவு செய்வதாக வுமே உள்ளது. இவர்கள் தம் வாழ்வின்போது கொள்ளும் உறவுகளில் ஏற்படும் தளர்ச்சி, சிதைவு, அவலம் முதலிய குறைகள் இல்லாத ஒரு இறைவனிடம் இவர்கள் நாடிச் சென்றார்கள். தாம் கருதாதபோதும் தம்மிடம் அன்பாக இருக்கும் ஒரு பேரன்பை இவர்கள் விரும்பினார்கள். தாம் தவறு செய்தபோதும் தம்மை மன்னித்து ஏற்று, தொடர்ந்து குறையாமல் அன்பு செய்யும் ஒரு பொதுமையை இவர்கள் விரும்புகிறார்கள். சில சமயங்களில், தமக்கு அது எதனையுமே வழங்காவிட்டாலும், தான் அதனிடம் எதையும் கேட்டுப் பெறாவிட்டாலும்கூட. அந்த அன்பு தங்களிடம் நிலைக்க வேண்டும் என்று கருதினார்கள். தாங்கள் ஏதோ, உலகில் குறிப்பிட்ட சூழலில், குறிப்பிட்ட கால அளவிற்குள் குறிப் பிட்ட குணங்கள், குற்றங்களோடு பிறந்து வாழ்ந்து மடிந்து விடுவதை இவர்கள் விரும்பவில்லை. என்றும் அழிவில்லாத, எல்லா வகைக் குணங்களையும் உடைய, ஒரு பேரன்பின் பகுதியாகத் தாங்கள் இருப்பதனாலேயே, அண்டத்துடன் தாங்கள் கொள்ளும் உறவை இவர்கள் விரும்பினார்கள். தம்மை, தம் உடலை, தமது குறிப்பிட்ட சூழலைக் கடந்து இவர்கள் இயங்க விரும்பினார்கள். இவ்வகையில் இவர்களுக்கு அமைந்த வாழ்க்கையின் வெளியீடாக, விமர்சனமாக, இவர்கள் விருப்பங்களாக. தேவையாக, சாரத்தில் தங்கள் இருப்பாக, இயக்கமாகவே இவர்கள் தெய்வத்தை அணுகினார்கள்.

இந்த மனிதர்கள் உலகளாவி, உலகைக் கடந்தும் வாழ விரும்பினார்கள்; வாழ்கிறார்கள். தங்கள் வாழ்க்கையை இந்த வகையில் தான் இவர்கள் எதிர்கொண்டு வாழ்கிறார்கள்.

5

மக்களின் வாழ்க்கையில் சாரமாக எது இருக்கிறதோ அதுவே மார்க்ஸியத்திற்கும் சாரமாகிறது

நமக்கு முன் எழுந்த கேள்வியை நாம் மீண்டும் கேட்டுக் கொள்வோம்: "வாழ்க்கைபற்றி நாம் பார்த்த வருணனை மார்க்ஸியத்திற்கு எவ்வகையில் இயைபு உடையது?"

நாம் பார்த்த மனிதர்களின் வாழ்க்கையில் சாரமாக எது இருக்கிறதோ, இயங்குகிறதோ, அதுவே மார்க்ஸியத்திற்கும் சாரமாக இருக்கிறது.

வரலாற்றின் போக்கில் அவர்கள் எதைச் சேகரித்துக் கொண்டார்களோ, அதை மேலும் விரிந்த முறையில்

நமக்கே புலப்படும் முறையில், நன்கறிந்து திரட்டுவதை மார்க்ஸியம் ஊக்குவிக்கிறது.

இத்தகையவர்களின் வாழ்க்கையின் சாரம் எது என்று ஆராயும் போக்கிலேயே மார்க்ஸியம் தன்னை உருவாக்கிக் கொண்டது. தனது சாரத்தைத் திரட்டிக்கொண்டது.

இந்த மக்களின் வாழ்க்கையில் இருக்கும் சாரத்தைக் கொண்டு சக்கைகளை விமர்சனம் செய்யவேண்டும். அவ்வாறு விமர்சனம் செய்வதன் மூலம்தான் வாழ்வின் சாரத்தை அதிகரிக்க முடியும். மார்க்ஸியம், இந்த மக்கள் வாழ்வுடன் இயங்கி, இதைத்தான் செய்ய விரும்புகிறது.

நான் முன்பு குறிப்பிட்டது மீண்டும் நினைவுக்குவருகிறது: மார்க்ஸியம், நமது வாழ்க்கை எல்லைக்குள் தட்டுப்பட வேண்டும். நமக்கு ஓரொருகால் தட்டுப்பட்டு, மேன்மையானதாக நாமே ரசித்து, அதை மேலும் துய்க்கவேண்டும் என்று நாமே கனவு கண்ட ஒரு கோட்பாடாக மார்க்ஸியம் இருந்தாலொழிய அதை நாம் புதியதாக, இன்றியமையாததாக ஏற்க முடியாது.

நமது வாழ்க்கைக்குள்ளே இதைத்தான் நாம் தேடினோம், கண்டடைந்தோம் என்று கூறத்தோன்றுகிறது.

6

இதைத்தான் மார்க்ஸியத்தை ஏற்பதற்கான கலாசார அடிப்படை என்று கருதுகிறேன்

இடையில் இப்படி ஒரு கேள்வி எழலாம். பொருளாதாரப் பிரச்சினைகள் வரலாற்றைப் பெரிதும் பாதிக்கிறது. இதைச் சிந்தனையாளர் சரிவரப் பார்க்கத் தவறிய காலத்தில், பொருளாதார நோக்கிலிருந்து வரலாற்றின் இயக்கத்தை விளக்கும் முறையை மார்க்ஸ் கண்டார். மார்க்ஸின் மேதைமை இந்த முறையில் வெளிப்பட்டது. சமயம், கலை, கலாசாரம் முதலியவைகளே வாழ்க்கையைத் தீர்மானிப்பதாகப் பலர் கருதியதற்கு இது, முற்றிலும் வேறானதாகவும் விமர்சனமாகவும்இருந்தது. இந்தியச் சூழ்நிலையிலும் பொருளா

தாரப் பிரச்சினைகள் கடுமையாக இருக்கின்றன. ஏற்கனவே இந்தியாவில் கலை, கலாசாரம், சமயம் முதலியவற்றைப் பற்றிய பேச்சுக்களும், நடைமுறைகளும் 'தேவைக்கு அதிகமாகவே' இருக்கின்றன. இங்நிலையில், மார்க்ஸியத்தின் பொருளாதார வாதத்தை நாம் எதற்காகப் பின்னுக்குத் தள்ள வேண்டும்? கலாசாரம் முதலிய பிரச்சினைகளுக்கு நாம் ஏன் தேவைக்கு அதிகமான இடத்தைக் கொடுக்க வேண்டும்?

நானே நண்பர்களோ இன்னும் எத்தனையோ பேர் மார்க்ஸிய வாதிகளாக மாறியதற்கான காரணத்தை நினைத்துப் பார்க்கும்போது, பொருளாதாரப் பிரச்சினைகள்தான் இந்த மாற்றத்திற்குக் காரணம் என்பது உண்மையல்ல. இவர்கள் வாழ்வில் பொருளாதாரம் பிரச்சினையாகவில்லை என்பது இதற்குப் பொருளல்ல. பொருளாதாரப் பிரச்சினைகளோடு தான் இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், சில சமயம் இப்பிரச்சினை இவர்களைக் கடுமையாகவும் தாக்குகிறது. இவர்கள் தம்மைவிடப் பொருளாதார வகையில் வசதி குறைந்தவர்களைப் பொருளாதாரம் கடுமையாக, இடைவிடாமல் பாதிப்பதையும் பார்க்கவே செய்கிறார்கள். இவர்கள் வாழ்வின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீரவேண்டும் என்று மிகவும் விரும்புகிறார்கள். தாங்கள் படித்தவர்கள், கொஞ்சம் வசதி உடையவர் என்ற வகையில் கூட, தம்மைவிட வசதி குறைந்தவர், வாழ்வுக்கான வசதியே அற்றவரின் பொருளாதாரப் பிரச்சினைகள் அதிகரிப்பதற்குக் காரணமாக இருப்பதையும் இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அதுபோலவே தாங்கள் படித்தவர்கள் என்ற வகையில், இந்தச் சமுதாயத்திலுள்ள ஆதிக்கச் சக்திகளுக்கு இவர்கள் துணையாக இருப்பதையும் இவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

அப்படியானால் தாங்கள் செய்யும் 'பாவத்'திற்குக் கழுவாயாகத்தான் இவர்கள் மார்க்ஸியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவது உண்மைதானா? உண்மை

என்றல், ஒரு வேளை இவர்கள் படித்திராவிட்டால்—இந்தச் சமுதாயத்தில் ஆதிக்கச்சக்திகளுக்குத் துணையான பணிகளை ஏற்றிராவிட்டால்—இவர்களும் உடலுழைப்பிலேயே மற்றவர்களைப் போல ஈடுபட்டிருந்தால்......... இப்படிச் சிந்திப்பது சரிதானு? இந்தச் சமுதாயம் இன்றைய நிலையிலும், எதிர்காலநிலையிலும் இயங்குவதற்குப் படிப்பாளிகள் இல்லாமல் முடியுமா? முடியாதே! ஆகவே இவர்கள் படித்திருக்கிறர்கள் என்பதையே ஒரு குற்றச்சாட்டாகக் கூறுவது நியாயமாகாது! இவர்களைப் போலவே எத்தனையோ பேர் படித்துவிட்டு முதலாளிகளுக்குச் சேவகம் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதுபோல, மார்க்ஸியத்தை ஏற்கமறுத்து, மார்க்ஸியத்திற்கு எதிர்ப்பாகவும் இருக்கிறர்கள் அல்லவா! இப்படி இவர்களுக்குத் தனிச் சலுகை வழங்க வேண்டும் என்பதும் இல்லை. ஒரு வகையில் இவர்கள் படித்த படிப்புக்கூட இவர்களை மார்க்ஸியத்தை நோக்கித் தள்ளியிருக்க முடியும். மார்க்ஸியத்தைப் பலர்க்குககற்றுத்தர,மார்க்ஸியத்தைமேலும் சரியாகப் புரிந்து கொள்ள, இவர்கள் கற்ற படிப்பே உதவியாகவும் இருக்க முடியும். இது தவிர, கல்வியறிவைப் பரவலாக்குதல் என்ற பிரச்சினை மார்க்ஸிய வாதிகள் வரவேற்கக் கூடியது தான். உடலுழைப்பில் கடுமையாக ஈடுபட்டிருப்பவர்கள் மார்க்ஸியத்தை ஏன் இதுவரை ஏற்கவில்லை என்பது ஒரு புறம் இருக்க, மார்க்ஸியத்தைப் புரிந்து கொள்வதற்கான படிப்பு, கல்வியறிவு அவர்களில் பலர்க்கு அறவே இல்லை; அல்லது போதாது என்பதையும் நாம் புறக்கணிப்பதாக இல்லை. மார்க்ஸியக் கட்சிகள், தொண்டர்களுக்குக் கல்வியறிவைக் கற்றுக் கொடுப்பது பற்றி ஒரு செயல் திட்டத்தை ஏன் செயல் படுத்தக் கூடாது என்றும் தெரியவில்லை.

ஒன்றை ஒப்புக் கொள்ளலாம்: மார்க்ஸியத்தை ஏற்பதற்கே கூட ஒரு கலாசார அடிப்படை தேவையாக இருக்கிறது. பொருளீட்ட வேண்டும், எப்படியாவது ஈட்ட வேண்டும், பாவம் பழி பாராது ஈட்ட வேண்டும், நன்ருக உண்ண

வேண்டும், உடுக்க வேண்டும் என்பன போன்ற இலட்சியங்களைத் தம் வாழ்வில் முதன்மையாக வைத்துச் செயல்படாதவர்கள்; எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும், சமுதாயத்தில் நிலவும் கொடுமைகள் அடியோடு தொலைய வேண்டும் என்று சிந்திப்பவர்கள்—இவர்கள்தான் மார்க்ஸியத்தை ஏற்கிறார்கள். பொருள்வகை வாழ்வுதான் வாழ்வு என்று கருதாமல் பொருளுக்கு மீறியும் வாழ்க்கை இருக்கிறது என்று கருதுபவர்கள் தான் மார்க்ஸியத்தை ஏற்கிறார்கள்.

இதைத் தான் மார்க்ஸியத்தை ஏற்பதற்கான கலாசார அடிப்படை என்று நான் கருதுகிறேன். வாழ்க்கையைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டம்,கல்வியறிவு முதலியவை இதில் சம்பந்தப் பட்டிருக்கின்றன. பொருளைக் கொண்டு வாழ்க்கையை நிர்ணயிக்க வேண்டாம் என்ற கருத்து இவர்களிடத்தில் இடம் பெறுவதற்கு, பொருள் வகை வாழ்வில் இவர்கள் போட்டியிட்டு வெல்ல முடியவில்லை; போட்டியிட்டுத் தோற்று விட்டதே காரணம் என்று விவாதிக்க இடம் இருக்கலாம்; அத்துடன் குடும்பத்தில் இந்தப் பண்பு முன்பே இடம் பெற்றிருக்கக் கூடும் என்பது ஒரு காரணமாகலாம்; வழிவழியாக நமது இந்தியச் சமுதாயத்தில் வரும் ஒரு பண்பு இது; இப்பண்பு பலரைப் பற்றி இருக்கவும் முடியும்; பொருள் வகை வாழ்வில் போட்டிக்குச் செல்லாமலே கூட இவர்கள் இத்தகைய கருத்தைக் கொள்வதற்கும் இடம் இருக்கிறது. இவர்களுக்குக்கூட குறைந்த அளவு வாழ்க்கையில் வசதி இருப்பதனால் தான், இத்தகைய பண்பாட்டை இவர்களால் தங்களிடம் தாங்கியிருக்க முடிகிறதுஎன்றும் விவாதிக்கலாம்.

இந்த விவாதத்தில் நாம் ஒன்றை நினைவில் இருத்துவது நல்லது: பொருளாதாரப் பிரச்சினையின் கடுமை, சம்பந்தப் பட்டவர்களை, நாகரிகம், கலாசாரம், பண்பாடு என்பதையெல்லாம் துச்சமாகக் கருதித் தூக்கி எறிய வைக்கிறது. பொருளாதார நிலையின்கடுமையை மாற்ற, நாகரிகம் முதலிய

வற்றைத் தூக்கி எறிவதனலேயே வழி பிறந்து விடுவதாகவும் தெரியவில்லை. நாகரிகம், பண்பாடு முதலியவற்றை மனிதர்களுள் பலர் உதறி விடுவதற்கு எத்தகைய பொருளியல் நிலை காரணமாக இருக்கிறது என்பதை இது விளக்குகிறதே தவிர, தூக்கி எறிந்து விடுவதனலேயே வாழ்க்கை சாத்தியமாகிறது என்பதை இது விளக்கவில்லை. பண்பாடு முதலியவற்றை உதறி விடுவதன் மூலம் வாழ்க்கை வேறு வகையில் செல்லலாம். திருடலாம்; கொள்ளையடிக்கலாம்; கொலை புரியலாம்; பிச்சை எடுக்கலாம்; அல்லது பொய், புரட்டு, வஞ்சகம், ஏமாற்று, கடத்தல் முதலிய வழி முறைகளை மேற்கொண்டு சம்பாதித்துப் பெரிய மனிதராகலாம். இந்த வழி முறைகளை நாம் மறுத்துத்தான் மார்க்ஸிய வாதியாகிறோம்; ஆகவேதான் நாம் மார்க்ஸிய வாதியானதற்கான காரணத்தில் முதன்மையானது நமது கலாசாரம்; கலாசாரம் பற்றிய அக்கறையேயாகிறது; இந்தக் கலாசாரம் பற்றிய அக்கறைதான் சில சமயங்களில் வசதியான வாழ்க்கை உடையவர்களையும் மார்க்ஸியத்தை நோக்கி இழுக்கிறது. வெறும் பொருளாதார வாதம் கொண்டே இத்தகைய மாற்றங்களை விளக்கி விடுவது சாத்தியமல்ல.

இஃது ஒரு புறமிருக்க, இன்னொரு புறத்தில் நேர்வதையும் நாம் பார்க்கத் தவறி விடக்கூடாது. பொருளாதாரப் பிரச்சினையின் மீதே நம் கவனம் முழுவதையும் வைத்து, கலாசாரப் பிரச்சினையில் அக்கறை இல்லாமல்; அல்லது அக்கறை குறைந்த நிலையில், மார்க்ஸிய வாதிகள் என்று தம்மைக் கருதுபவர்களுக்கு இடையில் தான், பொருளாதார வாதம் பலமாக எழுகிறது; அதாவது வாழ்க்கையைப் பொருளைக் கொண்டே தீர்மானிக்கும் போக்கு கடுமையாக எழுகிறது. பணமே பிரதானம்; பொருள் வகையிலான வாழ்க்கையே பிரதானம் என்ற கருத்து ஏற்படுகிறது. வாழ்க்கையைப் பற்றிய உடமை வர்க்கத்தின் கோட்பாடு இதிலிருந்து வேறுபட்டதல்ல; உடமை வர்க்கத்தை ஒழிக்கப் புறப்பட்டவர்கள், உடமை வர்க்கத்தின் கோட்பாடுகளுக்கு ஆளா

தும நிலை, தமக்குத் தெரியாமலேயே நடைபெறுகிறது. பொருளாதார வாழ்வுக்கான போராட்டங்கள் மட்டும் இந் நிலையில் சாத்தியப் படுகின்றன. தமது குறிப்பிட்ட கூட்டத் தவரின் நலத்துக்காகவே இந்தப் போராட்டங்கள் நடைபெறு கின்றன. கடுமையான போராட்டங்களை மேற்கொள்வதன் மூலம் ஏற்கனவே தமக்குள்ள பொருளியல் வாழ்க்கைக்குப் பங்கம் வருவது போலத் தோன்றினால் போராட்டத்தைக் கை விடும் நிலையில், ஆதிக்கச் சக்திகளுக்கு அடி பணிவது அல்லது அவர்களுடன் கூடடுச் சேர்வது என்ற நிலை ஏற்படு கிறது. இதன் மூலமும் மக்கள் வாழ்வுக்கு இவர்கள் சுமை யாகி விடக் கூடும். இந்நிலையில் இவர்கள் மூலம் மார்க்ஸியம் மக்களிடம் கவர்ச்சியை எழுப்புவதற்குப் பதிலாக எதிர்ப்பை அல்லது புறக்கணிப்பை ஏற்படுத்தி விட முடியும். அந்நிலை யில் மார்க்ஸியத்தை இவர்கள் தங்களிடமும் தக்க வைத்துக் கொள்ளாது, மக்களிடமும் செலுத்த முடியாமல் மார்க்ஸி யத்தை அனாதையாக்கி விடுகிறார்கள்.

இவ்வாறு கூறுவதனால், வரலாற்றிலே பொருளாதாரத் தின இடத்தை நாம் மறுக்கிறோமா என்று கேட்கலாம். வர லாற்றை உருவாக்கும் சக்திகளுள் பொருளாதாரம் அடிப் படையாக இருக்கிறது என்பதில் ஐயமில்லை. அதே சமயத் தில் பொருளாதாரம் மட்டுமே வரலாறு என்பதும் உண்மை யில்லை. பொருளாதாரம், கலை, தத்துவம், இலக்கியம முதலிய பலவும் இணைந்தே வரலாறு உருவாகிறது. குறிப்பிட்ட கால வரலாறு முன்னைய வரலாற்றின் நீட்சியாகவும், எதிர்காலத் தின் தொடர்ச்சியாகவும் இருக்கிறது. வாழ்க்கை என்ற களத்தில் வரலாற்றைச் சந்திக்கும் போது, பொருளாதாரம் முதலியவற்றைத் தனித்தனியாக நாம் சந்திப்பதில்லை. இணைந்த கோலத்திலேயே சந்திக்கிறோம். இந்தக் கோலத்தில் பொருளாதார அம்சங்களை விட முக்கியமான பிற அம்சங் கள் இருக்கின்றன. இலட்சியம், பண்புநலன்கள், கலாசாரம், தத்துவம், சீர் பெற்ற உறவுகள், கலை, இலக்கியம் முதலி யவை இவ்வகையில் வாழ்க்கையில் சங்கமித்திருக்கின்றன.

ஒரு மார்க்ஸிய வாதியின வாழ்க்கையிலிருந்தே இந்த உண்மையை நாம் விளக்க முடியும். நமது சமுதாயத்தைத் தாங்கியுள்ள வறுமை, நோய்கள் முதலிய பொருளாதாரப் பிரச்சினைகள் நம்மை மார்க்ஸியவாதியாக்குவதில் குறிப்பிட்ட பங்கு வகிக்கவே செய்கின்றன. வறுமையுடையவர் அனைவரும் மார்க்ஸியத்தைத் தேர்ந்தெடுக்காத போது, நாம் மட்டும் தேர்ந்தெடுப்பதற்கு பொருளாதாரம் மட்டுமே ஒரே காரணமாகி விடுவதில்லை. பொருளாதார வகையில் நமது வாழ்க்கையும் நாளடைவில் தாழ்ந்து விடலாம் என்ற அச்சம் காரணமாக இருக்கக்கூடாதா என்று கேட்கலாம். மார்க்ஸிய வாதியாகிய நம்மைப் பொறுத்த வரை, அண்மைக் காலத்தில் நாம் கருதும் பொருளாதார மாற்றங்கள் வந்து விடும் என்று நாம் நம்பவில்லை; அல்லது பொருளாதாரப் பிரச்சினை நமக்கு எதிர்காலத்தில் கடுமையாகி விடும் என்ற அச்சம் மட்டுமே நம்மைத் தூண்டுவதாக இருந்திருப்பின் நாம் பொருளீட்டு வதற்கான ஏதாவது ஒரு குறுக்கு வழியில் போயிருப்போம். குறைந்த அளவு நமது பொருளாதாரப் பிரச்சினை கூட மற்ற வர்களின் பொருட் பிரச்சினை தீரும் போதுதான் தீரும் என்று நம்புவதில், பொருளாதாரமயமாகி நாம் சிந்திப்பதை விட வேறுவகைச் சிந்தனை அடங்கியுள்ளது. பொருள் மயமாகவே நமது வாழ்க்கையைப் பார்ப்பதை விட வேறு உயரிய இலட்சி யங்களிலிருந்து—பொதுமை, தோழமை முதலிய இலட்சியங் களிலிருந்து—நாம் வாழ்க்கையைப் பார்ப்பது தெரிகிறது. பொருளாதாரப் பிரச்சினையுடன் பிற சமுதாயப் பிரச்சினைக ளும் தீர வேண்டும் என்பதற்காக நாம் போராடும் போது, நாம் படும் பலவகைத் தொல்லைகளையும், துயரங்களையும் எவ் வகையில் வெல்லுகிறோம்? பொருளாதாரத்தின் துணை கொண்டா? இல்லையே! எதிர்கால நம்பிக்கை கொண்டும் தோழமையில் இணைந்தும் இவற்றை வெல்லுகிறோம். இவ்வ ளவு தானா? நமது போராட்டத்தின் போது நாம் எதிர்ப்படும் தொல்லைகள், துயரங்கள் முதலியவற்றை வெல்லுவதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சிகளின் வழியே, நாம் வளர்ந்து வருவதை, பலம் பெறுவதைப் பார்க்கிறோம். நாளுக்கு நாள்

புதிய உறவுகளில், புதிய சூழல்களில், புதிய ஆற்றல்களுடன் நாம் விரிவதை நாம் உணர்கிறோம். நாம் சந்திக்கும் பிரச்சினைகளை, நாம் சரியாக அணுகுவதன் மூலம், நாம விரிந்து வளர்வதை அனுபவிக்கிறோம். பிரச்சினைகளே நம்மை வளர்ப்பதனால், அவற்றை நாம் நேசிக்கத் தொடங்கி விடுகிறோம். இடையிலே சாவையே சந்திக்க நேர்ந்த போதிலும் நாம் அதனை எதிர்கொண்டு வெற்றி பெறும் மனநிலையைப்பெற்று விடுகிறோம். பிரச்சினைகளை முதலில் தடைகள் போல, சிக்கல்கள் போலச் சிந்திக்கத் தொடங்கி, அவற்றைத் தீர்க்கும் முறைகளைப் பயின்ற நிலையில், —பிரச்சினைகள் நம்மை ஆண்டதிலிருந்து விடுதலை பெற்று பிரச்சினைகளை நாம் ஆளுவதாகிய சுதந்திரத்தைப் பெறுகின்றோம். பிரச்சினைகளே நமது சுதந்திரத்தை, அவற்றைச் சரிவர அணுகுவதன்மூலம் நமக்கு வழங்குகின்றன. இந்நிலையில் வாழ்க்கை, நமக்கு வாழத்தக்க பெருமை உடையதாகிறது; வாழத்தக்க எளிமையுடையதாகிறது. பிரச்சினைகள் மோத மோத, அவற்றைத் தீர்க்கும் முறையிலேயே, பழைய சிறிய உறவுகள் கழன்று புதிய, பெரிய, பெருமைக்குரிய உறவுகளை நாம் பெறுகின்றோம். சமுதாயத்தின் விரிந்த பரப்பை, ஆற்றல்களை, அழகுகளை, சுதந்திரத்தை, தன வயமாக்கிக் கொண்ட இந்த வாழ்க்கை, வாழத்தக்க வாழக்கையாகிறது. ஒரு சிலரிடம் ஏற்படும் இந்த வாழ்க்கை. சுற்றிலுமுள்ள அனைவரையும் கவரத்தக்க வாழ்வாகிறது. இது சமுதாயத்தில் தோன்றியுள்ள புதிய வாழ்க்கை முறையாகிறது.

எதிர்கால நோக்கில் விரிந்து வரும் இந்த வாழ்க்கைக்குள், எதிர்காலம் நிகழ் காலத்திற்குள் வந்து விடுகிறது. இன்னொரு வகையில் கூறினல் இத்தகைய வாழக்கையை வாழ்பவர், எதிர்காலத்திற்குள் பிரவேசித்தவர்களாவார்கள். நாம் எதிர் கொள்ள விரும்பும் கம்யூனிச சமுதாயத்திற்குள் இவர்கள் பிரவேசிக்கிறார்கள். ஆன்மீக ரீதியில் இவர்கள் அந்தச் சமுதாயத்தில் இருக்கிறார்கள். அந்தச் சமுதாயத்தின் விடுதலையை, பேரின்பத்தை அவர்கள் நிகழ்காலத்திலிருந்தே

அனுபவிக்கிறார்கள். இதனால் தான் இவர்கள் தமது இயக்கத்தை விட்டு வர மறுக்கிறார்கள்.

மார்க்ஸியவாதிகள் என்று தம்மைக் கூறிக் கொள்பவர்களில் பலர், சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ இம்மனநிலையை வாய்க்கப் பெற்றவர்கள். இந்த மனநிலை தான் இவர்கள் தமக்கு வரும் துன்ப, துயரங்களை ஏற்கச் செய்கிறது. அவற்றால் பாதகமான முறையில் பாதிக்கப்படாமல், சாந்தமான முறையிலேயே பாதிப்புக்கு உள்ளாகிறது. இத்தகைய பண்புகளை இவர்கள் தம்மிடம் தக்க வைத்துக் கொள்வதன் மூலம் நிச்சயம், மார்க்ஸியத்தின் கலாசாரத்தின் சக்தியைப் பிரகடனம் செய்கிறார்கள். உலகில் புதிய உறவுகளை வெளிப்படுத்துகிறார்கள். தமது ஆன்மீகத்தின் ஆக்கத்தை இவர்கள் உலகக் கலாசாரத்திற்கு நன்கொடையாக்குகிறார்கள். இவர்கள் நிச்சயம் உலகிற்கு உப்பாகிறார்கள்; இனிப்பாகிறார்கள்; உரமாகிறார்கள்.

இத்தகையதொரு உன்னதமான உணர்வைப் பெற்ற நிலையில்தான், இவர்கள் தமது வாழ்க்கையில் நிறைவினை அனுபவிக்கிறார்கள். சமுதாயத்தின் வாழ்வை இவர்கள் தமக்குள் இவ்வகையில் எதிர் கொள்வதனாலேயே இவ்வாறு வாழ்கிறார்கள். இவர்கள் மனத்தில் சிறுமைக் குணங்கள், கேவலங்கள், அறிவுக்கு மீறிய ஆத்திரங்கள் முதலிய குற்றங்கள் குறைகள் இல்லை. இவர்கள் சமுதாயமாகவும் நாமாகவும் இருக்கிறார்கள். இரண்டும் ஒன்றுக்குள் மற்றது தாராளமாகப் பிரவேசிக்கும் நிலையில் இருக்கிறார்கள். தம்மை முற்றாக இழந்திருப்பார்களானால் இவர்களிடம் சமுதாயத்தின் தாக்கம் நடைபெற முடியாது; அதுபோலவே இவர்கள் சமுதாயத்தின் மீது பாதிப்பைச் செலுத்தவும் முடியாது. சிறுமைக் குணங்களை இழந்த நிலையிலேயே உயரிய குணங்களை இவர்கள் பெற்றவர்கள். புறத்தோற்றத்தில் பார்த்தால் இவர்களுக்கென் வாழ்க்கை இல்லாதது போலவே தோன்றும்.

அந்த அளவுக்கு இவர்கள் தமக்குத் தனி வாழ்க்கையை இழந்து, இயக்கத்தின் வாழ்வை உடையவர்கள். உண்மையில் இவர்களது அக வாழ்க்கை, ஆற்றல் மிக்கது; பேரழகு வாய்ந்தது; மனிதனின் அழகை, உலகத்தின் அழகை, உலகியல் ஆற்றல்களின் அழகை, இவர்கள் அதிகம் இரசிப்பவர்கள். அர்த்தமற்ற ஆத்திரங்கள், அவசரங்கள், கோப தாபங்கள், சதிகள், கிண்டல்கள், கேலிகள், அனுபவித்தல்கள், இவர்களுக்குத் தேவையே இல்லை. இதனால் தான் இவர்கள் தாம் எதிர்பார்த்த சமுதாயம், பரு வடிவில் வரவில்லையே என்பதைக் கூட ஒரு மனக்குறையாக கருதிக் குமைவதில்லை; ஆத்திரங் கொள்வதில்லை.

7

நமது இந்திய கலாசாரத்திலிருந்துதான் இந்தப் புதிய கலாசாரத்தை வகுத்துக்கொள்கிறோம்

இந்தப் புதிய கலாசாரத்தை நாம் எங்கிருந்து பெறுகிறோம்? முற்றாக எதிர் காலத்திலிருந்து நாம் பெற முடியாது. வெளியிலிருந்தும் பெற முடியாது. நிகழ் காலத்துடன் தொடர்பற்ற நிலையில் எதிர்காலமோ, நமது சொந்த வரலாற்றுடன் தொடர்பற்ற நிலையில் புறத்திலிருந்தோ இது நமக்கு வந்து சேர முடியாது. நிச்சயம் இந்தக் கலாசாரம் ஏற்கனவே நமது வரலாற்றில், நமது வாழ்வில், நமது காலத்தில் இல்லை என்றால், முற்றிலும் புதியதொரு கலாசாரத்தை நாம் உருவாக்கிக் கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியாது.

அப்படியானுல் நமது இந்தியக் கலாசாரத்திலிருந்தே இந்தப் புதிய கலாசாரத்தை நாம் வகுத்துக் கொள்கிறேம் என்பது உண்மையாகிறது.

இந்தியக் கலாசாரத்தின் மேன்மைகளைப் பற்றி ஒரு சமய வாதி போல, ஒரு குறுகிய தேசியவாதி போல நம்மால் பேச முடியாது. இந்தியக் கலாசாரத்தின் அனைத்து அம்சங்களை யும் நாம் பாராட்டவோ ஏற்கவோ முடியாது. ஆனுல் அதே சமயம், இந்தியக் கலாசாரத்தின் சில பொதுப் பண்புகளை நாம் பார்க்கத் தவற முடியாது. இந்தியாவில் சமய வகைகள் பல தோன்றின. பல்வகையான கலைகள், இலக்கியங்கள், காலங்காலமாகத் தோன்றி வளர்ந்திருக்கின்றன. இந்தியச் சூழலின் தூண்டுதல் இல்லாமல் இவை தோன்றியிருக்க, வளர்ந்திருக்க முடியாது. குறிப்பிட்ட சூழல்களில் தோன்றிய இவை மக்களின் மனத்தைப் பாதித்த முறை மிகக் கவர்ச்சி யானது.

இந்தியச் சமயங்களில் பலவகைகளில் கூறப்பட்ட தெய் வங்களை நாம் ஏற்பதற்கில்லை. ஆனுல் இந்தத் தெய்வங்களைப் பற்றிய வருணனைகள் நம்மை நிறுத்திச் சிந்திக்க வைக்கின் றன. மனித வாழ்க்கையின் குறிப்பிட்ட வரையறைகளிலி ருந்து மனிதர்களை விடுவித்து, மனித வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேற்பட்ட, ஓர் உலகப் பொதுமைக் குள், அண்டப் பொதுமைக்குள் மனித வாழ்க்கையை இச் சமயங்கள் விரிக்கின்றன. மனித வாழ்க்கையிலுள்ள அவலங் கள் குறைகள், கேவலங்கள், போதாமைகள், ஆகியவை தான் மனிதனை இந்த உலகப் பொதுமைக்குள் துரத்துவன வாதல் வேண்டும். அப்படியானுல், மனித வாழ்க்கையின் குறுகிய எல்லைகளை உடைத்துக் கொள்வதில் இந்தியர்க்கு இருந்த அளவற்ற ஆர்வத்தை, அவ்வாறு உடைத்துக் கொள்வதன் மூலம் பெறுவதற்குரிய எல்லையற்ற விரிவை, பேரின்பத்தை, விடுதலையை, நிர்வாண நிலையை, முக்தி நிலையை, நாம் அறிவது சாத்தியமாகிறது. குறுகிய உடலியல்

வரையறையிலிருந்து, பொருள் வகையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இந்தியாவில் கோடிக்கணக்கானவர்கள் முயற்சி செய்ததை நாம் அறிவோம். இந்திய வாழ்க்கையில் அவலங்கள், குறுகிய நோக்கங்கள், சாதிவகைகள், பொருட்பாரங்கள், ஆடம்பரங்கள் முதலியன சேர்ந்த காலங்களிலெல்லாம், இந்திய வாழ்க்கை இவற்றுக்குள் முடங்கி விடுவதைப் பொறுக்க முடியாமல் தன்னைத்தானே பலமுறை உரித்துக் கொண்டதைப் பார்க்கிறோம். தவ முனிவர்களுக்கும் யோகியர்க்கும் இந்தியாவில் இருந்த செல்வாக்கு இதைப் புலப்படுத்துகிறது. இந்திய வாழ்வின் எல்லை ஒரு கோடிக்குச் சென்றபோதெல்லாம், வாழ்க்கை அதை மறுத்து விட்டு மறுகோடிக்குச் சென்றதை பல முறையும் பார்க்கிறோம். இந்தியாவின் மீது பல முறை நேர்ந்த படையெடுப்புகள், இந்தியாவுக்குள் நேர்ந்த பற்பல போர்கள், கலகங்கள் முதலியவை, இந்திய வாழ்வின் பிரச்னைகளை அதிகரிக்க வைத்ததன் மூலமும் இந்திய வாழ்க்கை இத்தகைய தத்துவார்த்த விரிவை நோக்கி இயங்கியிருப்பது சாத்தியமே— மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகியவற்றிலிருந்து மனிதர்கள் தம்மை விடுவித்துக் கொள்ள நடத்திய போராட்டம், இந்தியாவில் வியக்கத் தகு சாதனைகளைக் கொண்டதாக இருக்கிறது.

வாழ்வின் குறைகளைச் சரிவர மதிப்பிடுவதில், தீர்க்க மேற்கொண்ட முயற்சிகளில், அக்கால நிலைக்கேற்ப குறைகள் இருக்க முடியும். ஆனால் இவற்றினூடே இயங்கிய ஓர் இயக்கம் குறுகிய சூழலிலிருந்து விரிந்த சூழல்; குறுகிய சிந்தனைகளிலிருந்து விரிந்த சிந்தனை; எல்லைக்குட்பட்டதிலிருந்து எல்லைக்கு அப்பாற்பட்டது என்ற இந்தவகை இயக்கம் தான் நம்மை மிகக் கவர்கிறது. அதாவது மனிதவாழ்க்கை குறுகிய எல்லைகளுக்குள் சுழலும் போதெல்லாம், தனது குறுகிய எல்லைகளுக்குள் இயங்க முடியாமல், உடைத்துக் கொண்டு, கலகம் செய்து, வெளிக்கிளம்பிப் பெரிய எல்லைகளை நாடுகிறது. பேரெல்லையாக இவர்கள் இறைவனைக்

கண்டார்கள்; அல்லது பரப்பிரம்மத்தை, சூனியத்தைக் கண்டார்கள். அந்தப் பேரெல்லைகளில் உலவ முயன்று, பல சமயங்களில் முடியாமல் திரும்பி இறங்கியும் வந்தார்கள். ஆனால் இந்தப் பயணத்தின் போது, உண்மைகள் பலவற்றைத் தொகுத்துக் கொண்டார்கள்.

இத்தகைய முயற்சி மேற்கொண்டவர்கள், சமுதாயத்தில் எண்ணிக்கையில் சிலராகவே இருந்திருக்க முடியும். ஆனால் சமுதாயத்தில் இயங்கும் ஒரு போக்கின் வெளியீடாகவே இவர்கள் இருந்திருக்கமுடியும். வாழ்க்கை-விருப்புக்கோ வெறுப்புக்கோ இடமற்ற ஒரு சமுதாயத்தில் இப்போக்கு நிலவ முடியாது. இந்திய சமுதாயத்தில் இந்நிலைகள் நிறைய இருந்தன என்பது உண்மை. வளமான வாழ்க்கையும், வறிய வாழ்க்கையும் நெடுங்காலமாக இந்தியாவில் அடுத்தடுத்தே, ஒன்றைச் சார்ந்து மற்றதுஇருந்தன. இந்நிலையில் வாழ்க்கை-விருப்பும், வெறுப்பும் இந்தியாவில் நெடுங்காலமாக, கூர்மையாக நிலவி வந்தன. சமுதாயத்தில் பரவலாக நிலவிய இப்போக்கின் கூர்மையான வடிவங்களே ஒரு புறத்தில் ஆடம்பர வாழ்க்கையும் மறுபுறத்தில் துறவுமாக இருந்தன.

இந்திய வாழ்வின் செழிப்பும், வறுமையும் இரு பெரு முரண்களாக இருந்து தூண்டியமையின் ஒரு விளைவு சமயமாக இருக்க, பிற விளைவுகளாகக் கலைகளும் இலக்கியமும் இருந்தன. ஒரு சிலருக்கு வாழ்க்கை ஆடம்பரம் மிக்கதாக, அழகு மிக்கதாக இருந்தது. பலர்க்கு வாழ்க்கை நிலைகள் வறியதாக, அழகு அற்றதாக இருந்தது. இந்நிலையில் தான் ஒரு சிலர் வாழ்வில் காணப்பட்ட ஆடம்பரத்தை, அழகை, மற்றவர்கள் தங்கள் கற்பனையிலாவது தம்முடன் நிறைத்துக் கொள்ள வேண்டி வளமார்ந்த கற்பனைகள் எழுந்தன. அற்புதமான சிற்பங்களும், ஓவியங்களும் இவ்வகையிலேயே எழுந்திருக்க வேண்டும். இசையும் நடனமும் கூட இச்சூழ்நிலேயே வளர்ந்திருக்கக் கூடும். இவ்வகைக் கலைகள் இந்தியாவில் உன்னத நிலையை எட்டின. இக்கலைகள் மூலம்ர்க்

இந்தியக் கலைஞர்களும், கலா ரசிகர்களும் தமது பொருள் வகை வாழ்க்கை எல்லையிலிருந்து விடுபட்டுக் கலை வகைப் பட்ட பொதுமைக்குள் இயங்கினர். தமது குறுகிய எல்லை யிலிருந்து விடுபட்டு விரிந்த எல்லைக்குள் இவர்கள் இயங்கி னர். அழகியலின் விரிந்த பதிப்பில் இவர்கள் சுதந்திரமாகப் பயணம் மேற்கொண்டனர். வாழ்க்கையிலிருந்து இவர்கள் அஞ்சி கலைக்குள் தப்பி ஓடி ஒளிந்து கொண்டனர் என்பதை விட, சாதாரணப் பொருள் வகைப்பட்ட வாழ்க்கையிலிருந்து விலகியும் விலகாமலும், கலையுலகிற்குள் உயிர்த் துடிப்புடன் இயங்கினர். கலைக்குள் இவர்கள் சோர்ந்து கிடப்பதற்குப் பதி லாக கலைக்குள் இவர்கள் துடிப்புடன் இயங்கினர். பல சம யங்களில், அண்டம் தழுவிய இறையியலுடனும், இவர்கள் கலையின் வழி உறவு கொண்டனர். தமது பொருள் வகை வாழ்க்கையிலில்லாத அழகியலை இவ்வாறு இவர்கள் அகத் தில் பெருக்கி நின்றனர். உன்னதமான கலைஞர்களின் வாழ்க் கையில் மட்டுமல்லாமல், சாதாரணமாக அணிகலன்கள் செய்பவர், வண்ண ஆடைகள் புனைபவர், மாலைகள் கட்டுப வர் முதலியவர்கள் வாழ்விலும், இவற்றை அணிபவர்கள் என்ற வகையில் சமுதாயத்தில் பெரும்பாலானவர் வாழ்வி லும், இந்தியாவின் உன்னதமான கலைகளின் பாதிப்பு இருக் கவே செய்தது. இவற்றுடன், காலங்காலமாக நடைபெற்று வரும் கோயில் விழாக்கள் சம்பந்தப்பட்ட பல வகையான கலைநிகழ்ச்சிகள், தெருக்கூத்துகள் முதலியவற்றையும் நாம் சேர்த்துப் பார்த்தோமானால் இந்திய மக்கள் கலைகளிடம் கொண்ட பற்று விளங்கும். இக்கலைகள் மூலமாகவும் அவர்கள் தமது குறுகிய வாழ்விலிருந்து விடுபட வேண்டும், அந்த விரிந்த வாழ்க்கை அழகுடையதாகத் திகழ வேண்டும் என்று அவர்கள் விரும்பிய பேரார்வம் தெரிகிறது.

இந்திய மக்களுடன் மேற்குறிப்பிட்ட பொதுமைப் பண்பும், அழகியலும் காலங்காலமாகத் தொடர்ந்து வரு கின்றன. இவற்றுடன் காவியங்களும், இதிகாசங்களும் உணர்த்திய அறநெறிகளும் தொடர்ந்து வருகின்றன.

மக்கள் நடுவில் வாழ்ந்த சான்றோர்களும், கவிஞர்களும் உணர்த்திய, கடைப் பிடித்த நீதிகளும் மக்களுடன் சேர்ந்தே இயங்குகின்றன. நாம் வாழும் சமுதாயம், வாழப்போகும் சமுதாயம், பொதுமைப் பண்பு நிலவுவதாக, அழகுமிக்கதாக அறநெறி சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று அவர்கள் நெடுங்காலமாகவே சிந்தித்துச் செயல்பட்டு எதிர்பார்த்து வந்திருக்கிறார்கள். இந்தச் சூழலில்தான் மார்க்ஸியம் இவர்களை எதிர்ப்படுகிறது. இந்திய மக்கள் நெடுங்காலமாகப் போற்றிவரும் உயரிய ஆன்மீகக் குணங்களுடன் இணைவதில் தான் மார்க்ஸியத்தின் வெற்றி இருக்கிறது.

8

தந்திரசாலிகளால் எத்தகைய தத்துவமும் மாசுபட்டுப் போய்விடும்

இந்தியச் சூழலில் மார்க்ஸியம் பற்றி நாம் விவாதிக்கும்போது கடுமையான சிக்கல்களை நாம் எதிர்ப்படுகிறோம். ஆகவே நமது ஆய்வு முறை, நோக்கம் பற்றிய தெளிவை நாம் அடிக்கடி ஏற்படுத்திக் கொண்டாலொழிய நமது சிக்கல்கள் மேலும் அதிகரித்து விடும் போலத் தெரிகிறது. சரியாகச் சொன்னால், இதில் நமக்குத் தெளிவு இல்லை என்றால், நமது தெளிவற்ற ஆய்வு முறையே கூட, நாம் விடுவிக்க எடுத்துக் கொண்ட சிக்கலை மேலும் சிக்கலாக்கி விடும் போலத் தெரிகிறது.

நமக்கு முன் சில கேள்விகள் எழுகின்றன. இந்தியாவின் வாழ்க்கை முறையை ஆராயும் போது, அந்த வாழ்க்கை முறையின் சிறந்த அம்சங்கள், மார்க்ஸிய முறைக்கு—மார்க்ஸிய முறையிலான வாழ்க்கை முறைக்கு—இயைபு உடையனவா? அதாவது, இந்திய வாழ்க்கை முறையின் உயர் வகைப்பட்ட அம்சங்களை மார்க்ஸிய வாழ்க்கை முறைக்கும் இன்றியமையாத அம்சங்களாகக் கொள்ளலாமா? என்பது ஒரு கேள்வி. இவ்வாறு இருக்குமானால் இந்திய வாழ்க்கை முறையின் சிறந்த அம்சங்களைக் கொண்டு, பிற அம்சங்களை விமர்சனம் செய்வதன் மூலமே, இந்திய வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள முடியும். இதுவே மார்க்ஸியத்திற்கு அனுசரணையாக இருந்து விட முடியும்; அதாவது, மார்க்ஸியம் என்றதொரு புதிய கோட்பாட்டுக்குத் தேவையில்லாமலே கூட இந்திய வாழ்க்கை முறை அத்தகையதொரு புதிய கோட்பாட்டைத் தனக்குள்ளிருந்தே தோற்றுவித்துக் கொள்ள முடியும்.

இன்னொரு கேள்வி: இந்திய வாழ்க்கை முறையின் சிறந்த அம்சங்கள் என்பவை, இந்திய மக்களின் எதிர்கால வாழ்வுக்கு நேரிடையாக வழி நடத்திச் செல்ல முடியாது. ஆகவே இந்திய வாழ்க்கை முறையை விமர்சனம் செய்து தான் இதைத் திருத்தியாக வேண்டும். அவ்வாறு விமர்சனம் செய்வதற்கு மார்க்ஸிய வாழ்க்கை முறை சரியான தத்துவம் தானா? இந்திய வாழ்க்கை முறையின் சிறந்த அம்சங்களே கூட எதிர்கால வாழ்வுக்குத் தேவையில்லை என்றும், மார்க்ஸிய முறையில் இந்த வாழ்க்கையை விமர்சனம் செய்துதான் திருத்தியாக வேண்டும் என்றும் நாம் கருதுவது உண்மையானால், ஒன்றில் நாம் உறுதியாக இருப்போம்; நாம் இந்திய வாழ்க்கை முறைக்குள் முற்றிலும் வேறான புதியதொரு தத்துவத்தைக் கொண்டு வருகிறோம். இந்திய வாழ்க்கை முறை, நிச்சயம், இத்தகைய நுழைப்புக்குக் கடுமையான எதிர்ப்பைக் காட்டக் கூடும்; மார்க்ஸியத்தைக் கூட இது கடுமையாகத் தாக்கி வெளியேற்றி விடவும் முடியும்.

இரண்டாவது வகைக் கண்ணோட்டத்தில் ஆபத்துக்கள் அதிகம் இருக்கின்றன என்பதனாலேயே நாம் முதல்வகைக் கண்ணோட்டத்தைத் தேர்கிறோமா? இது உண்மையானால் இவ்வகைத் தேர்வு, ஒரு வகையில், நேர்மையானதல்ல; நாம் தோற்று விடக் கூடாது, கேவலப்பட்டு விடக் கூடாது என்பதற்காகத் தந்திரமாக ஒரு கண்ணோட்டத்தைத் தேர்வோமானால், இந்தச் சமுதாயத்தின் பிரச்னைகளில் நமக்கு இன்றியமையாத அக்கறை இல்லை என்பது வெளிப்படை; அத்துடன் இத்தகைய தந்திரசாலிகளால் எத்தகைய உயரிய தத்துவமும் மாசுபட்டுப் போய்விடும். இத்தகையவர்கள் தம்மையறியாமலேயே, மார்க்ஸியத்தைக் கேவலப்படுத்துகிறவர்கள். இதற்காகத்தான் நமக்கு மார்க்ஸியம் தேவை என்றால் இத்தகைய மார்க்ஸியத்தை நாம் காப்பாற்ற முடியாது என்பது மட்டுமல்ல; இந்த மார்க்ஸியம் நம்மைக் காப்பாற்றவும் முடியாது.

நமது கண்ணோட்டத்திலுள்ள சாதக, பாதகமான அம்சங்கள் இவ்வாறு இருக்க, இந்த அம்சங்களிலிருந்தே நாம் எடுத்துக் கொண்ட சிக்கலை ஆராய்வது கூட ஒரு வகையில் நம்மைக் கட்டுப்படுத்துவதாகி விடும். ஆகவே, முற்றிலும் திறந்த மனத்தோடும், நாம் எதிர்ப்படும் ஆபத்துக்களையும் அவலங்களையும் நாம் சந்திக்க அச்சமற்று, ஆராய்வதும் தான் நம்மைக் காப்பாற்றும்.

9

இந்தியச் சமுதாயத்தில் இறைமை கொண்டிருந்த ஆதிக்கத்தை இவ்வாறுதான் நாம் விளங்கிக் கொள்ள முடியும்

இந்திய வாழ்க்கை முறையில் கடவுள் நம்பிக்கை என்பது ஒரு உன்னதமான அம்சமாக இருந்து வந்திருக்கிறது. எல்லா வகையான ஆற்றல்களுக்கும் இருப்பிடமானவராகவும், எல்லா வகையான செயல்களுக்கு மூலமானவராகவும், எல்லா வகையான நன்மைகளையும் வழங்குபவராகவும் பேரின்பத்தைத் தம்மிடம் தாங்கியவராகவும் இந்தியர்களில் பெரும்பாலோர் கடவுளைப் பற்றிய கருத்துக் கொண்டவராக இருந்துள்ளார். கடவுளைப் பற்றி இத்தகைய வர்ணனைகளி

னூடே, இந்திய மக்களின் வாழ்க்கைத் தேவைகள், ஆசைகள் நமக்குத் தெரிய வருகின்றன. இது மட்டுமல்லாமல் இந்திய மக்கள் தம் வாழ்வில் எதிர்ப்படும் நன்மைகள், ஆற்றல்கள், வெற்றிகள் முதலியவை தமக்குள்ளிருந்தல்லாமல் தமக்கு அப்பாலிருந்து தமக்கு வந்து சேர்வதையும் உணர்ந்திருக்கிறார்கள். தம் வாழ்வின் நன்மைகளை மட்டும் அல்லாமல் தீமைகளையும், இன்பங்களை மட்டும் அல்லாமல் துன்பங்களையும், வெற்றிகளை மட்டும் அல்லாமல் தோல்விகளையும், ஆற்றல்களை மட்டும் அல்லாமல் அவலங்களையும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரித்துப் பார்க்க இயலாதவர்களாகி, தமது குறுகிய ஆசைகளிலிருந்து விடுபட்டு விரிந்ததொரு கண்ணோட்டத்தின் வழியே—ஒரு கடவுட் கண்ணோத்தின் வழியே—பார்க்க முயன்றிருக்கின்றனர். அந்தக் கடவுட் கண்ணோட்டத்தைத் தாம் பெறும் வகையிலேயே வெற்றி, தோல்விகளைப் பற்றிய இருமைக் கண்ணோட்டத்தை இழந்து, ஒருமைக் கண்ணோட்டத்தைப் பெற முயன்றனர். இருமைக் கண்ணோட்டத்தில் பிரச்சினைகளைப் பார்ப்பதை விட ஒருமைக் கண்ணோட்டததில் பிரச்சினைகளைப் பார்ப்பது மேலும் சரியான கண்ணோட்டமாக இருக்க முடியும் என்று கருதியிருக்கின்றனர். அத்துடன் தங்கள் வாழ்வின் தோல்விகள், துயரங்கள், முதலியன தீர வேண்டும் என்று இவர்கள் விரும்பியிருக்கின்றனர். இவற்றுக்கு மேலாக, கடவுள் என்ற உயரிய நிலையை, தம்முள் வயப்படுத்திக் கொள்ள அவர்கள் விரும்பியதன் மூலம், கடவுளைப் பற்றிய இவர்களது வருணனைகளில் அடங்கியுள்ள பேராற்றல், பேரின்பம், முதலியவை தங்கள் வாழ்வில் வசப்பட வேண்டும் என்று இவர்கள் விரும்பியிருப்பதும் தெரிகிறது.

மேற்குறிப்பிட்ட தெய்வீக நிலையை அடைவதற்கான தூண்டுதலாகவே இந்தியர்களின் கலை இலக்கியங்களில் பெரும்பகுதி இருந்துவந்ததைப் பார்க்கிறோம். ஒரு உயர் வகையான, புலன்களுக்கு அப்பாற்பட்ட, தியான நிலையை

ஆன்மீக நிலையைத் தூண்டும் முறையிலேயே இசை, இலக்கியம், சிற்பம் முதலிய கலைகள், செயல்பட்டன; அல்லது இந்த ஆன்மீக வெற்றியைத் தமக்குள் இருத்தி வைப்பதற்காக இக்கலைகள் செயல்பட்டன. இந்தியர் வாழ்வின் உன்னத, இலட்சிய நிலையை நோக்கிய பயணத்தின் துணைவர்களாக, வெற்றியைச் சாதிப்பவர்களாகக் கலை, இலக்கியங்கள் இயங்கின. புலன்களுக்கு அப்பாற்பட்ட, பேரின்பமயமான, உலகியற்குற்றங்களால் பாதிக்கப் படாத, உயரிய தெய்வீக நிலையை தமக்குள் சாதித்து விட வேண்டும் என்ற முயற்சியில், இந்தியக் கலைகள், சாதாரண உலகியல் வரையறைகளைக் கடந்து, விடுதலையுணர்வின் பரப்பு முழுவதும் இயங்கின. அதி நுண்மையை ஒலி வடிவிற்குள் கொண்டு வரும் இசை; பக்தி பரவசத்தை அமுதமெனப் பொழியச் செய்யும் இசை; உடலியக்கத்தின் எல்லையில் இயங்கும் நாட்டியம்; சிந்தனு ரீதியான கற்பனையின் உயர்வகையில் இயங்கும் காவியங்கள்; உன்னதத்தை எட்டுவதற்காக 'வானளாவிய' கோபுரங்கள்; உன்னதமான தெய்வீக நிலையை மனத்திற்குள் இருந்து கல்லுக்குள் நேரிடையாக வழங்கச் செய்த சிற்பக் கோலங்கள் முதலியன, இந்தியர் செய்த பெருமுயற்சியின் சின்னங்களாக நிலவுகின்றன; தமது குற்றங்கள், குறைகள், இன்பங்கள் துன்பங்கள் வழியே இவற்றைக் கடந்து பேரின்பத்தை, பேரெல்லையை, தமக்குள் தொட முயன்ற இந்திய வாழ்க்கை முறையின் சாதனைகளே இக்கலைப் படைப்புக்கள். கலைஞர்களும், சமயவாதிகளும் மட்டுமல்லாமல், சாதாரணமான மனிதர்களையும் பக்திப் பரவச நிலைக்கு உள்ளாக்கிய ஒரு வாழ்க்கை முறையின் வெளிப்பாடுகள் இவை. இவ்வகைப் பரவசத்தின் போதே, அவர்கள் தம் வாழ்க்கை எல்லைக்குள் நிறைவைக் கண்டார்கள். வாழ்வதற்கான ஆற்றலை, தேவையை இந்நிறைவே அவர்களுக்குத் தந்தது.

இவ்வகைப் படைப்புக்களிடையே, அவர்கள் தம புலன்களுக்கப்பாற் பட்ட மெய்ம்மை பற்றிக் கொண்ட கருத்து புலப்படுகிறது. தாங்கள் அனுபவிக்கத் துடித்த, சாதிக்க

விரும்பிய அந்தப் புலன்களுக்கப்பாற்பட்ட மெய்ம்மை, இசை நயங்களில், ஒலி வண்ணங்களில், அழகுக் கோலங்களில், கற்பனை நயங்களில், தியான நிலைகளில் தமக்கு வசப்பட்ட தாக அவர்கள் கருதியது தெரிகிறது. அதாவது தங்களது இசையின் மூலம், கவி நயங்களின் மூலம், அழகியல் உணர் வின் மூலம் தம் புலன்களைக் கடந்த பரவச நிலை, உன்னத நிலையை அவர்கள் சாதிப்பதாக உணர்ந்தனர். தெய்வீக நிலை என்று அவர்கள் கருதியது, கலை நயத்திலிருந்து பிரிவு படாத தாக இருப்பதை அவர்கள் உணர்ந்தனர்.

இந்தியாவில் இருந்த பலவகைச் சமயங்களும் இந்த ஒரே வகை அனுபவத்தைத் தான் தமக்கு மையமாகக் கொண்டி ருந்தனவா என்ற கேள்வி இங்கு எழலாம். ஒருமை, இருமை, மும்மை வகைக் கோட்பாடுகளைக் கொண்ட பல சமயங்க ளும், சூனியம், நிர்வாண நிலை ஆகியவற்றைக் கொண்ட சம யங்களும், தமக்குள் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதிலும், கூடியவரை, இத்தகைய புலன் கடந்த தியான நிலையிலேயே ஐக்கியப் பட்டிருந்தன என்று கருதுவதற்கு அதிக இடம் இருக்கிறது. ஆகவே இந்தக் கேள்வியில் நாம் இப்போது நமது கவனத்தை முழுமையாகச் செலுத்த வேண் டுவதில்லை என்று கருதுகிறேன்.

இந்தியர்கள் தமக்கு இலட்சியமாக வகுத்துக் கொண்ட கடவுளுடன் ஐக்கியப் படுதல்—ஒருமைப் படுதல் என்பது, தமது குறிப்பிட்ட காலத்திற்கு வசப்பட்ட, இடம் முதலிய நிலைமைகளுக்கு வசப்பட்ட, உடலுக்கும் புலன்களுக்கும் வசப்பட்ட குறுகிய சூழல்களிலிருந்து விடுபட்டு, காலங் கடந்து, இடம் முதலிய வரையறைகளால் கட்டுப்படுத்தப் படாத, புலன்களுக்கப்பாற்பட்டதொரு மெய்ம்மையில் தங் களைக் கலந்து கொள்வது என்ற பெரு முயற்சியாகிய நிகழ்ச்சிப் போக்கேயாகும். காலம், இடம் முதலிய வரை யறைகளிலிருந்து விடுபட்ட, இவற்றால் பாதிக்கப் படாத மெய்ம்மை ஒன்று, தனித்து இருந்ததாக இதற்குப் பொருள்

படுமா என்ற கேள்வி நியாயமானது. அப்படியொன்று இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் மனிதனுக்கு அதனை அடையமுடியுமா? என்ற கேள்வியும் நியாயமான கேள்வியேயாகும். இந்தக்கேள்வி, இந்தியர்களின் மத்தியிலேயே கடுமையாக எழுந்த சமயங்களில்தான், அத்தகையதொரு மெய்மமை, இறைமை அறவே இல்லை என்றும், காலம், இடம், குணம் முதலியவற்றால் பாதிக்கப் படாத அந்த மெய்ம்மை நிர்க்குண பிரம்மம் என்றும், ஒன்றும் அற்ற வெறுமை, சூனியம் அது என்றும், கடுமையாக கருத்து வேறுபாடுகள் இந்தியச் சமயவாதிகளுக்கிடையில் எழுந்தன. இறுதி மெய்ம்மை எது என்பதில் கருத்து வேறுபாடுகள் தோன்றிய போதிலும், இறுதி மெய்ம்மையை அடைவதற்கான தியான முறையில் இரு வேறுபட்ட கருத்துடையவரும் இணைந்து நிறைவு காணவும் முடிந்தது. புலன் அனுபவங்களைக் கொண்டு அதிலிருந்து விலகிய நிலையில் சிந்தனை நிலையிலும், பின்னர் புலன் அனுபவங்களின் தொடர்பற்ற தூய சிந்தனை நிலையிலும் இந்தியச் சமய வாதிகள் தைரியமாக இயங்கினர். நிகழ்ச்சிப் போக்கின் இயக்கத்தை அதன் தூய இறுதி நிலைவரை விடாது பற்றிச் சென்றனர். அதனை ஒரு விளைவாகத் 'தானே அனைத்தும்; தானே பிரம்மம்' என்ற நிலைக்கும் போய்ச் சேர்ந்தனர்; அதன் மறுதலையாக 'நானே பொருள்; நானே உலகம்; உலகியலைத் தவிர வேறு எதுவும் உண்மையில்லை' என்ற உலகாயதக் கோட்பாட்டையும் கண்டறிந்தனர். புலன் கடந்த மெய்ம்மை, வெவ்வேறு வருணனைகளுக்கும் இடமளிப்பதாக இருப்பதனால் தான், தங்களுக்கிடையில் வருணனைகளில் அவர்கள் கடுமையாக வேறுபட்ட போதிலும், தங்களுக்கிடையில் வேற்றுமைக்குள்ளும் ஓர் ஐக்கியத்தை அவர்கள் இடைவிடாமல் காத்தனர். மெய்ம்மைக்கு ஆயிரம் முகங்கள்; பேய் முகமும் அவற்றில் ஒன்று; இன்மையும் இன்னொன்று என்ற பரந்த நிலையை அவர்களால் எளிதாக மேற்கொள்ள முடிந்தது. இவர்கள் வகுத்த இறைவர்கள்—சிவன், காளி, திருமால் முதலிய தெய்வங்கள் இத்தகைய முரண்பட்ட தன்மைகள் தமக்குள்

இணைந்தவையாக இருந்த உண்மை இதுவேயாகும். கடவுளை முற்றாக மறுக்கும் புத்த சமய வாதிகளும், கடவுள் மயமாகி விட்டதாகத் தம்மைக் கருதிய அத்வைத வாதிகளும் பல சமயங்களில் தமது அனுபவங்களில் ஒருமைப் பட்டது, இந்தியச் சமய வரலாற்றில் காணப்படும் வியக்கத்தகு நிகழ்வாகும். பல சமயங்களில் இவர்கள் தமது புலன் வகைப்பட்ட உலகிலிருந்து, புலன்களுக்கு உட்படாத தூய மன நிலையை நோக்கிய பயணத்திலேயே குறியாக இருந்தது நன்றாகப் புலப்படுகிறது. இறையைத் தேடத் தொடங்கியவர்கள், இறைமையைத் தமக்குள்ளே உருவாக்கிக் கொள்ளத்தக்க முயற்சியிலேயே தமக்கு விடுதலையைச் சாதித்துக் கொள்ள முயன்றனர்.

இவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை நாம் வேறு வகையிலும் விளக்கலாம். இயற்கையில் தாம் கண்ட பேராற்றலுடன் இவர்கள் ஒன்றுபட விரும்பினர்கள். இயற்கையில் தமது காலத்தில் வசப்பட்டிருந்த ஆற்றல்கள் சில தமக்குப் போதாமையினால், இயற்கையுடன் முழுமையாக ஒன்றுபட்டு, இயற்கையின் அனைத்து ஆற்றலையும் தம் வசப்படுத்த அவர்கள் விரும்பினர்கள். சூரியன், சந்திரன, வானம், மழை முதலியவை தமக்குகந்த முறையில் இயங்குவதை அவர்கள் விரும்பினர்கள்; அது போலவே, தமக்கு வசப்பட்ட இயற்கையின் அழகுகளுடன் எல்லா அழகுகளும் வசப்பட்டு விட வேண்டும் என்று அவர்கள் விரும்பினர்கள். தம்மிடமும், தம்மைச் சூழ்ந்துள்ளவர்களிடமும், உள்ள நோய், நொடிகள், பலவீனங்கள், குறைகள், குறைபாடுகள் முதலியன நீங்கி, சமுதாய அளவில் பேராற்றலுடன், பேரின்பத்துடன் தாங்கள் இருக்க வேண்டும் என்று விரும்பினர்கள். தமது வாழ்வுக்காகத் தாங்கள் கொண்டுள்ள குறைகள், கேவலங்கள், குற்றங்களிலிருந்து நாம் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினர்கள்; பல சமயங்களில் தீய நோக்கங்களுடன் தாங்கள் செயல்படுவதனாலேயே சிறுமைப்பட்டுப் போகும் நிலையிலிருந்து தாங்கள் விடுதலை பெற்று, அனைவர்க்குமான

நன்மை நோக்கில், அத்தகையதொரு விடுதலை நிலையில் தாங்கள் இயங்க வேண்டும் என்று விரும்பினார்கள். தமக்காக மட்டுமே வாழ்வதனால் தங்கள் புலன்களும் பொருள்களும் தம்மைச் சிறுமைப் படுத்துவதைக் கூர்மையாக உணர்ந்து, தம்மால் தம்மை இந்நிலையிலிருந்து விடுவித்துக் கொள்ளாத நிலையில், தம்மை விடுவித்தற்கென ஒரு மேலான சக்தியை அவர்கள் நாடினார்கள். இவர்கள் தம்மைத் தனித்தனி நபர்களாக்கும் சக்திகளை மறுத்துத் தங்களை ஒருமைப்படுத்தும், உன்னதப்படுத்தும் சக்திகளை நாடினார்கள். இந்த மேலான, உன்னதமான சக்தி என்பது, இவர்கள் தமக்குள்ளிருந்து, தம்மைச் சார்ந்தவர்களிலிருந்து, தமது செயல், சிந்தனை முறையிலிருந்து தாமே திரட்டிக் கொண்ட சக்தி தான்; அதாவது இவர்களுக்குள்ளிருந்தே, இவர்களின் சூழலிலிருந்தே இவர்களை இயக்கி வந்த சக்தி எதுவோ, அதையே இவர்கள் தமக்குள் அறியாத நிலையில் இறைமையாகக் கருதினர்.

இவ்வாறு மனிதர்கள் இறைவனைத் தரிசிக்க முடியுமே யொழிய, அதற்கு மாறாக, அண்டத்திற்கு அப்பாற்பட்ட உலகியற் செயல்களையெல்லாம் இயக்குகிற, மனித வாழ்வை நிர்ணயிக்கிற ஒரு இறைவனை மனிதர்கள் புறநிலைப் போக்கில் தரிசிப்பதோ, அல்லது அத்தகையதொரு இறைவன் கருணையுடன் மக்களுடன் தானேவந்து தொடர்பு கொள்வதாகக் கூறுவதோ சாத்தியமும் இல்லை; உண்மையும் இல்லை. இந்நிலையில், மனிதர்கள், தமது தேவைகளுக்கும், ஆர்வங்களுக்கும், இலட்சியங்களுக்கும் ஏற்ப தமக்குள்ளே ஒரு இலட்சிய உருவத்தைப் படைத்துக் கொண்டு, அதனைத் தமக்குள் செயல்படுத்திக் கொள்ளும், சாதித்துக் கொள்ளும் போக்கிலேயே இறைவன் எழுகிறான். அவ்வாறானால், இந்த இறைமைப் படைப்பிற்குள் சமுதாய வரலாற்றின் சாரம் இயங்குவதை நாம் மிகத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். அதாவது ஒரு சமுதாயத்தின் குறிப்பிட்ட வரலாற்று, பொருளியல், சமுதாய நிலைகளில்தான் இத்தகைய இலட்சிய

வடிவங்கள் எழுகின்றன. இந்த இலட்சிய வடிவங்களை உரு வாக்குவதில் மனிதனுடைய உணர்வுபூர்வமான செயல் முறையுடன் அதிகமாக உணர்வுக்கு அப்பாற்பட்ட செயல் முறையும் இயங்குகிறது. மனிதன் தனக்குள்ளேயே, தான் அறியாத முறையில், சமுதாயத்தின் பேராற்றல்கள், அனுப வங்கள், தனது காலங்கடந்த, எதிர் காலத்திற்குரிய தூண்டு தல் முதலியவற்றைக் கொண்டிருக்கிறான் என்பது உண்மை யாகிறது. வரலாறு இவனைப் பாதித்தது என்பது போலவே இவன் வரலாற்றைப் பாதிப்பது என்பது இவ்வகையிலேயே தொடர்ந்து நடைபெறுகிறது.

மனிதர்கள் தம்மைச் சூழ்ந்துள்ள அனைத்தும் தம் புலன் களின் வழியே தம்மைப் பாதிப்பதை உணர்ந்த நிலையில், தம்மை உருவாக்குவதை உணர்ந்த நிலையில், அண்டமும் அனைத்துமாக இருக்கும் இறைவன் தம்மைப் பாதிப்பதாக, உருவாக்குவதாகக் கருதினர். அண்டத்தின் பாதிப்பைத் தமது தேவைகளுக்கேற்பப் பெறுவதை விரும்பினார்கள். இதற்காக அந்த அண்டந்தழுவிய இறையுடன் தம்மைத் தொடர்பு படுத்திக் கொள்வதை விரும்பினார்கள். தமது வாழ்வில் தாம் கடைப்பிடிக்கும் வேண்டுதல்கள், சடங்கு முதலிய முறைகளை இதற்காகப் பயன்படுத்தினார்கள். மேலும் பல புதிய வேண்டுதல் முறைகள், சடங்கு முறைகளையும் உருவாக்கினார்கள். இன்று இல்லாவிட்டாலும் இன்னொரு காலத்தில், இங்கு இல்லாவிட்டாலும் இன்னோர் இடத்தில் தங்களுக்கு எல்லா நன்மைகளும் வாய்க்கும் என்று கருதி னார்கள். காலந்தோறும் சமுதாயச் சூழலில் மனிதர்கள் பெற்றுவரும் நன்மைகள் அதிகரித்து வரும் முறையில் இவர்கள் எதிர்பார்ப்புகளும் ஒருவகையில் நியாயமாகவே இருந்தன. இறையின் இலக்கணமாகத் தாங்கள் கண்ட பேராற்றல், பேரின்பம், விடுதலையுணர்வு முதலியவற்றைத் தாங்கள் இறையிடம் வேண்டிக்கொண்டதுடன், அவற் றைப் பெறுவதற்கான உழைப்பிலும் ஈடுபட்டனர்; நாளடை வில் சிறுகச் சிறுகவேனும் இவற்றைப் பெறத் தொடங்கினர்.

தங்களுக்கான நற்குணங்கள், நல்லாற்றல்கள் முதலியவற்றின் தோற்றத்திற்கான காரணம் பல சமயங்களில் தமக்குள் புலப்படாமையினால், தம்மைக்கடந்துள்ள சமுதாய அளவில்—அண்ட அளவில் விரிந்துள்ள இறைமையின் இயக்கமாகக்கருதி, இறைமையிடமிருந்து மேலும் பேராற்றல் முதலியவற்றைப் பெறவிரும்பினர். இவர்கள் உருவாக்கிக் கொண்ட இலட்சிய வடிவமாகிய இறைமை வடிவம், இவர்களைத் தம்மிடம் தாங்கி, இவர்களின் துன்ப துயரங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, இவர்களைக் காப்பாற்றுவதாகவும் இருந்தது. சமுதாயத்தின் குறிப்பிட்ட நிலைகளில் தாங்கள் அனுபவிக்கவேண்டிய துயரங்களையெல்லாம், ஒருவகையில் அவை சமுதாயத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையாக இருப்பதனால், குறிப்பிட்ட வடிவங்களில் அவை—துயரங்கள் நிகழும்போதெல்லாம், சமுதாய நோக்கில் அவை ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக இருப்பதனால், இறைமையிடம் ஓர் உலகு தழுவிய கண்ணோட்டத்துடன் தாங்கள் ஒன்றி தங்கள் துயரங்களை தாங்கள் ஆற்றிக் கொள்ளவும் செய்தனர்.

இந்திய சமுதாயத்தில் காலங்காலமாக இறைமை கொண்டிருந்த ஆதிக்கத்தை இவ்வாறுதான் நாம் விளங்கிக் கொள்ள முடியும். சமுதாயத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பலவகைகளில் தேவைப்பட்டதால்தான் இந்த இறைமை காலங்காலமாக பேராற்றலுடன், பேரழகுடன், மக்கள் வாழ்வில் இணைந்து கிடந்தது. அண்டம் தனக்குள்ளே உள்ள சுயவிதிகளைக் கொண்டு இயங்கிக்கொள்ளாதா என்ற சந்தேகம் எழுந்தபோது, அண்டத்திற்கப்பால் இறைவன் இருந்து, இந்த அண்டத்தைப் படைத்திருக்கவேண்டும் என்பதாகவும் இவர்கள் கருதலாயினர். இந்த அண்டம் ஒரு காலத்தில் படைக்கப்பட்டிருக்கவேண்டும் என்ற கருத்தில் அவர்கள் இவ்வாறு கூறலாயினர்.

10

தவிர்க்கமுடியாத சூழல்களில் ஆறுதலும்
தேவைப்பட்ட நிலையில் ஆற்றலும்
இந்த இறைமை வழங்கியேயிருக்கிறது.

மேற்குறிப்பிட்ட விவரணைகளிலிருந்து நாம சில வற்றைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

இறைமை என்று இவர்கள் கருதியது அண்டத்திற்கும், இயற்கைக்கும், மனிதவாழ்வுக்கும இடையருது உள்ள உறவைத்தான்.

சமுதாய அளவில், சமுதாயத்திற்குள் மக்கள் தமது வாழ்க்கைத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக,

உறவு கொண்ட போது, உழைத்த போது, புதியவற்றைக் கண்டபோது, உருவாக்கிய போது, அவற்ருல் அழகு பெற்ற போது, இன்பமடைந்த போது, விடுதலை பெற்ற போது, தாங்கள் அனுபவித்த உறவுப் புதுமைகள், இன்பப் புது மைகள், விடுதலைக் கோலங்களைத் தான்.

சமகால நிலைகளில் தவிர்க்க இயலாதபடி தாங்கள் துய ரங்களை அனுபவித்த போதிலும் இந்தத் துயரங்களினூடே எதிர் காலத்தில் இன்பம், விடுதலையை நுகர முடியும் என்ற நம்பிக்கையைத் தான்.

தமக்குள்ளிருந்தே எழும் புதிய சிந்தனைகள், கலைப்படைப் புக்கள், ஆக்கங்கள் முதலியவற்றைத்தான்.

அதாவது இயற்கைக்குள்ளே, சமுதாயத்திற்குள்ளே, தமக்குள்ளே இயங்கும் விதி முறைகளை —இவற்றுடன் ஒத்து அல்லது வேறுபட்டுத் தாங்கள் இயங்கும் முறைகளை — இவர்கள் இறைமை என்ற கருத்தாக்கத்தினுள் கொண்டிருந் தார்கள். இயற்கையினுள், சமுதாயத்தினுள் பல வகையான சூழல்களில் இயங்கும் மனிதர்கள், அவற்றின் மீது தமது பாதிப்பைச் செலுத்த வேண்டிய நிலையிலும், அவற்றின் பாதிப்பால் தாம் பாதிக்கப்பட்ட போது பாதுகாப்பிற்காகவும், தாம் அறியாமலேயே, அறிந்து உருவாக்கிக் கொள்ளா மலேயே, உருவாக்கிக் கொண்டது, உருவாக்கியது இறைமை. இந்த இறைமையை இவர்கள் தாங்கள் அறியா மலே உருவாக்கியதன் மூலம் இந்த இறைமையின் பாதிப்பு இவர்கள்மேல் அதிகம் இருந்தது. இதனுலேயே இவர்களுக்கு குறிப்பிட்ட கட்டங்களில் ஆறுதலாகவும் ஆற்றலாகவும் இருந்தது.

இந்த இறைமையின் உருவாக்கத்தில் மனிதர்களின் பங்கும் உண்டு என்று அறிந்து கொண்டவர்கள், அந்தப் பழங்கால நிலையிலேயே, அந்த இறைமையைக் களைய முயன்

றனர். ஆனாலும் சமுதாயத்தின் தேவையாக இருந்தமையால், அந்த இறைமையை அவர்கள் முற்றாகக் களைய முடியவில்லை என்பதுடன், அந்த இறைமையின் பாதிப்புக்கு நாளடைவில் இவர்களும் உள்ளாயினர். அத்துடன், இயற்கையின் ஆற்றல்களும், சமுதாயத்தின் இயக்க முறைமையும் இந்த இறைமையின் உருவத்திற்குள் இணைந்திருந்தமையால் இவற்றைத் தனியாகப் பிரித்தெடுத்து விளக்கத் தெரியாத கால நிலைமைகளில், இறைமைக்கருத்தை எவ்வளவு முயன்றபோதிலும் களைய முடியாது என்பதும் உண்மையாகிறது.

இந்தியாவில் இறைமையோடுதொடர்புகொண்டு காலங்காலமாக நடைபெற்று வரும் கோயில்கள், வழிபாடுகள், தேர்கள், திருவிழாக்கள், சிற்பங்கள், யாத்திரைகள், தவங்கள், மந்திரங்கள், சடங்குகள், சாத்திரங்கள், புராணங்கள் விதிக்கோட்பாடு, அவதாரங்கள், திருவிளையாடல்கள், தெய்வக் கலைகள்; பாடல்கள்; பக்திப்பரவசங்கள்; இவை சார்ந்த விநோதமான வியப்புக்குரிய நடைமுறைகள் முதலிய நூற்றுக்கணக்கான செயல்முறைகளை நாம் வேறு வகையில் விளக்கவே முடியாது. இந்திய மக்களை மூடர்கள், காட்டுமிராண்டிகள் என்று இகழ்வதன் மூலம், இந்திய மக்களின் வாழ்க்கை, சிந்தனைமுறை முதலியவற்றிலிருந்து நாம் விலகியே செல்கிறோம். மூடத்தனமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் நடைபெறுவதுபோன்ற தோற்றத்திற்கடியில் இந்திய மக்களின் நடைமுறை எவ்வளவு தூரம் அறிவார்ந்ததாக நடைபெற்றது என்பதை நாம பார்க்காவிட்டால் உண்மையை நாம் சரியாக அறிய முடியாது. இந்திய மக்கள் வாழ்க்கையை இவ்வாறுதான் நெடுங்காலமாக வாழ்ந்திருக்கின்றனர்.

இத்தகைய விவரணைகளிலிருந்து நாம் இன்னொன்றையும் தெளிவுபடுத்திக்கொள்ளலாம். இந்திய வரலாற்றின் தனித்தன்மை பற்றிப் பேசுகின்ற சிலர் குறிப்பிடுவது போல, இந்திய வாழ்க்கை காலங்காலமாக, நிம்மதியாக, நீரோட்டம்

போல, கொடுமைகள் இல்லாமல், பஞ்சம்பட்டினியில்லாமல், ஏற்றத் தாழ்வு இல்லாமல், நடைபெற்றது என்பது அறவே உண்மையல்ல. இப்படிப்பட்ட பிரச்னைகள் இல்லாத ஒரு சமுதாயத்திற்கு இந்தியாவில் இருந்தது போன்ற இறைமையும் இறைமை சார்ந்த நூற்றுக் கணக்கான கோலங்களும் தேவையே இல்லை. அப்படியானால், இந்திய மக்கள் வாழ்விலிருந்த கொடுமைகள், துன்பங்களை இவர்கள் உருவாக்கிக் கொண்ட இறைமையும் அதன் பலவகை வடிவங்களுமே சகித்துக் கொள்ள வைத்தன அல்லவா என்று கேட்கலாம். ஒரு வகையில் இது உண்மை. இன்னொரு வகையில் இக் கூற்று உண்மையில்லை. கொடுங்கோன்மைக்கு எதிராக, இந்த இறைமையின் பல அவதாரங்கள், தொண்டர்கள் கிளர்ந்தெழுந்தமைக்கும் இந்த இறைமை பற்றிய விவரிப்புக்களே சான்றுகின்றன. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் ஆறுதலும், தேவைப்பட்ட நிலையில் ஆற்றலும், இந்த இறைமை வழங்கியே இருக்கிறது. இந்திய வாழ்வில் பொறுமை, இன்னா செய்யாமை போன்ற குணங்களுக்கிருந்த தேவையை நாம் இகழ்ந்துவிட முடியாது. குறிப்பிட்ட சூழல்களில் இக் குணங்களே சோம்பலாக, அக்கறையின்மையாக, உணர்ச்சியின்மையாக மாறிவிடவும் கூடும்.

11

வாழ்க்கைக்கான அர்த்தங்களை வழங்கும் புனிதமான பார்வை இதுதான்

மாறி வரும் சூழல்களில் இந்திய வாழ்க்கை தன்னைத் தானே விமர்சனம் செய்து கொண்டு மாறியும் வந்திருக்கிறது. மனிதர்கள் இயற்கையுடனும் தம்மைப் போன்ற பிற மனிதர்களுடனும் கொண்ட உறவுகளிலிருந்து உருவாகிய இறைமை, விமர்சனத்திற்கப்பாற்பட்டதாக என்றுமே இருந்ததில்லை. நாம் முன்பே குறிப்பிட்டவாறு இந்த இறைமையை விளக்குவதில் பல்வேறு வகையான கோட்பாடுகள் தொடக்ககாலம் முதலே இருந்து வந்தன. இறைமை மறுப்புக் கோட்பாடும் தொடக்ககாலம் முதலே இருந்து வந்தது.

மனிதர்களின் வாழ்க்கை அனுபவங்களே இத்தகைய வேறு பட்ட கோட்பாடுகளையும் தோற்றுவிக்கின்றன. இறைமை தன்னை முதன்மையாக்கி, முழுமையாக்கிக் கொள்ளும்போது அதற்குள் உண்மையடங்காத நிலையில் அதற்கு மாறுபட்ட, அதனை மறுக்கும் போக்குகள் தவிர்க்க இயலாதவாறு எழுகின்றன; இவற்றுக்குள்ளும் உண்மை இருக்கிறது என்பதால் தான் இவற்றுக்குச் சமுதாயத்தில் மரியாதையும் பலமும் கிடைக்கின்றன. இந்தியாவில் இறைமைக் கோட்பாடுகளில், பல்வேறு வகைகளும், இறைமையை வழிபடும் நடைமுறைகளில் பல்வேறு வகைகளும் ஏற்பட்டமைக்கு இவையே காரணங்களாகின்றன. அதாவது மனிதர்களின் வாழ்க்கை முறையே, தமக்குமுன் ஏற்பட்ட கோட்பாடுகளையும், விமர்சனம் செய்துசெய்து திருத்தி சமகால வாழ்க்கை அனுபவத்திற்கு ஏற்றவாறு கோட்பாடுகளை மாற்றியமைக்க முயல்கின்றன. மந்திரங்களை ஒரு காலத்தில் முறை பிசகாமல் கூறியவர், இன்னொரு காலத்தில் சுருக்கமாகக் கூறுவதும், முறை தவறிக் கூறுவதும், கோயிற்சிலைகளுடன் பழகிப் பழகி அவற்றின் ஆற்றலின்மையை அறிந்து கொண்டு அவற்றைக் கடத்தி விற்பதற்குப் பூசாரிகளே துணையாகி விடுவதும், சாத்திரங்களை, சடங்குகளை அரைகுறையாகக் கடைப்பிடிப்பதும் கைவிடுவதும் போன்ற ஆயிரக்கணக்கான நடைமுறைகள், முன்னைய இறுக்கமான கோட்பாட்டுக்கு வாழ்க்கை தரும் விமர்சனங்களாகின்றன. இத்தகைய விமர்சனங்களுக்கு அடியில் இருப்பது மக்களின் வாழ்க்கை. இதே மக்கள் வாழ்க்கைதான் சில குறிப்பிட்ட சூழல்களில் நாம் முன்னர் விவரித்த இறைமையையும் கடுமையான கேள்விக்கு உட்படுத்துகிறது. இறைமையை முற்றாக மறுத்து விட்டு, அதேசமயம் அதிலிருந்து முற்றாக விடுபட முடியாத நிலையில் மக்கள்—வாழ்க்கை இதுபற்றிச் சிந்திக்கிறது. மறுக்க முடியாத எந்த அம்சம் இறைமைக் கோட்பாட்டுக்குள் இன்னும் எஞ்சியிருக்கிறது என்று சிந்திக்கிறது. இந்நிலையில்தான், இறைமையில் அடங்கியிருக்கும் சமுதாயத்தின் தேவைகள், ஆர்வங்கள், இலட்சியங்கள் முதலியவை

நமக்குப் புலப்படத் தொடங்குகின்றன. சமுதாயம் நெடுங் காலமாகக் கருதி வந்த தேவைகள், ஆர்வங்கள், இலட்சியங் கள், சமுதாயத்தின் அனுபவங்களாக நிறைவேறும் நிலையில் தான் இறைமை முற்றுக சமுதாயத்திற்குள் கலப்பதாகிறது. அப்போது தான் இறைமைக் கோட்பாட்டுக்குத் தனித் தேவை இல்லாது ஒழிகிறது.

சமுதாயத்திற்குள்ளே இறைமை இயைந்துவிடுவது என்ற வகையில் முன்னைய இந்தியச் சிந்தனையாளர்கள், சமயவாதிகள் கருதவில்லையே என்று கேட்கலாம். இந்திய சமயவாதிகளாக நெடுங்காலமாக மோட்சம், முக்தி நிலை பற்றி நிறைய சிந்தித்திருக்கின்றனர். இந்த முக்தி நிலையை மேலுலகில், இறைவனுடன் கலந்து நிறைவது பற்றிப் பல சமயங்களில் குறிப்பிட்டனர். சில சமயங்களில் இந்த உலகி யலிலேயே முக்தி நிலை அடைவது பற்றியும் இவர்கள் சிந் திக்கவே செய்கின்றனர். பாவங்கள் அழிந்து புண்ணியங் கள் பெருகும்போது முக்தி நிலை அடைய முடியும் என்று கருதினர். முக்தி நிலை பற்றி வருணிக்கும்போது, நன்மை தீமைகள் அற்ற, பேரின்பமயமான, விடுதலையுணர்வு முற்றி லும் வாய்க்கப்பட்ட உன்னதமான நிலையாக விளக்கினர். உலகத்திற்கு அப்பாற்பட்ட மேலுலகத்தை உண்மையில் சார்ந்திருக்கக் கூடிய, உன்னதநிலை பற்றி அவர்கள் கொண்ட கற்பனை, முற்றிலும் தாங்கள் வாழும் உலகில் தாங்கள் சில சமயங்களில் கூட அனுபவிக்க முடியாத ஒன் றைப் பற்றியதாக இருக்க முடியாது; அப்படியானல், அவர் களது மேலுலக முக்தி நிலை பற்றிய கற்பனை, அவர்களது அனுபவத்திற்குட்பட்ட மனநிலையிலிருந்து எழுந்ததாகத் தான் இருக்கக் கூடும்.

இந்திய வாழ்க்கை சில சமயங்களில் தான் அனுபவித்த, தான் எட்டிய, தான் சாதித்த இந்த உன்னதமான இறைமை நிலை, முக்தி நிலை, நிர்வாண நிலையைத் தான் எந்நேரமும் அடையததக்க—யாவரும் அடைய வேண்டிய இலட்சிய

நிலையாகத் தனக்குள் கொண்டிருந்தது. சமுதாய அளவில் உலகியலுக்குள் இந்நிலை உருவாவதை, இயங்குவதை இந்திய வாழ்க்கைமுறை வரவேற்கவே செய்யும். இந்த முக்திநிலை கூட நாம் முன்னரே விவரித்தபடி சாதாரண வாழ்க்கையில் இருப்பவர்கள் கூட, தமது வாழ்வின் பழைய எல்லைகளை உடைத்துக் கொண்டு புதிய எல்லைக்குள் பிரவேசித்த ஒவ்வொரு சமயத்திலும் எதிர்கொண்ட அனுபவித்த மனநிலைகள்தான், முன்னைய வாழ்வின் எல்லையை உடைத்துக் கொண்டு அதனை விட விரிவான எல்லைக்குள் பிரவேசிக்கும் போது ஏற்படும் விரிந்த பார்வையில், விருப்பு வெறுப்பைக் கடந்த பார்வையில், சாந்த மயமான மன நிலையில், தத்துவச் சிந்தனையின் ஒளியில் அனுபவிக்கும் ஓர் உயரிய மனநிலைதான் இது. இத்தகைய மனநிலையின் விரிவாகத்தான், நிலைப்பாகத்தான், முக்தி நிலை, நிர்வாண நிலை, இறைமை நிலை ஆகியன இயல்கின்றன. வாழ்க்கைக்கான அர்த்தங்களை வழங்கும் புனிதமான பார்வை இதுதான். இந்தப் பார்வை ஏற்படும் போதுதான் வாழ்க்கை, வாழ்க்கையாகிறது; பழைய அனுபவங்கள் செரித்து உளத்தில் உரமேறுகிறது; அழகு ஏறுகிறது.

12

முக்தி நிலையைச் செயல்வடிவில் வைத்துச் சாதிக்க முயல்வது மார்க்ஸியம்

நாம் இது வரை விவரித்து வந்த இறைமை நிலை முக்தி நிலை, நிர்வாண நிலை ஆகியவை, மார்க்ஸியவாதி உருவாக்க விரும்பும் இலட்சியத்திற்கு மிகவும் ஒத்தவை என்று கருதுகிறேன். அதாவதுஇறைமைநிலை, நிர்வாணநிலை, முக்தீ நிலை என்று பல்வேறு தொடர்களால் விவரிக்கப்படும் இலட்சியம் எதுவோ அதுவே மார்க்ஸியவாதி தனது நோக்கில் அடைய விரும்பும் இலட்சிய நிலை என்று கருதுகிறேன். இப்படிக் கூறுவது சிலர்க்குச் சங்கடமாகத் தோன்றலாம். ஆனால் இந்திய வாழ்வின் நெடுங்கால இலட்சியமாக

இருந்து வந்த வாழ்க்கைக் கண்ணோட்டம் எதுவோ, அந்தக் கண்ணோட்டத்தின் பார்வையில், மார்க்ஸிய வாதியின் கண்ணோட்டம் வேறுபடவில்லை என்பதைத்தான் மீண்டும் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதுமட்டுமல்ல; இந்தியர்களின் வாழ்க்கைக் கண்ணோட்டம், சமுதாய அளவில் நடைமுறைப்பட வேண்டுமானால் மார்க்ஸியக் கண்ணோட்டத்தின் வளமான நடைமுறையின் வழியேதான் சாத்தியமாக இருக்க முடியும் என்று கருதுகிறேன்.

இப்படிக்கூறுவதனால் மேலும் சில கேள்விகள் இடையில் எழுகின்றன. இவற்றுக்கு விடை காண்பதும் தேவையாக இருக்கிறது.

இந்திய வாழ்க்கையும் இந்தியச் சமயங்களும் தெய்வீகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. மார்க்ஸியம் பொருள் முதல் வாதப் பண்பு உடையதாயிற்றே! இரண்டும் எவ்வகையில் ஒத்து இயங்கும்; அல்லது ஒன்றுகும் என்பது ஒரு கேள்வி.

நாம் இதுவரை பார்த்ததில் முக்கியமான ஓர் உண்மை: இந்திய வாழ்க்கைக் கண்ணோட்டத்தின் ஒரு உன்னத நிலையாகத்தான் இந்தியச் சமயங்கள் உருவாயின. இந்தியச் சமயங்கள் கூறும் இறைமை, நிர்வாணம் முதலிய நிலைகள் இந்தியாவின் வாழ்க்கையிலிருந்தே இலட்சிய நிலையாக உருவானதுதான் என்பதாகும். அண்டத்திற்குள் அடங்கிய அல்லது அண்டத்திற்கு அப்பாற்பட்ட ஒரு கடவுள் அல்லது சக்திதான், அண்டத்தையும், உலகத்தையும், மனிதர்களையும் உருவாக்கியது; படைத்தது என்பதை இந்தியச் சமயங்கள் நிரூபித்ததாக நாம் நம்புவதற்கில்லை; இதற்கு மாறாக, இந்தியச் சமயம், அண்டத்திற்கும் உலகிற்கும் அதாவது இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவின் பாதிப்பைத்தான் அதிகம் கொண்டிருந்தன. அண்டத்தால், இயற்கையால் பாதிக்கப்படும் மனிதன், இந்த உறவை மேலும் செம்மையாக

சரியாக எவ்வாறு அமைத்துக் கொள்வது என்ற முறையில் தான் இயங்கினன்; இந்த உறவிலிருந்து, இந்த உறவு பற்றிய சிக்கல்களுக்கு விடை காணும் முறையிலேயே இந்தியச் சமயங்கள் எழுந்தன; இந்த உறவைப் பற்றிய சிக்கல்கூட இந்தியர்களின் சமுதாய வாழ்வின்போது எழுந்த பல்வேறு வகைச் சிக்கல்களின் பகுதிதான் என்பதில் ஐயமில்லை.

இந்த உறவைப் பற்றிய தீவிரமான சிந்தனைகள் நடை பெற்று வரும்போது, ஒரு சட்டத்தில், அண்டத்திற்கு அப்பா லுள்ள இறைவனை, அல்லது ஒரு சக்திதான் அண்டத்தில் தொடங்கி இறுதியாக மனித வாழ்க்கையையும் படைத்தது; ஆகவே எல்லாவற்றுக்கும் ஆதாரமான இறைமையுடன் கலப்பதே மனித வாழ்வின் இறுதி இலட்சியம் என்ற கருத் தாக்கமும் எழுவது தவிர்க்க இயலாதது. ஏற்கனவே நாம் முன்னர் பார்த்தது போல மனிதன், தன்னைச் சூழவுள்ள அனைத்தாலும் பாதிக்கப்பட்டு, அவற்றுடன் தனது உறவை எவ்வாறு சரியாக வைத்துக் கொண்டு தன் வாழ்வை உரு வாக்கிக் கொள்வது என்ற பிரச்னையின் ஒரு வடிவம்தான் இந்தச் சிந்தனை. இதைத் தவிர இறைவன் என்று இல்லாத ஒன்றுக்கும, மனிதனுக்கும் உறவை ஏற்படுத்துவது, அறவே உண்மையில்லாத பிரச்னை. இதிலிருந்து மனித வாழ்க்கை எதையும் நாம் வகுக்க முடியாது. நாம் அதிக அளவு செய்யக்கூடியது, எத்தகைய ஒரு பிரச்னை, இன்றெென்ருகக் காட்சி தந்தது என்பதைப் புரிந்து கொள்வதேயாகும். இறைவன் தோற்றுவித்தது மனித வாழ்க்கை என்ற கூற்றை அல்லாமல், இந்த அண்டம்தான் ஏதோ ஒரு பயன் அல்லது நிறைவு கருதி மனிதனைத் தோற்றுவித்தது; ஆகவே அந்தப் பயனை நிறைவுறுத்துவதுதான் மனித வாழ்வின் நோக்கமாக இருக்க முடியும் என்ற கூற்றையும் நிரூபிப்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை.

ஆகவே மனித வாழ்க்கை, தன்னைச் சூழ்ந்துள்ள சமுதா யத்துடனன்றி இயற்கையுடனும் உறவு கொண்டுள்ளது. அதாவது, மனிதன் வாழ்க்கையை—சமுதாயத்தின் மூலம்

கொண்டுள்ள உறவினுலும், சமுதாயத்தின் மூலம் இயற்கை யுடன் கொண்டுள்ள உறவினுலும், தன்னுடன் தானே கொண்டுள்ள உறவினுலுமே வாழ்கிருன். இந்த உறவுக் கோலங்களே காலத்திற்கு ஏற்றவாறு, பொருளியல் நிலைக்கு ஏற்றவாறு பல்வேறு வகையான கருத்தோட்டங்களைத் தோற்றுவித்திருக்கின்றன. இந்தக் கருத்தோட்டங்கள் உண்மையைக் கொண்டிருப்பது போலவே, பொய்களையும் உள்ளடக்கி இருக்கின்றன. இந்தக் கருத்தோட்டங்களின் வழியே வாழ்க்கையை வாழ்ந்து, வாழும் போதே, அவற்றி லுள்ள தவறுகளைக் களைந்து மேலும் மேலும் சரியான உண்மைகளை நோக்கி மனிதன் இயங்க வேண்டியவனுகி ருன். மனிதன் தனது தேவைக்காக, தான் அறியாமலேயே உருவாக்கிக் கொண்ட உண்மையும் பொய்யுமான பல கருத்துக்களோடு, கருத்துக்களின் வழியே தவிர்க்க இயலாத படி வாழ்வதன் மூலமே, மேலும் மேலும் உண்மையான, உன்னதமான வாழ்வை நோக்கி இயங்க வேண்டியவனுகி ருன். இந்நிலையில் தான், எந்தப் பிரச்னே, அல்லது எந்த உண்மை, அவனுக்கு இறைவனுக, இறைநிலையாக, முக்தி நிலையாகத் தோன்றியது என்பது அந்தக் கால உறவுகளிலி ருந்து தீர்மானிக்க வேண்டியதாகிறது.

இதனுல் தான், நாம் மீண்டும் மீண்டும் ஓர் உண்மையை வலியுறுத்துகிறோம். மனிதன், தன்னேடும் சமுதாயத்தோடும் இவற்றின் வழியே இயற்கையோடும் கொள்ளும் உறவுதான் வாழ்க்கையாகிறது. இம்மனித வாழ்க்கை தனது வரலாற்று அனுபவங்களுக்கேற்ப பலவகையான கருத்தோட்டங்கள், கலாசாரங்கள், கலை இலக்கியங்கள், சமயங்கள், தத்துவங் கள் முதலியவற்றை உருவாக்கிக் கொண்டு, அவற்றை வாழ்ந்து, அவற்றின் மூலம் தன்னை மேலும் சிறப்பாக உரு வாக்கிக் கொண்டு, அதனுலேயே அவற்றைக் கடந்து மேலும் மேலும் வளர்ந்து வருகிறது. இந்த மனித வாழ்க்கை என்ற இயக்கத்தில் இயற்கை, அண்டம் முதலியவை சம்பந் தப் படுகின்றன. மனித வாழ்க்கையைப் பொறுத்த வரை இவ னது வாழ்க்கையை இவன் சந்திக்கும் முறையிலேயே— பய

ணத்திலேயே அண்டம் முதலியவை இவற்றுக்குள் வருகின்றன. இந்த வாழ்க்கையை, இவன் உருவாக்கிக் கொள்ளும் போக்கில் தான், இலட்சியங்களை உருவாக்கிக் கொள்கிருன். இந்த இலட்சியங்களில் உயர்வகை இலட்சியம் தான் இறைமை நிலை, முக்திநிலை, நிர்வாண நிலை. இதன் உண்மை, மனிதன் தனது எல்லையை மேலும் மேலும் விரித்துக் கொண்டு, அந்த விரிந்த பரப்பு முழுவதும் வாழ்ந்து விட வேண்டும் என்பதாகும்.

காலந்தோறும் மனித வாழ்வின் எல்லைக்குள் இயற்கை ஒவ்வொன்ருக விரிந்து வருகிறது. ஒரு காலத்தில் கடலும் மலையும் பௌதிக எல்லைகளாக இருந்தது மாறி இன்று அண்டமே எல்லையாகி வருகிறது. சமுதாய அளவில் கொள்ளும் உறவுகளில் குடும்பம், ஊர், நாடு முதலிய எல்லைகள் இன்று சிறியவை ஆகி விட்டன. உலக அளவில் இன்று எல்லைகள் விரிகின்றன. தன்னேடு இவன் கொள்ளும் உறவின் எல்லைகளும் அவற்றின் திரிபுகள் தீர்ந்து மேலும் சிறந்து வருகின்றன. இந்த உறவின் வெளியீடுகளாகவே, கலை, இலக்கியங்கள், தத்துவங்கள் முதலியவை உருவாகின்றன.

வரலாற்று நோக்கில் பார்த்தால் இந்த வகை உறவுகள் குறுகி இருந்த காலத்தில் முதலில் நிறைவைத் தந்து, வாழ்க்கை நாளடைவில் அந்தக் குறுகிய எல்லைக்குள் அடங்க முடியாமல் பழைய எல்லைகளை உடைத்துப் புதிய எல்லைகளை வகுத்து வந்திருக்கிறது. இன்று மனித வாழ்க்கை, தனக்கு நிறைவைப் பெற வேண்டுமானல், இன்று உள்ள விரிந்த எல்லைகளில் வாழ்ந்தாக வேண்டும். குறுகிய எல்லைகளின் பிரச்சினைகளை, சிக்கல்களை, அவலங்களை, குற்றங்களை விரிந்த எல்லைகளில்தான் தீர்க்க வேண்டியிருக்கிறது. பிரச்சினைகளைத் தீர்க்கும் போது கிடைக்கும் விடுதலையுணர்வு, இன்பம் முதலியவை, பிரச்சனைகள் தீர்ப்பதற்கான சரியான பார்வை கிட்டிய உடனே, வாய்க்கத் தொடங்குகின்றன. பிரச்னைகளின் தீர்வுக்கான சரியான முயற்சிகளில் மேலும் வாய்க்கின்றன. ஒரு பிரச்னை தீர்ந்து, இன்னெரு பிரச்னை

தோன்றும் போது, மேலும் மேலும் சரியான பார்வை, சரியான நடை முறையின் வழியே,மனித வாழ்க்கை அதிகமான விடுதலை, பேரின்பம் முதலியவற்றை அடைகின்றது. மனித வாழ்க்கையிலிருந்து கண்டெடுத்த இத்தகைய மனவியல்புகளையே இறைமை நிலை, முக்தி நிலை, நிர்வாண நிலை என்று சமயவாதிகள் கூறினர். சமுதாயப் பிரச்னைகளில் இருந்து தான் மனிதன் தன் முக்தியை, இறைமையைச் சாதித்துக் கொள்ள முடியும். சமுதாயப் பிரச்சினைகள் காலங்தோறும் இருந்து வருபவை; மாறி வருபவை; வளர்ந்து வருபவை; இவ்வாறு மாறியும் வளர்ந்து வரும் பிரச்சினைகளைச் சரியான கண்ணோட்டத்தில் பார்க்கத் தவறுவதனாலும், தீர்க்கத் தவறுவதனாலும் முன்னர் ஒரு சட்டத்தில் மனிதன் தான் கண்ட முக்தியே இறைமையே, இன்னொரு சட்டத்தில் சிறையாகி விடும்; விலங்காகி விடும். இடையறாத இந்த இயக்கம், எந்த ஒரு சட்டத்திலும் அறுந்து விடக் கூடாது. தீர்க்கத் தவறிய நிலையில், தனி மனிதன் தனக்குள் மட்டும் சாதிப்பது முக்தி நிலை, நிர்வாண நிலை என்பது ஏற்பட்டு விடக் கூடாது. சமுதாயம் முழுதும் விலங்கிடப்பட்ட நிலையில் தனிமனிதன் சாதிக்கும் மோட்சம் நிலையானதாகவும் இருக்க முடியாது. சரியானதாகவும் இருக்க முடியாது.

தனி மனிதர்களே சாதிக்க முடியும் எனக் கூறப்பட்ட இந்த முக்தி நிலையை, சமுதாய அளவில் வைத்துச் சாதிக்க விரும்புகிறது மார்க்ஸியம். சிந்தனையளவிற்குள் மட்டும் சாதித்து வந்த முக்தி நிலையை, செயல் வடிவில் வைத்துச் சாதிக்க முயல்கிறது மார்க்ஸியம். சமுதாயத்தின் உறவிலிருந்து அறவே துண்டிக்கப்பட்ட தனிமனிதர்களும், செயலின் உருவிலிருந்து அறவே துண்டிக்கப்பட்ட சிந்தனையும் அறவே இல்லை என்பதால், இந்தியச் சமயமும் தனது வரலாற்றுப் போக்கில் சாதித்ததாகக் கருதப்படும் முக்தி நிலையை, மார்க்ஸிய வாதிகள் சமுதாய அளவில், செயல்வடிவில் வைத்துச் சாதிப்பதை மகிழ்ச்சியோடு ஏற்கவே செய்யும் என்பதில் ஐயமில்லை.

13

**கலாசாரம், அறம், தத்துவம் ஆகிய துறைகளில்
இந்திய மார்க்ஸிய வாதிகள்
உலகம் வியக்கத் தக்க சாதனைகளைச்
செய்வதற்கான தகுதி படைத்தவர்**

இந்தியாவில் மக்கள் இதுவரை வாழாதது போலவும், மார்க்ஸிய முறையிலான ஒரு சோசலிச சமுதாயம் அமைந்த பிறகு தான் மக்கள் வாழவே தொடங்குவார்கள் போலவும் சில மார்க்ஸிய வாதிகள் நினைக்கிறார்கள். இந்திய மக்கள் சோசலிச சமுதாயத்தில் நுழையும் வரை வரலாற்றுக்கு முற்பட்ட காட்டுமிராண்டித் தனத்தில் வாழ்வது போலவும், சோசலிச நடைமுறைக்குள் மக்கள் பிரவேசிக்கும் போதே நாகரிக காலத்திற்குள் நுழைவார்கள் என்பது போலவும் கருதுகிறார்கள். இத்தகையவர்களுக்குத் தான்

ந்திய மக்கள் வரலாறு, சமயம், தத்துவம், கலை இலக்கியங்கள் பற்றி எந்த அக்கறையும் இல்லை. ஐரோப்பிய வரலாறு, தத்துவம் பற்றி அறிந்து கொண்டாலே போதும்; அதன் இன்னொரு போலியான நகலாகத்தான் இந்திய வரலாறு இருப்பதாக இவர்கள் கருதுகிறார்கள். சோசலிசந்தான் உலகின் எதிர்கால வரலாறு என்று இவர்கள் உறுதியாக நம்புவதால், சோசலிசத்திற்கு முற்பட்ட காலத்தில் உள்ளவர்களின் வரலாறோ, தத்துவமோ நமக்குத் தேவையில்லை என்று நம்புகிறார்கள். அதாவது, மார்க்ஸியம் பற்றிய பாடப் புத்தக வர்ணனைகளைத் தவிர நாம் இந்தியச்சூழலில் கற்றுக் கொள்ள வேண்டியது எதுவுமே இல்லை என்பது இவர்கள் கருத்து.

லெனின் கம்யூனிச சமுதாயத்திற்குள் இல்லை; ஆனால் அவருக்குள் கம்யூனிச சமுதாயம் இருந்தது. அவரது சிந்தனை, செயல் முறைகள், அவர் பிறருடன் கொண்ட உறவுகள் ஒரு கம்யூனிஸ்டுக்கு உரியவையாக இருந்தன. சமுதாயத்தின் வளர்ச்சிக்கான வழிமுறைகளினூடே தன்னை இரண்டறக் கரைத்துக் கொண்டவராக இருந்தார். இன்ப துன்பங்கள் இவரைப் பாதிக்காமல் இல்லை. சாதாரணப் பொருளில் அவை இன்பங்களாகவோ, துன்பங்களாகவோ இல்லை. சாதாரண மனிதர்கள் அனுபவிக்கும் இன்ப துன்பங்களை அவர் கடந்தவராக இருந்தார். சமுதாயத்தின் எதிர்கால நோக்கிலான மாபெரும் செயல்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட முறையில் அவர் முழுமையான சுதந்தரவாதியாகத் திகழ்ந்தார். மரணத்தைத் தன் செயலாற்றலால் வெல்லக் கூடியவராக இருந்தார்.

ஒரு கம்யூனிச சமுதாயத்தில் வாழும் மனிதன், இத்தகைய இயக்கங்களோடு திகழ்வான் என்பதில் ஐயமில்லை. இந்த இலக்கணங்கள் கம்யூனிச சமுதாயத்திற்குள் இருக்கும் மனிதனுக்குத்தான் என்பதல்லாமல், வரலாற்றுக் காலம் முழுவதிலும் சமுதாய நோக்கிலான மாபெரும் செயல்களில், சாரமான செயல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்

அனைவருக்கும் உரிய இலக்கணந்தான் இது. வரலாற்றுக் காலத்தில் காணப்பட்ட உன்னதமான மனிதர்கள் இத்தகையவர்கள் தான். இந்த உன்னதமான மனிதர்கள், பிற காலங்களில் அரியவர்களாக இருக்க, கம்யூனிச சமுதாயத்தில் இத்தகையவர்கள் அதிகமானவர்களாக இருப்பார்கள். வரலாற்றுக் காலம் முழுவதும் நீரோடை போல சிறுகச் சிறுகப் பெருகிவரும் மனிதனின் சாரமான பண்புகள், கம்யூனிச சமுதாயத்தில் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுவதாக இருக்க வேண்டும். முன்னைய சமுதாயத்தில் அறவே இல்லாத மேன்மைகள். பின்னைய சமுதாயத்தில் சாத்தியமாக முடியாது.

முன்னைய சமுதாயத்தில் உன்னதமான மனிதர்கள், இந்த கம்யூனிச சாரத்தைத் தம்மளவில் சிறிய அளவிலேனும் கொண்டவர்கள். சமுதாயத்தின் மேன்மைக்காகத் தம்மை இழந்தவர்கள்—அவர்கள் அரசியல்வாதியாகத் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. அவர்கள் விஞ்ஞானிகளாக, கலைஞர்களாக, இலக்கியவாதிகளாக, தத்துவ வாதிகளாக, செயல் வல்லவர்களாக, உழைப்பாளர்களாக, நல்ல தாய்மார்களாக—இருந்திருக்க முடியும்.

தனது சமகாலத்திலோ அல்லது எதிர்காலத்திலோ சமுதாயத்தின் மேன்மைக்குதவும் முறையில் ஒரு விஞ்ஞானக் கண்டு பிடிப்பையோ, ஒரு மாபெரும் செயலையோ, அல்லது இலக்கியத்தையோ, இசையையோ ஒருவர் உருவாக்குகிறார் என்றால், தனது உடலளவுக்கு மேற்பட்ட ஆற்றல் உடையவராக, தனது உள்ளத்தைச் சமுதாயத்தின் மேன்மைக்கானதொரு குறிப்பிட்ட நோக்கில் அறவே ஈடுபடுத்தியவராய், நிகழ்காலச் சுகங்களைத் துறந்து, இயக்கத்தின் மயமாகி அவர் இயங்குகிறார். அத்தகையவர் சுதந்திரத்தின்வானத்தில் தங்குதடை இல்லாமல் உலவுபவர் ஆகின்றார். இவர்பெறுகின்ற ஆன்மீக உன்னதம் அசாதாரணமாகிறது. இவர்கள் தம்மளவில் விடுதலையை, முக்தியை அடைந்தவர்கள்.

கம்யூனிசத்தின் சாரம் எதுவோ அதைத் தம்மளவில் நிறைவோடு அநுபவித்தவர். இவ்வகையில் பார்த்தால் லெனின் மட்டுமல்ல, மார்க்சும், மார்க்சு மட்டுமல்ல ; சமுதாயத்தின் மேன்மைக்காக ஆதிப்பழங்காலத்தில் தீயைப் பயன்படுத்திக் கற்றவர் முதல் அனைவரும் "கம்யூனிஸ்டு" களேயாகிறார்கள்.

இத்தகையவர்களின் பட்டியலில்தான் மேரிகியூரி, சி. வி. இராமன், வள்ளுவர், ஹோமர் முதலியவர்கள் வருகிறார்கள். இந்தப் பட்டியலில் தான் குலமுறைச் சமுதாயத்தை ஒழித்துப் புதிய சமுதாய நடைமுறையைக் கொண்டு வந்தவர்கள் வருகிறார்கள். மக்களின் நல்வாழ்வுக்காகச் சமயங்களை உருவாக்கியவர்கள் இப்பட்டியலில் தான் இடம் பெறுகிறார்கள். மொழியைக் கண்டவர்கள், திறம்பட உருவாக்கியவர்கள் எல்லாம் இவர்கள் தான். மனிதர்களின் இசைக் கலையை, ஓவியக் கலையை, சிற்பக்கலையை, முன்னைய கால நிலையிலிருந்து ஒரு பாய்ச்சலுக்கு உயர்த்தியவர்கள் இவர்கள்தான். மனிதர்களின் மேன்மைக்கான ஆக்கத்தைச் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ செய்தவர்கள் இத்தகையவர்கள் தான். இவர்கள் சாவை வென்றவர்கள்; இவர்கள் தோல்விகளை வெற்றிகளாக்கியவர்கள். இவர்களிடமும் இன்பங்களும் துன்பங்களும் தமது சாதாரணப் பொருளை இழந்து விடுகின்றன.

முன்பு நாம் எழுப்பிய கேள்விக்கு இங்குதான் விடையைக் கண்டறிகிறோம்.

இந்திய மக்கள் காலங்காலமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் பல துறைகளிலும் எத்தனையோ சாதனைகள் உண்டு. இவர்கள் விஞ்ஞானம், மருத்துவம், தொழிலியல், கலை, இலக்கியம், வானியல், வேளாண்மை முதலிய துறைகளில் எல்லாமல், பண்பாடு முதலிய துறைகளி

லும் சாதனைகளை நிகழ்த்தியவர்கள். இத்தகைய மேன்மைக்குரியவர்களைத் தோற்றுவித்த சமுதாயம் தனது சாதாரண மட்டத்திலும் இத்தகைய கருக்களைத் தனக்குள் தாங்கித்தான் இருந்தது. சாதாரண மனிதர்கள் என்பவர்களிடத்தும் மேன்மையான மனிதர்கள் மறைந்தோ வெளிப்பட்டோ இருக்கத்தான் செய்கிறார்கள். வைரங்களை இத்தகைய கரிகள் தமக்குள் தாங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. வெள்ளங்களை இத்தகைய சிறு துளிகள் தமக்குள் கொண்டுதான் இருக்கின்றன. புத்தர்கள் அனுபவிக்கும் சாந்த நிலை, இராமர்கள் கடைப்பிடித்த சகோதர பாசம் இவர்களிடமிருந்து தான் தோன்றுகிறது. புராதானப் பொது உடைமைக் காலத்திலிருந்து கம்யூனிஸ்டுகள் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ இயங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்கள் வகுத்த நீதிகள், ஒழுக்கங்கள், பண்பாடுகள் முதலியவற்றுக்குள் கம்யூனிச சமுதாயத்திற்கான நீதிகள் சிறிய அளவிலேனும், வித்துக்களின் அளவிலேனும் இருக்கவே செய்கின்றன. கலை இலக்கியங்களில் இவர்கள் சாதித்த உயர்நிலைகள், கம்யூனிச சமுதாயத்திற்குள்ளே இடம்பெறத் தக்கவையே.

இதனால் தான் நாம் பல முறையும் வற்புறுத்திச் சொல்லுகிறோம். சோசலிசம அல்லது கம்யூனிசத்திற்கான வேர்கள் அல்லது வித்துக்கள், இந்திய வாழ்க்கைக்குள்ளே இருக்கின்றன. இந்திய வாழ்க்கைக்குள்வரும் மார்க்ஸியம், இந்தியவேர்களோடு உறவு கொண்டதுதான். மார்க்ஸியம் என்பது பெயரளவில் வேறுபட்டதுபோலத் தோன்றினாலும், அதன் உள்ளடக்கத்தில் இந்திய வாழ்க்கைக்குள் இருப்பதுதான். இந்த உள்ளடக்கம் மனிதனாக வாழ்வதன் அர்த்தத்தோடு சம்பந்தப்பட்டதுதான். இம்முறையிலே இந்தியர்கள் நெடுங்காலமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இந்திய மக்களின் சமயங்கள், தத்துவங்கள், கலாசாரம், கலை இலக்கியம் பற்றி மார்க்ஸிய வாதிகள் அக்கறை கொள்வதன் இன்றியமையாத தேவையை இவ்வகையில்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மனித உறவுகளின் செழுமைதான் கம்யூனிசத்தின் உள்ளடக்கம். தன்னுடன்தான் நிறைவான உறவு கொள்ளுதல்; தனக்கும் தன்னைச் சூழ இருக்கும் சமுதாயத்திற்கும் இடையில் பகையுறவின்மை; தமக்குள் சமுதாயமும், சமுதாயத்திற்குள் தானுமாக நிறைவான உறவு கொள்ளுதல்; சுரண்டவோ, ஏமாற்றவோ வேண்டாத நீதி நிலவுதல்; தனக்குள் சமுதாயமும் சமுதாயத்திற்குள் தானுமாகத் தொடர்ந்த வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்; இயற்கைக்கும் மனிதர்க்கும் தரகராக, முதலாளியாக, நிலப்பிரபுவாக யாரும் இல்லாமை; ஆணும் பெண்ணும் தமக்கிடையில் மலர்வதில் இன்பம்; மனிதர்கள் தமது உடலியல், உளவியல் ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்தி மேலும் வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள்; சுருக்கமாகக்கூறினால், தன்னோடும் சமுதாயத்துடனும் இயற்கையுடனும் கொண்ட பகையுறவு நீங்கித் தோழமையே உறவாதல்; இது கம்யூனிசத்தின் உள்ளடக்கம்; செழுமையான இந்த உறவுகளே உள்ளடக்கம்; சாரம். இது மனிதனின் உன்னதம்; இதுதான் கம்யூனிஸத்தின் கலாச்சாரம்; இந்த வித்தில் மலர்வதுதான் கம்யூனிச வாழ்க்கை.

இத்தகைய வாழ்க்கை எல்லோர்க்கும் சாத்தியமாக வேண்டும் என்பதற்காகவும், இந்த வாழ்க்கை இடையறுத இயக்கமாக இருக்க வேண்டும் என்பதற்காகவுந்தான், இந்தக் கால கட்டத்திற்கு முன் செய்வதாகிய அரசியல், பொருளாதார உருமாற்றங்கள்; இவை கம்யூனிசத்திற்கான உருவங்கள்; இதற்குள் இருப்பதுதான் மனிதவியல் சார்ந்த வாழ்க்கை.

இந்தியாவில் ஒரு கம்யூனிச சமுதாயத்தை உருவாக்குவது என்பது ரஷ்யாவிலோ வேறு நாடுகளிலோ கம்யூனிச சமுதாயததை உருவாக்குவது போலவே இருந்துவிட முடியாது. கம்யூனிச சமுதாயததை உருவாக்குவதற்கான பாதையை மட்டுமல்லாமல் கருவிகளையும் இங்கிருந்துதான்

தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்; அல்லது உருவாக்கிக் கொள்ள வேண்டும். புதியதாக உருவாக்கிக் கொள்வதென்றாலும் இங்குள்ள சமுதாய, பொருளாதார, அரசியல் நிறுவனங்களிலிருந்துதான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இவற்றை அழித்து விட்டுப் புதியதாக உருவாக்கிக் கொள்வதென்றாலும் கூட, இங்கு இருக்கின்ற கருவிகளைக் கொண்டு தான், இங்கு இருக்கின்றவைகளை எப்படி உடைக்க வேண்டுமோ அப்படி உடைத்துத்தான், உடைக்கப்பட்ட இங்குள்ள பொருள்களின் சிதைவிலிருந்துதான், புதியவற்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இந்தியச் சூழலிலிருந்து, இந்திய மனிதர்களிலிருந்து நாம் என்றைக்குமே தப்பிச் சென்று விட முடியாது. சில அனுபவங்கள் புறத்திலிருந்து கிடைக்கலாம். புறத்திலிருந்து கிடைக்கும் அனுபவங்கள், அக அனுபவங்களுக்கு மாற்றாக என்றும் ஆகமுடியாது. அக அனுபவத்திற்குத் தூண்டுதலாகவோ சேர்க்கையாகவோ விமாசனமாகவோ புற அனுபவங்கள் இருக்கலாம். ஆனல் என்றைக்குமே மாற்றாகி விட முடியாது. பிறர்காலங்களில் நாம் நடக்க முடியாது என்பது போல—

ஆகவே நாம் முன்பு கூறியபடி, நமது இந்திய வரலாறு, தத்துவம், வாழ்க்கை முதலியவற்றில் நாம் இடையறாத கவனம் செலுத்துவது தேவை. இப்படிப்பார்ப்பதுதான் மார்க்ஸியமும். குறிப்பிட்டதற்குள்தான் பொதுமை இருக்கிறது. பொதுமையின் உறவில்லாமல் குறிப்பிட்டதும் இல்லை; இருக்க முடியாது; தென்னை, பனை, மா என இருப்பதுதான் உண்மை; பொதுவான மரம் என ஒன்று இல்லை. அதே சமயம் தென்னை, பனை முதலியவற்றுக்குள் மரம் இல்லாமலும் இல்லை என்பது போல—

நாம் முன் கூட்டியே ஓர் உண்மையைச் சொல்லி வைத்துவிட முடியும். உலகிலுள்ள பல்வேறு நாடுகளை விட இந்தியா— சமயம், தத்துவம், கலாசாரம், அறிவியல், கலை, இலக்கியங்களில் தனித்த பெருமைக்குரிய சாதனைகளைக்

கொண்ட நாடு; இந்தியாவில் பொருளாதாரம், அரசியல் முதலிய துறைகளில் பெரும் மாறுதல்கள் ஏற்படாமைக்குக் கூட சமயம் முதலியவற்றைக் காரணமாகச் சொல்வது சாத்தியந்தான். அதாவது, இந்தியாவைப் பொறுத்த வரை வாழ்க்கையானது, பொருளாதாரம் அரசியல் முதலியவற்றின் வரையறைகளில் பார்க்கப்பட்டதை விட சமயம், கலை, முதலியவற்றின் வரையறைகளில் பார்க்கப்பட்டது அதிகம். இந்தியாவில் வரக்கூடிய கம்யூனிசமும், தத்துவம், கலாசாரம், கலை, இலக்கியம் ஆகிய வரையறைகளிலேயே அதிகம் கவனம் செலுத்துவதாகஇருக்கும். அதாவது, கம்யூனிசத்தின் தத்துவத்திற்கு இந்தியாவில் ஏற்படும் பிடிப்பு, பொருளாதாரத் துறையில் ஏற்படும் பிடிப்பை விட, அதிகமாகவே இருக்கும். கலாசாரம், அறம், தத்துவம் ஆகிய துறைகளில், இந்திய மார்க்ஸிய வாதிகள் உலகம் வியக்கத்தக்க சாதனைகளைச் செய்வதற்கான தகுதி படைத்தவர். காலம் இதை நிரூபிக்கும்.

14

ஆளும் வர்க்கங்களின் நோக்கங்களுக்கு மார்க்ஸிய வாதிகள் பலியாகி விடக்கூடாது

இந்தியாவின் வாழ்க்கை, கலாசாரம், சமயம், கலை இலக்கியம் ஆகியவற்றுக்கு, இவ்வகையில் விளக்கம் தரும் போது, சாதாரணமாக மார்க்ஸிய வாதிகள் கூறி வரும் வர்க்கப் பார்வை பற்றிய பிரச்னை எழவே செய்கிறது. அதாவது, இங்கு தரும் விளக்கங்கள், வர்க்கப் பார்வை என்ற முறையில் எப்படிச் சரியாக இருக்க முடியும் என்ற பிரச்னை எழுகிறது.

இப்படி ஒரு கேள்வி எழுவதற்கே காரணம், இங்கு பார்க்கப்பட்ட விளக்கங்கள், ஒரு மார்க்ஸியவாதி என்று

தன்னைக் கருதிக் கொள்பவருக்கே வித்தியாசமாகப் படுவது தான். அவர் இதுவரை கருதி வருவது—சமயம், கலை, இலக்கியம் முதலியவை பற்றிய கருத்துக்கள் எல்லாம், எல்லாக் காலத்திலும், ஆளும் வர்க்கம் சார்ந்த கருத்துக்களாகவே இருந்து வந்திருக்கின்றன; இவை ஆளும் வர்க்கத்தால், அல்லது ஆளும் வர்க்கத்தினருக்குச் சார்பாக மத்தியதர வர்க்கத்தவரால், உருவாக்கப்பட்டவை என்பதனுல்தான் நாம் விளக்கிய கருத்துக்கள் அவருக்கு வித்தியாசமாகப் படுகின்றன.

நம்மை மறுத்துக் கூற விரும்பும் மார்க்ஸிய வாதியின் கருத்தின்படி, வரலாற்றில் சமயங்கள் உழைக்கும் வர்க்கத்தவர் உண்மையை அறிந்து கொள்ளாதபடி— அவர்களின் அறிவை மயக்குவதற்காக, மறைப்பதற்காக—ஆளும்வர்க்கத்தின் நோக்கில் உருவாக்கப்பட்டவை. தெய்வங்கள், பாவம், புண்ணியம், மோட்சம் நரகம், முக்தி எனக் கூறப்பட்டவை பொய்கள்; இவை அறியாமையிலிருந்து எழுந்தவை; அறியாமையைப் பலப்படுத்துவதற்காக எழுந்தவை; இவ்வாறே கலாசாரம், கலை இலக்கியங்கள் என்பவை ஆளும் வர்க்கங்களின் சுகபோகங்களை மிகுதிப்படுத்துவதற்காக, நியாயப் படுத்துவதற்காக உருவாக்கப்பட்டவை; தவிர, இந்தியாவில் இதுவரை இருந்துவரும் சமயங்கள், கலை இலக்கியங்கள் முதலியவை, நிலப்பிரபுத்துவத்தைப் பலப்படுத்துவதற்காக, பாதுகாப்பதற்காகவே இருப்பவை. இவை தற்கால நோக்கில் உழைக்கும் வர்க்கத்திற்குப் பயனற்றவை. இவற்றை நாம் அறவே ஒதுக்கியாக வேண்டும். இவற்றின் பாரத்தோடும் எதிர்காலத்தில் நாம் முன்னேற முடியாது.

இவ்வாறு ஒரு சில மார்க்ஸிய வாதிகள் தரும் விளக்கமும், இந்த மார்க்ஸிய வாதிகளாலேயே வறட்டு நாத்திகர்கள் என்று கருதப்படும் திராவிடக் கழகச் சார்பாளர்களின் விளக்கமும் பெரும்பாலும் ஒத்தியங்குகின்றன. இக்காரணத்தாலேயே இவர்களின் கருத்து மார்க்ஸியமாக இருக்க முடியாது என்று நாம் விவாதிப்பது எளிதாகி விடுகிறது. காரணம், மார்க்ஸியமும், வறட்டு நாத்திகமும் ஒன்றல்ல.

திராவிடக்கழகத்தவர்கள் போலவே பேசும் மார்க்ஸிய வாதிகளை மறுப்பது எளியதாக இருக்கும் போது, மார்க்ஸியத்தை ஏற்கும் வேறு சிலரின் கருத்து, இவர்களின் கருத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. இவர்களின் கருத்தின் படி, சமயங்கள் முதலியவை குறிப்பிட்டகால வரலாற்று நிலைகளில் தேவை இன்றித் தோன்றி விடவில்லை. அப்படித் தோன்றிய சமயங்களும் புற உலகம், வாழ்க்கை முதலிய திரிபுடைய பார்வையையே கொண்டிருந்தன. இவற்றில் உண்மை சிறிது இருந்த போதிலும் இந்த உண்மை திரிபுகளுக்கிடையிலேயே சிக்கிக்கிடக்கிறது. இன்று விஞ்ஞானம், அரசியல், சமுதாய அறிவு முதலியவை வளர்ந்துள்ள சூழலில், பண்டைக்காலச் சமயங்களில் புதைந்து கிடக்கும் சிறு உண்மைகளைத் தேடிக் கொண்டிருப்பது வீண்வேலை. அப்படிச் சமயங்களுக்குள் மறைந்து கிடக்கும் உண்மைகளும், பழங்காலத்தைப் பிரதிபலிக்கக் கூடிய, அக்கால ஆளும் வர்க்கங்களுக்குச் சாதகமான உண்மைகள்; ஆகவே குப்பையைக் கிளறிக் கிடைக்கும் குன்றி மணிக்காக நாம் சிரமப்படுவது தேவையில்லை.

இக்கருத்துக்களை மறுப்பதற்கு முன் நமது கருத்துக்களை முன் வைத்து விடுவது நல்லதாக இருக்கும்.

வரலாற்றில், எந்த ஒரு குறிப்பிட்ட கால நிலைமைகளிலும், சிலவகை நம்பிக்கைகள், உதாரணமாக தெய்வ நம்பிக்கை முதலியவை, உழைக்கும் வர்க்கத்தைப் பாதித்திருந்தது போலவே சுரண்டும் வர்க்கத்தையும் பாதித்தே இருந்திருக்கின்றன. சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்தவர், இவ்வகை நம்பிக்கைகள் தம்மைப் பொறுத்த வரை பொய் என்பதாகவும், தாம் அடிமைப் படுதத விரும்பும் உழைக்கும் வர்க்கத்தை ஆள்வதற்காகவே, தாமும் இவற்றை நம்புவது போல வைத்துக் கொண்டு இருப்பதாகவும் அதற்காகவே கடவுள் நம்பிக்கை முதலியவற்றை மகிமைப்படுத்த கோவில் முதலியவற்றை ஏற்பாடு செய்வதாகவும் அவர்கள் கருதவில்லை.

இதிலிருந்து தெரிவது, வரலாற்று நிலைமைகள், இருவகை வர்க்கத்தினரையும கடுமையாகவே பாதித்திருக்கின்றன என்ற உண்மைதான்.

இன்னோர் உண்மை, சமயத்தையோ, மாபெரும் கலை இலக்கியங்களையோ தோற்றுவித்தவர்கள், பல சமயங்களில் ஆளும் வர்க்கத்தவராகவே இல்லை; இன்னும் சரியாகச் சொன்னால், சுரண்டி, உண்டு கொழுத்து வாழும் ஆளும் வர்க்கத்திடம் இத்தகைய படைப்பு ஆற்றலை நாம் எந்தக் காலத்திலும் எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆளும் வர்க்கமே நேரிடையாகச் சமயங்கள் முதலியவற்றை உருவாக்குவதில்லை; ஆளும் வர்க்கங்களின் சார்பில் பிற வர்க்கங்கள் இவற்றை உருவாக்குகின்றன என்று கூறப்படும் விளக்கமும் இருக்கவே செய்கிறது. ஆளும் வர்க்கத்துடன் சமய வாதிகளும், கலை இலக்கிய வாதிகளும் ஒன்றியிருந்ததைவிட வேறுபட்டுப் பகைத்திருந்த காலங்கள் பெரும்பாலும் அதிகமாகவே இருக்கின்றன. பல சமயங்களில் இவர்கள் வகுக்கும் சமய நெறியும் அறநெறிகளும் ஆளும் வர்க்கத்தையும் அவர்களது கொடுங்கோன்மை, ஆரவாரங்களை இகழ்வனவாகவே இருக்கின்றன. இந்தியச் சூழலில் திட்டவட்டமாகவே கூறிவிடலாம். துறவிகளுக்கும் மகான்கள் எனப்படுவோர்க்கும் இருந்த செல்வாக்குகள், அரசருக்கு நிகரானவை; அல்லது அதைவிட மேலானவை.

உதாரணமாக, புத்தரை எடுத்துக் கொள்வோம். இவர் எழுப்பிய கேள்வி, மனிதனுக்கு ஏன் நோய்கள், முதுமை, வறுமை, சாவு இருக்க வேண்டும் என்பது. கூறப்படும் கதையின்படி, புத்தர் ஆளும் வர்க்கம் சார்ந்தவராக இருந்த போதிலும், இவர் எழுப்பிய கேள்விகளுக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் நேரிடையான உறவைக் கூறமுடியாது. நிம்மதியாக, உறுதியுடன் சுரண்டலைக் கட்டி காத்து வரும் ஆளும் வர்க்கத்திலிருந்து புத்தரைப் போல ஒருவர் வெளியேறுவதோ, இத்தகைய கேள்விகளை எழுப்புவதோ தேவையில்லை.

ஆனால் இந்தக் கேள்விகள், மனிதன் தன்னைத்தானே புரிந்து கொள்ள, தன் வரலாற்றை விளங்கிக் கொள்ள, வரலாற்றைப் புரிந்து கொள்ள, உருவாக்க தேவையான கேள்விகள். இத்தகைய கேள்விகள் எழாமல், கூர்மையான

இந்தக் கேள்விகளால் மனிதர்கள் கடுமையாகப் பாதிக்கப் படாமல், பேய்த்தனமாக மனிதனைத் துரத்தும் இந்தக் கேள்விகளுக்கு விடை தேடி மனிதர்கள் கல்லிலும் முள்ளிலும் அலையாமல், பட்டினி, தற்கொலை முதலிய வற்றை ஏற்காமல், மனித சமுதாயம் வளரவே முடியாது. சுரண்டல் வர்க்கத்தின் கொடுமைகளால் பாதிக்கப் பட்டு, நோய்கள், வறுமைகள் முதலியவற்றுக்கிடையில் வாழும் மனிதர்க்கே அல்லாமல், உடமை முறையின் பல் வேறு வகையான சச்சரவுகள் முதலியவற்றாலும், சாவு, நோய், முதுமை முதலிய பிரச்னைகளாலும் பாதிக்கப்பட்ட ஆளும் வர்க்கச் சார்பு உடையவர்க்கும் இக்கேள்விகள் எழுவது நியாயமே. வர்க்கச் சமுதாய முறை, இரு வர்க்கத்த வரையுமே கடுமையாக பாதிக்கிறது என்று நாம் முன் கூறிய தன் உண்மை இதுதான். இத்தகைய கேள்விகள் ஆளும் வர்க்கத்தின் உடல்வகையிலான வசதியான வாழ்க்கையைத் துறந்து விட்டு எத்தனையோ பேர்களை காடுகளுக்கும், மேடுக ளுக்கும் எதிர் வர்க்கத்திற்கும் துரத்துகிறது. மனித உறவு சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்னைகள் தான் இரு சாராரையும் கடுமையாகப் பாதிக்கிறது. தத்துவம், பிரச்னைகள் என்று எழுபவை, மனித உறவுப் பிரச்னைகளின் போக்கிலா னவை தான்.

வரலாற்றின் இன்றியமையாத தேவையாகத் தோன்றிய தனிச் சொத்து, அரசு முதலியவை, இருவகை வர்க்கத்தை யும் ஆக்குவது போலவே அழிக்கவும், அலைக்கழிக்கவும் செய் கின்றன. அடிமைகளுக்குத் தளைகளைத் தயாரிப்பவர், அடிமை களுக்கான தளைகளைத் தயாரிப்பதிலேயே அடிமைப்பட்டுக் கிடப்பது போலவே, தனிச்சொத்து, அரசு முதலியவை களும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வெவ்வேறு வகையிலான துன்பங்களைத் தரவே செய்கின்றன. ஒரு வகையில் மனிதன் தானே உற்பத்தி செய்து கொண்ட இந்த நிலைமைகள், இவை தன்னை மனிதனுக்குவதற்கான தேவை என்பதனாலும் இந்த நிலைமைகளின் கட்டுப்பாடுகளைக் கடந்து செல்வதன் மூலமே மேலும் சிறந்த மனிதனாக முடியும் என்பதனாலும், இந்த நிலை

மைகளை ஏற்பவனாகவும் ஏற்காதவனாகவும் மாறுபட்டு நின்று போராடி வளர்கிறான் மனிதன்.

வரலாற்றில் மனிதன் இவ்வாறு இரண்டுபட்டதும் எதிர் எதிராகப் பிரிந்ததும், தனது எதிர் நிலைகளினுள்ளே தன்னை விட்டு வைத்திருப்பதும், எதிர் நிலைகளினோடு கூடிய இயக்கம் இல்லாமல் தனது வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமே வழியில்லை என்பதும் கவனிக்கத்தக்க, சிக்கலான, மேலான உண்மைகள்.

வரலாறு இப்படி, எந்த ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திற்கும், வர்க்கத்திற்கும் சொந்தமில்லாமல், அங்கங்கே தேங்கி விடாமல் வளர்ந்து வந்திருக்கிறது. வரலாற்றில் எதிர் எதிர் வர்க்கங்களுக்குள் பகுதி பகுதி உண்மை சிறைப்பட்டுக் கிடப்பதன் நுட்பத்தை உணர்தலே வரலாறுபற்றிய சரியான அறிவைப் பெறுதலாகும்.

வர்க்கப் பார்வை என்பது வரலாற்றுப் பார்வையிலிருந்து வேறுபட முடியாது. வேறுபடக்கூடாது. உழைக்கும் வர்க்கத்தின் பார்வையிலிருந்தே—அந்தப் பார்வையை ஒரு சார்பான பார்வையாகக் குறுக்கிக் கொண்டால் வரலாற்றை விளக்கிவிட முடியாது. வரலாற்றின் வளர்ச்சிக்கு இரு வர்க்கங்கள் தேவை என்பதும், இரு வர்க்கங்களினூடே வரலாறு வளர்கிறது என்பதும், நாம் ஒரு வர்க்கத்தின் மூலமே வரலாறு இயங்குகிறது என்று நம்பிக்கொண்டிருக்கும்போது அதற்கு எதிரான வர்க்கத்தை, வரலாறு தன் இயக்கத்திற்கு நமக்குத் தெரியாமல் தேர்ந்தெடுக்கிறது என்பதும், ஆளும் வர்க்கங்களும் வரலாற்றின் வளர்ச்சிக்கு அரிய சேவைகளைச் செய்திருக்கிறது என்பதும் மறுக்கவியலாத உண்மைகள்.

இப்படிப்பட்ட விளக்கம்தான் வரலாற்றுப் பார்வை; அதேசமயம் வர்க்கப்பார்வை. தற்கால நிலைமைகளில் பாட்டாளி வர்க்கத்தின் மூலம்தான் வரலாறு அடுத்த கட்டத்தை அடைந்தாக வேண்டும் என்ற உண்மை—அடிமைச் சமுதாயத்தில் அடிமைகளும் நிலவுடைமைச் சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கமும்தான் உழைக்கும் வர்க்கங்கள் என்று

கொண்டால்—எல்லாக் காலத்திலும் உழைக்கும் வர்க்கங்களே வரலாற்றை இயக்கின என்பதாகி விடாது. முதலாளி வர்க்கமும், நிலவுடைமை வர்க்கமும் குறிப்பிட்ட சில சூழல்களில் உழைக்கும் வர்க்கங்கள் தான். சோசலிசக் கால கட்டத்தில் பாட்டாளி வர்க்கமும் ஒரு குறிப்பிட்ட காலம்வரை சுரண்டும் வர்க்கமாக இருககத்தான் போகிறது.

இந்த நீண்ட விளக்கத்திலிருந்து நாம் முன்னர் எழுப்பிய பிரச்னைக்கு விடை காண்பது எளிதாகிறது.

வர்க்கச் சமுதாயத்தின் தோற்றத்திலிருந்தே தோன்றி வரும் இப்பிரச்னைகள் வெவ்வேறு வடிவங்களில் வர்க்கச் சமுதாய அழிவுக் காலம் வரை தொடர்ந்து வரவே செய்யும்.

இடையில் பகுத்துச் சொல்லத் தக்க நிலவுடைமைச் சமுதாயம், முதலாளியச் சமுதாயம் ஆகியவற்றின் நிகழ்வின் போது, வர்க்கச் சமுதாயத்தின் அடிப்படையான பிரச்னைகள் தொடரவே செய்கின்றன.

நிலவுடமைச் சமுதாயத்திற்கு, அது போலவே முதலாளியச் சமுதாயத்திற்கெனத் தனிப் பிரச்னைகள் இருக்கின்றன என்ற உண்மை, இவற்றினூடே உள்ள பொதுப் பிரச்னைகளை மறுக்கக் கூடியதல்ல.

சமயங்கள், கலை இலக்கியங்கள், கலாசாரங்கள் இவ்வகையிலேயே வர்க்கச் சமுதாயத்தினுள், காலத்திற்கேற்ற மாறுதல்களுடன் தொடர்ந்து நிலவுகின்றன.

வர்க்கச் சமுதாயத்தின் தோற்றத்திற்கும் முற்பட்ட காலத்திலிருந்த சில பண்புகளுடன் சமயங்கள் கலாசாரம் முதலியவை தொடர்பு கொண்டிருக்கின்றன. ஆகவே, இப்பண்புகள் வர்க்கச் சமுதாயத்தைக் கடந்தும் கூட நிலவுவதாக இருந்தால் வியப்பதற்கில்லை.

நாம் முன்பு விரிவாக விளக்கிய சமயத்தின் சார்மான பண்புகள் கலாசாரம், கலை இலக்கியப் பண்புகள் முதலியவை இத்தகையவை.

வர்க்க வேறுபாடுகள் தோன்ருத, மக்கள் ஒன்ருகக் கூடி வாழ்ந்த, தனியுடைமை தோன்ருத, மக்கள் தமக்குள் சகோத

ரத்துவததை இழக்காத அந்தப் பண்டைப் பொது உடமைச் சமுதாயத்தை, அந்தச் சமுதாய நடைமுறை மாறிய காலத்தில், அந்த உன்னதமான சமுதாயம் இடைக்காலத்தில் மாறிவிட்ட போதிலும்; எதிர்காலத்திலாவது அதனைச் சாதிக்க வேண்டும் என்பதைத் தன் உள்ளார்ந்த கருவாகக் கொண்டு, வர்க்கச் சமுதாய காலம் முழுவதும், அந்தக் கருவை, மோட்சமாக, முக்தியாக, இறைநிலையாகத் தமக்குள் உருமாற்றி மறைத்து வைததிருக்கும் சமயங்கள், நம்மால் சாதாரணமாக இகழ்ந்து ஒழிக்கத் தக்கவையல்ல.

பண்டைப் பொது உடமைச் சமுதாயத்தின் உன்னதமான இயல்புகளை வர்க்கச் சமுதாய கால நிலைமைகளுக்கேற்ற முறையில், கொடையாக, தியாகமாக, அன்பாக, நட்பாக, தாய்மையாக, ஓர் உலகக் கொள்கையாக, உயிர்களுக்கிடையில் சகோதரத்தன்மையாக உருவாக்கி, இக்குணங்களைக் காலந்தோறும் இடைவிடாமல் பிரசாரம் செய்து இப்பண்புகளின் செயல்பாட்டின் போதே, பேரின்பம் என்பதை எடுத்துக் கூறி, இப்பண்புகளைச் சமுதாய அளவில் சரிவரச் செயல்படுத்துவதற்கான தூண்டுதல்களைத் தந்தவை இடைக்காலத்தில் உருவான கலாசாரம், கலை இலக்கியங்கள்.

இவை மனிதனின் தோற்றத்துடன், ஆக்கத்துடன் இரண்டறக் கலந்தவை. இவ்வகையில், வரலாற்றில் சாகா வரம் பெற்றவை.

சமயங்களை— கலாசாரம், கலை இலக்கியங்களைப் பற்றிய நமது விமர்சனம் இவ்வகையில் சக்கையைப் பற்றியதாகவே இருந்துவிடக் கூடாது; சாரத்தைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகின் பிற பகுதிகளிலும் சமயங்களை, ஆளும் வர்க்கங்கள், முற்றிலும் தமக்கே சாதகமாக வளைத்துப் போட்டுக் கொள்ள முயன்றார்கள் என்ற உண்மை, ஆளும் வர்க்கங்களின் சார்பிலேயே சமயங்கள் தோன்றின, இயங்கின என்பதாகி விடாது. ஆளும் வர்க்கச் சார்பில் சமயங்களை இயக்கத் தொடங்கிய காலங்

களிலெல்லாம் சமயங்களின் எல்லைக்குள்ளிருந்தே ஆளும வர்க்கச் சார்புக்கு எதிராகக் கலகக் காரர்கள் கிளம்பியிருக் கிறார்கள். சாதிகளையும், சடங்குகளையும், சில சமயம் சமய வகை வேறுபாடுகளைக் கூட மறுக்கும் முறையில் சமயவாதி கள் வீறுகொண்டு எழுந்துள்ளனர். இது தவிர, சமுதாயத் தில் நடைபெற வேண்டிய அரசியல், பொருளாதாரம் சம்பந் தப்பட்ட தீவிரமான மாறுதல்களைக் கூடச் சமயவாதிகள், தமது சமய நெறியிலேயே ஏற்றிருக்கவும் செய்திருக்கிறார் கள். இது போலவே கலாசாரம் தன்னைத் தானே நெகிழ்த் துக் கொள்வதன் மூலம், எல்லாரும் எல்லாம் பெறும் உயர் நிலை நோக்கி இயங்கக் கூடியதாகவே இருக்கிறது. கலை இலக் கியங்களைப் படைத்த இராமன், கண்ணன், கண்ணகிகள் முதலியவர் கம்யூனிச சமுதாயம் நோக்கி நம்மைத் தள்ளக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். இந்தியச் சமயங்கள் எழுப்பிய தத்துவக் கேள்விகள், மார்க்ஸியத் துடன் இடையறாத உறவுடையவை.

மனிதனைப் பிரபஞ்ச அளவில் வைத்துப் பார்த்த சமய ஞானத்தின் செழுமையான, சரியான தொடர்ச்சியாகவே மார்க்ஸிய தத்துவம் இயங்குகிறது. மனித மனத்தை அன்பு, பண்பு முதலிய நன்னெறிகளின் மூலம் சமுதாய அளவில் உலகளவில் விரிக்க முயன்ற கலாசாரச் செழுமையின் தொடர்ச்சியாகவே மார்க்ஸிய சமுதாய இயல் இடம் பெறு கிறது. கொடுங்கோலர்களையும் குறுகிய வாழ்க்கைச் சூழல் களையும் கடுமையாகச் சாடித் தகர்க்கும் நாயகர்களை உரு வாக்கிய கலை இலக்கியங்கள், மார்க்ஸிய நோக்கிலான சமுதாய அமைப்புக்கான நிகழ்காலத் தூண்டுதலாக நிச்ச யம் இருக்க முடியும். இந்திய வாழ்க்கை தன்னைத் தானே வளமான வாழ்க்கையாக்கிக் கொள்ள மார்க்ஸியம் இந்தியச் சூழலின் உள்ளார்ந்த தத்துவமாகப் பரிணமிக்க முடியும்.

இப்படிக் கூறி இக்கட்டுரையை முடிக்கலாம்: சமயங் களும் மார்க்ஸியமும் இணையாமல் இருப்பது கூட இன்றைய ஆளும் வர்க்கங்களின் நோக்கமாக, முயற்சியாக இருந்தால் வியப்பில்லை. இதற்கு மார்க்ஸிய வாதிகளே பலியாகிவிடக் கூடாது.

முகப்பு ஓவியம் p கிருஷ்ணமூர்த்தி

பிழை — திருத்தங்கள்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
iii	3	சுழலில்	சூழலில்
20	25	அச்சிரமங்களை	அக்கிரமங்களை
28	3	இணையு	இணையபு
32	13	இப்படி	இப்படி இருப்பதற்காக
50	12	கண்ணோத்தின்	கண்ணோட்டத்தின்
64	15	செய்கின்றனர்	செய்திருக்கின்றனர்
68	8	சட்டத்தில்	கட்டத்தில்
71	12	சட்டத்தில்	கட்டத்தில்
	13	சட்டத்தில்	கட்டத்தில்
	15	சட்டத்தில்	கட்டத்தில்
83	30	விளங்கிக் கொள்ள	சமுதாய வரலாற்றை விளங்கிக் கொள்ள
85	32	வரியுடன் சேர்க்க:	பண்ணை அடிமைகளும், முதலாளியச் சமுதாயத்தில்

